IATA
SKY WINGS LTD
TRAVEL & TOURS
"WHERE THE SUN NEVER SETS"
Cheapest Worldwide Fares with the Best Service
We are authorised main agents for Srilankan, Jet Airways, Qatar, Kuwait, Oman...
Reservation: Mob: 07850876921
02086729111
We accept all major credit cards
Colombo £170 + Taxes
Visa Service to Srilanka, Australia, India & USA
119,Tooting High street, London, SW17 0SY

BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

# ORU PAPER

FREE

PAPER - 09 ♦ ISSUE - 191 ♦ FRIDAY 05 APRIL 2013

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லயைா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
- Personal injury (Neck,Back & Shoulder Pain)
- Replacement Vehicle (Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




Krishna Fancy & Video
- இந்தியன் பேன்ஸி ஜீவல்லரி
- பார்ட்டி டெக்கரேசன்
- மணப்பெண் அலங்காரம்
- தென் இந்திய மலர்கள்
- டெய்லரிங், போன்கார்ட்
- பேக்ஸ் – ஜெராக்ஸ்
- விமான டிக்கெட்டு
- ஆடியோ – வீடியோ
- [தமிழ் – மலையாளம்]
- செய்தித்தாள்கள் [தமிழ்–மலையாளம்]
மல்லிகைப் பூ Special Offer 80p Only
Tel: 0208 684 9835
307, London Road, Croydon, CR0 3PA
Fax: 0208 683 0852 | Mob: 07725869630

அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!!!
ABI TEXTILES
புதுவருடத்தை முன்னிட்டு சிறப்புத் தள்ளுபடி
கண்ணைக்கவரும் சேலைகள் ராசியான கூறைப்புடைவைகள் மற்றும் அனைத்து விதமான சேலைகள், சிறுவர்களுக்கான உடைகள் என அனைத்தையும் தரமாகப் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்
Come today and let us help you look your Best
மாபெரும் சலுகைகளைத் தவறவிடாதீர்கள்
Tel: 02086848611 - Mob: 07852286602
556, Mitcham Road, Croydon, CR0 3AA

வியாபாரத்தில் நிறைந்த போட்டி,
குறைந்த வாடிக்கையாளர்,
விற்பனை வீழ்ச்சியா ?
நிவாரணம்?
Smart Mirrors
For further details refer page 02
Market River Your Partner in Progress
02085457402
www.marketriver.co.uk

குழந்தைப் பாக்கியம் கிடைக்காதோர்
வாழ்க்கைக்கு ஒளியூட்டுங்கள்!
நீங்கள் 35 வயதுக்குள் இருந்தால் கருமுட்டை தானம் செய்து அதற்கீடாக '£750' ஐ அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளுங்கள்
குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HARLEY STREET FERTILITY CLINIC
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
43 Devonshire Street, London, W1G 7AL
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

சென்னையிலிருந்து UK விசா
- தொழிலாளர் விசா
- தங்கியிருக்கும் விசா
- மாணவர் விசா
- சுற்றுலா விசா
இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்
UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors
115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk

இலண்டனில் மிகக்குறைந்த வீதத்தில் நகை அடைவு பிடிக்கும் ஒரே நிறுவனம்
SRI SOOBANA JEWELLERS
Pawn Broker
புதுவருட Offer !! April 1st இருந்து
வட்டி வீதம் 2.49% - 2.99%
On any condition gold
மேலும் பல சலுகைகள்... தவற விடாதீர்கள்
அனைத்து வகையான தங்க நகைகளும் அடைவு பிடிக்கப்படும்
Tel: 020 8900 9009, 020 8900 9000
194 Ealing Road, Wembley, Middlesex, HA0 4BP
web : www.srisoobana-jewellers.com

**United College** முதன்மை குடியுரிமை பெறும் பரீட்சைகள்



## Our services:

- ESOL with citizenship
- Point Base Test
- Spouse Visa Test
- Multilingual Staff

You Pay Only Once,
We Train You until You Pass

பிரித்தானியா பற்றிய விடயங்களை ESOL பயிற்சி மூலமும் குடியுரிமை வகுப்புக்கள் மூலமும் அதியுச்ச பயிற்சி வழங்குகின்றோம்.

சனி மற்றும் ஞாயிறுகளிலும் வகுப்புக்கள் உண்டு.

**C1, B1 & B2 Test**

நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்- மேலதிக கட்டணம் இல்லை

உங்கள் பரீட்சைக்கு தயார் படுத்தும் வகுப்புகளுக்கு | £ 150 .00 மட்டுமே * Including Everything | Certificate only in six days | இங்கே சனி 10.00 மணிக்கு ESOL வகுப்புக்கள் உண்டு

**Head Office - Croydon**
14 Lombard Business Park, 2 Purley Way,
Croydon CR0 3JP.
Tel: 0208 1509 953 | 0753 8933 261

**West London**
38A, The Broadway, Southall, UB1 21PT
Tel: 0207 998 4867
Mob: 0741 5882 072

# வாடிக்கையாளர் கண்களைக் கவரும் கவனத்தினை ஈர்க்கும் செய்திப் பலகை

# Smart Mirrors



in different sizes
With 48 modes and seven colours
**LED flashing writing board**

## Market River Ltd.

Market River
Your Partner in Progress

No: 8 Lambard Road,
Wimbledon, London
SW19 3TZ, UK
T: 02085457402

Mobi. 07852459263
Mobi. 07711402898
www.marketriver.co.uk
info@marketriver.co.uk

# Jey satellite

## Digital Aerial and free view Installation

Freeview
CCTV இணைப்பும் பொருத்தித் தரப்படும்
digital

No call out charge
Same day service
Full uk coverage

**Contact: 07932 251 851 - 07539228813**

REFRIGERATION - AIR CONDITION - SHOP FITTING

# UK COOL
AND SHOPFITTING Ltd.

168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk

UK COOL & SHOP FITTING LTD

**REFRIGERATION**
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

**SHOP FITTING**
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

**BUILDING WORK**
Roofing
Extension

**MOVING & DEVILERY**

7 Days 24 HRS services & Repair

URGENT REPAIR? CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY

அனைவருக்கும் இனிய சித்திரைப் புதுவருட நல்வாழ்த்துக்கள்!

# SRI KANTH & CO SOLICITORS



We practise in the following areas of law:

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing – Commercial
- Landlord & Tenant
- Property Sale & Letting
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

557 High Road, Wembley, Middlesex, HA0 2DW
www.srikanthsolicitors.co.uk
Tel: 020 8795 0648 Mob: 07831 195 979
Fax: 020 8795 0649

# ESOL with Citizenship Test

- ஆங்கில எழுத்து, வாசிப்பு அறிவு அவசியம் இல்லை
- Certificates within 6 days / சான்றிதழ்
- for British Citizenship / பிரித்தானியா பிரஜாவுரிமை
- for Permanent Residency / நிரந்தர வதிவிடவுரிமை

## Personal Licence £ 235 *

- (மதுபானம் விற்பதற்கான) ID எடுத்துத் தரப்படும்

Tuition classes for 11+, GCSE & A' Level

தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
* Croydon * Barking

Tel: 020 3239 2187
0740 287 1921




## ஊதிக்கெடுக்காமல் இருங்கள்..

ஆசிரியருக்கு,

ஈழ மக்களின் உரிமைக்காக போராடும் தமிழக மாணவர்களின் நிகழ்ச்சி நிரலில் வன்முறை வெடித்துவிடுமோ என்ற அச்சம் தமிழ் உணர்வாளர்கள் மத்தியில் உருவாகிவிடும் பிரதிபலிப்பை கட்டுரைகளில் காணக் கூடியதாக இருந்தது. மாணவர்களை அரசியல் கட்சிகள் ஆக்கிரமித்து விடாமல் இருப்பதில் மிகத்தீவிரமாக இருக்கும் மாணவர்கள். போராட்ட ஒருங்கிணைப்புக் குழு, இவ்விபரீத அணுகுமுறையில் அவதானமாக இருக்குமென்பதில் எவரும் ஐயப்படத் தேவையில்லை. ஊதிக்கெடுக்காமல் இருந்தாலே போதும்.

*- உமா மகாலிங்கம்*

## தி.மு.க. சல்மா லண்டனுக்கு வருகிறார்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரச்சார பீரங்களில் ஒருவரும், 'காலச்சுவடு' பிராமணிய சஞ்சிகையினால் முதன்மைப் படுத்தப்படுபவருமான சல்மா என்ற எழுத்தாளர் லண்டனில் நடைபெறும் ஒரு கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக வருவதாக அறிகிறேன். அவரை எங்களது ஊடகங்கள் செவ்வி கண்டு, தி. மு. க வின் ரெசோ மற்றும் ஈழத்தமிழர் தொடர்பான நிலைப்பாட்டை அறியலாம்.

*- அமுதன்*

## கேடு கெட்ட பிறப்புகள்...

ஐ.பி எல்.லில் இலங்கை வீரர்கள் விளையாடினால் சென்னையில் அதை அனுமதிக்க மாட்டேன் என்று சொன்னவர் தமிழ் நாடு முதல் அமைச்சர்,செல்வி ஜெயலலிதா..

அதே ஐ.பி.எல்.லில் ஒரு சிங்கள இனத் துவேசியான குமார் சங்ககாராவை தலைவராக வைத்திருப்பவர். கருணாநிதியின் பேரன் கலாநிதி மாறன். யதார்த்தங்களின் பரிமாணங்களை புரிந்து கொள்ளுங்கள் அன்பர்களே.. இங்கே பேசுவது பணம்! 400 கோடி ரூபா வருமானம் தரும் இலங்கைக்கான வான்வெளி பயணத்தில் விமானங்களை ஈடுபடுத்தியுள்ளவர் கருணாநிதியின் பேரன். இதைவிட இலங்கைத் தொழில் நிலையங்களில் சுமார் 4000 கோடி முதலீடு செய்திருப்பவரும் கருணாநிதியின் பேரன் தான்.. இவர்களா தமிழ் இனத்தின் காவலர்கள்? இவர்களா..டெசோ அமைப்பினர்? இவர்களா தி.மு.கவினர்?. கேடு கெட்ட பிறப்புகள்.!

*- வேலு*

## மீன்களுக்கும் குருவிகளுக்கும் வாழ்விடமா?

சீனாக்காரனின் காசில் கட்டிய அம்பாந்தோட்டை துறைமுகத்திலை மீனும், அண்மையில் திறந்த மத்தள சர்வதேச விமான நிலையத்தில் குருவிகளும் பிடிபடுகிறதாம். முல்லைக்கு தேர்கொடுத்த பாரியை போல் மகிந்த மீனுக்கு துறைமுகமும், குழுவிற்கு விமான நிலையமும் கட்டிக் கொடுத்திருக்கிறார். எம்மாம் பெரிய ஆளப்பா இந்தாள்.

*இணுவை இரங்கன்*

## பிக்குவுக்கு அடித்த அடி

எமது முழு முதற் கடவுள் சிவபெருமான், செம்மனச்செல்விக்காக பிட்டுக்கு மண்சுமந்தபோது, அவருக்கு விழுந்த அடி எல்லா உயிர்களுக்கும் விழுந்ததாம். அதுபோல் தமிழ் நாட்டில் பிக்குகளுக்கு விழுந்த ஒரு அடி எல்லாத் தமிழர்களிலும் விழுந்திருக்கிறது போல் தெரிகிறது. லண்டன் தமிழ் அமைப்புகளின் அறிக்கையையும், அலசுவாரத்தையும் படித்தால் அப்படித்தான் எனக்கு தெரிகிறது.

*- அழகானந்தன்*

## சாது மிரண்டால்

சம்பந்தன் ஐயா அவர்கள் அண்மையில் ஒரு கூட்டத்தில் உரையாற்றும் போது "தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் நிலங்களை ஆக்கிரமிப்பதையும், அவர்களை அச்சுறுத்தும் விதத்தில் அராஜகங்கள் புரிவதையும் அரச படைகளும், சிங்கள மக்களும் உடன் கைவிட வேண்டும். இல்லையேல் வீண் விபரீதங்களைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும்' என்று பேசியிருக்கிறார். சிங்கக்கொடியின் நாயகன் ஐயாவிற்கு கோபம் வந்தால் என்ன நடக்குமோ?

*குணாகரன்*

## அமெரிக்கப் பிரேரணை

அமெரிக்கப் பிரேரணை எரிக்கப்பட்டது எமது அதிருப்தியின் வெளிப்பாடுதான். இப்போ அது ஐ நா வின் தீர்மானம். நிச்சயம் இனவாத அரசு அதில் கவனம் செலுத்தப் போவதில்லை. இதனால் எங்கள் பக்கம் உள்ள நியாயம் மேலும் உலகின் கவனத்தை ஈர்க்கும். மௌலி சொல்வது போல் அடுத்த முறையாவது தலைவர்கள் என்று தலைப்பாகை போட்ட கூட்டம் உருப்படியாக ஏதாவது செய்ய முயற்சிக்குமா?

*- குமணன்*

## மாணவர் போராட்டம்

தமிழ் நாட்டின் மாணவர் போராட்டம் கண்டு வியந்தேன். சத்தியமாச் சொல்லுறேன் அரசியலைப் பொறுத்த மட்டில் அது ஒரு செம்மறிக் கூட்டம் என்பதே எனது விவேகமற்ற கணிப்பாக இருந்தது. இப்படி நெருப்பாக மாற அவர்களால்தான் முடியும் என்று சொல்ல வைத்து விட்டார்களே! எலியென உம்மை இகழ்ந்த என்னைப் போன்றோரை தலைகுனிய வைத்து விட்டீர்களே!

*- ரஜீவன்*

## உங்களுக்கு வந்தா இரத்தம், எங்களுக்கு வந்தா தக்காளி சட்னியா?

ஐ.பி.எல் போட்டிகளில் சிறிலங்கா அணியை சேர்ந்தவர்கள் பங்குபற்றுவதற்கு தமிழர்கள் தெரிவிக்கும் எதிர்ப்பை பொலிட்டிக்கல் ரேசிசம் என்றும் ரீஜினல் சாவனிசம் என்றும் விமர்சிக்கிறார்கள். விளையாட்டை விளையாட்டாக பார்க்க வேண்டுமாம், விளையாட்டில் அரசியலை கலக்க கூடாதாம் என்றெல்லாம் இலங்கைக்கு வக்காலத்து வாங்கி வேதம் ஓதும் இவர்கள் தான் பாக்கிஸ் தான் வீரர்களை ஐ.பி.எல். லில் சேர்க்காமலும் பாக்கிஸ்தானோடு பல ஆண்டுகள் கிரிக்கெட் விளையாடாமலும் தேசபக்தியை காண்பிப்பவர்கள்.

*- நல்லுசாமி*

## ஊடக அடக்குமுறைக்கு எதிராக கூட்டமைப்பு

உதயன் பத்திரிகை பணியகம் மீதும், அதன் பத்திரிகையாளர்கள் மீதும் சிறிலங்கா புலனாய்வாளர்கள் நடாத்திய தாக்குதல்கள் கண்டிக்கப்பட வேண்டியவைதான். இதில் வேறெந்த கருத்துக்கும் இடமில்லை.

கொழும்பு தமிழ் பத்திரிகைகளிலும், தங்களது உதயன் பத்திரிகையிலும் மற்றய அரசியலமைப்புகளுக்கு ஆதரவான செய்திகள் வராமல் கட்டுப்படுத்துகிற கூட்டமைப்பு ஊடக சுதந்திரம் பற்றி பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. லண்டனில் கூட்டமைப்பு நடாத்திய கூட்டத்திலும் புலம்பெயர் நாட்டு தமிழ் ஊடகங்கள் பற்றி பொரிந்து தள்ளினார்கள்.

*- ரமேஸ்*

*கருத்துக்களுக்கு : Tel : 020 7043 4314*

# நிலைத்தகவல்

LLRC அடிப்படையிலான ஜெனிவா தீர்மானத்தை சிறீலங்கா அரசு நிறைவேற்றத் தொடங்கிவிட்டது ?

நேற்று : கூட்டமைப்பு அரசியல்வாதிகள் மீதும் பொதுமகக்ள் மீதும் சரமாரியான தாக்குதல்

இன்று : உதயன் பத்திரிகை அலுவலகம் மீதும் பணியாளர்கள் மீதும் சரமாரியான தாக்குதல்

நாளை : ???

இப்போதே கண்டுபிடித்து சொல்பவர்களுக்கு 'ஜெனிவா தீர்மானத்தின்' பிரதி அன்பளிப்பாக வழங்கப்படும். நீங்களும் வெல்லலாம். பிரதிக்கு முந்துங்கள்..

❖ ❖ ❖ ❖

இந்திய கொள்கை வகுப்பாளர்கள் போல முட்டாள்கள் உலகத்தில யாரும் கிடையாது.. ஒரு நாட்டின் கொள்கை வகுப்பாக்கம் தூர நோக்கில் இருக்க வேண்டுமேயொழிய சமகால நிகழ்வுகளை முன்வைத்து பழிவாங்கும் - மறுத்தான் கொடுக்கும் கொள்கைவகுப்பாக்கம் அதன் பாதுகாப்புக்கும் ஸ்திரத்தன்மைக்கும் உதவாது என்பது வெளிவிவகார கொள்கை வகுப்பாக்கம் சொல்லும் எளிய பாடம்.

❖ ❖ ❖ ❖

ஐ.நா சாசனத்தின்படி நாடுகள் என்ற உள் வெளி எல்லைகளுக்கு அப்பால் ஒரு இனத்தின் மொழி, அடையாளம், பண்பாடு, இறைமை என்பவை பாதுகாக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. முள்ளிவாய்க்காலில் இனம், மொழி, பண்பாடு, நிலம் என்ற அடையாளங்களின் மீதான அழித்தொழிப்பே மனித உயிர்களாகக் காவு கொள்ளப்பட்டது. இது இந்தப் பூமி பந்தில் வாழும் ஒரு இனம் தொடர்பான ஐநாவின் சாசனத்திற்கு முரணானது.

வன்னியில் நடந்தது இன அழிப்பா என்று கேட்பவர்களுக்கு..

❖ ❖ ❖ ❖

யாழ்மண்ணில் சில நாட்களுக்கு முன்பு நடந்த 'கிறிஸ்துவின் பாடுகள் மரணம்' பற்றிய மேடைநாடகம் லழரவரபடிந இல் இருக்கிறது.எமது மக்களை பற்றியும் அவர்களது விடுதலை உணர்வுகளையும் பற்றி எத்தனை பொய்கள், புனைவுகள் அதை எல்லாம் தகர்த்தெறிகிறது இந்த மேடை நாடகம். உண்மையான கலைஞர்களாக தமது விடுதலை உணர்வை எப்படி ஆக்கிரமிக்கப்பட்ட மண்ணில் நின்று நுட்பமாக வெளிப்படுத்துகிறார்கள் என்று கவனியுங்கள். அவர்களது வசனத்தையும் பேச்சையும் கேட்டு மக்கள் எழுப்பும் கரகோசங்களை கேளுங்கள். புலம்பெயர் தமிழர்களும் தமிழகத் தமிழர்களும் தான் தேவையில்லாமல் போராடுகிறார்கள் என்ற வெற்று கூச்சலுக்கு இந்த கலைஞர்களும் மக்களும் தமது பதிலை சொல்லியிருப்பதாகவே நாம் கருதுகிறோம்.

இனியாவது விடுதலை உணர்வற்று தாயக மக்கள் என்ற இருக்கிறார்கள் என்ற வெற்று கூச்சலை நம்பாது தொடாந்து போராட உறுதியெடுங்கள். இது நாம் தொடாந்து போராட அவர்கள் தந்த அங்கீகாரம் இது.

*கிருஸ்ணா*




TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400
Head Office: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow TW4 6JQ
0207 099 2400

➡ESOL with Citizenship
▪ British Passport/ Naturalisation
▪ Indefinite Leave to Remain

➡International ESOL Diploma (A1,A2,B1,B2,C1,C2)
▪ Student Visa / Extension Test
▪ Spouse Visa / Extension Test
▪ Work Permit / Extension Test




▪ Courses from £200
▪ Successfully trained over 35,000 students
▪ Certificates within 20 days
▪ Multilingual staff
▪ City & Guilds approved centre

National Centres

| | | |
|---|---|---|
| BIRMINGHAM<br>7 Washington Street<br>Birmingham<br>B1 1JR<br>01216339919 | SHEFFIELD<br>Sorby House<br>42 Spital Hill, Sheffield<br>S4 7LG<br>01143034303 | LEICESTER<br>Imperial House<br>St Nicholas Circle, Leicester<br>LE1 4LF<br>01163260248 |
| LUTON<br>169 A, Dunstable Road<br>Luton.<br>Beds – LU1 1BW<br>01582723123 | SLOUGH<br>18-24 Stoke Road<br>Slough, Berkshire<br>SL2 5AG<br>01753722056 | NEWCASTLE<br>51-52 Victoria Avenue<br>Whitley Bay,Tyne & Wear<br>Newcastle Upon Tyne – NE26 2BA<br>01912525265 |

FREE INITIAL ASSESMENT

London Centres: Hounslow, Wembley, Kenton, Whitechapel, Camden, Holloway.

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, APRIL 05, 2013, ISSUE 191

## மாகாண சபை தீர்வாகாது!

பதின்மூன்றாம் திருத்தச்சட்ட மூலத்தின் வழியாக அமைக்கப்பட்ட மாகாண சபை முறைமையை ஒரு அரசியல் தீர்வாக தமிழ் மக்கள் என்றுமே ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத் திற்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் மாகாணசபை பற்றி பேசப்படவில்லை. இவ்விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு வேறுபட்டதாக அமையமுடியாது. ஏனெனில் மாகாணசபை முறையை முழுமையாக ஏற்றுக் கொள்வதாக அவர்கள் இதுவரை அறிவிக்கவில்லை. கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டபோது, மாகாண சபைக்கு உள்ள மட்டுப்படுத்தப் பட்ட அதிகாரங்கள் கூட தவறானவர் கரங்களில் வீழ்ந்துவிடக் கூடாது என்பதனா லேயே தாம் போட்டியிட்டதாகக் கூறினர். இதே அடிப்படையில், இப்போது வட மாகாணசபைத் தேர்தலிலும் அவர்கள் போட்டியிடத் தயாராகுகிறார்கள்.

இலங்கைத் தீவில் அமைதி திரும்பவேண்டும் எனக் கூறிவருகிற மேற்கு நாடுகளும், இந்தியாவும் மாகாணசபையை முன்னிறுத்திய அதிகாரப்பரவலாக்கத் திற்கு அப்பால் வேறெந்தத் தீர்வு பற்றியும் பேச்செடுப்பதை தவிர்த்து வருகின்றன. தமிழ் மக்களுக்கு சுயாட்சி அலகு வழங்கப்படவேண்டும் எனக் குறிப்பிடும் இராச தந்திரிகளும், அமைப்புகளும் மாகாணசபையை வைத்தே அவ்வாறு குறிப் பிடுகிறார்கள் எனக் கருத வேண்டியுள்ளது. இதனை உறுதி செய்யும் வகையில் கடந்த மாதம் ஐ.நா. மனிதவுரிமைச் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்திலும், வடக்கு மாகாணசபைத் தேர்தலை வரும் செப்ரெம்பரில் நடாத்தப்படவிருப்பதாக சிறிலங்கா அரசாங்கம் வெளியிட்ட அறிவிப்பினை வரவேற்பதாகத் குறிப்பிடப் பட்டிருந்தது.

மாகாணசபைகளை அரசியல் தீர்வாக மேற்கு நாடுகள் ஏற்கையில், அதனை எதிர்ப்பதுபோல் சிறிலங்கா அரசாங்கம் பாவனை காட்ட ஆரம்பித்துள்ளது. வட மாகாணசபைத் தேர்தல் நடைபெற்றால் அது தனிநாட்டுக்கு வழி சமைப் பதாக அமைந்து விடும் என சிங்கள கடும் கோப்பாளர்கள் கருத்து வெளியிடு வதும், இது விடயத்தில் கோத்தாபாய தெரிவிக்கும் கருத்துகளும் சிறிலங்கா வின் கபடத்தனத்தை வெளிக்காட்டுகின்றது. இன்னொருபுறத்தில் 'தெவிநெகும' சட்டத்தின் மூலம் மாகாணசபையின் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களையும் தட்டிப்பறித்துள்ளார் பசில் இராஜபக்ச.

இந்நிலையில் மாகாணசபை மற்றும் பதின்மூன்றாம் திருத்தம் என்பவற்றை நிராகரிக்கும் தமிழ் மக்களின் கருத்தை, தமிழ் தேசிய மக்கள் முன்னணி போல் கூட்டமைப்பும் அதன் ஆதரவுச் சக்திகளும் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*ஏப்பிரலும் வந்திட்டுது, குளிர் போறபாடாய் தெரியேல்லை என்று எரிச்சல் பட்டுக் கொண்டிருக்கிற ஆட்கள், வர வர உங்கடை பேப்பர் ஒரு அரசியல் பேப்பர் போலை மாறி வருகுது, என்னப்பா இது எந்தப் பக்கத்தை திறந்தாலும் அரசியல் தான் எண்டு புறணி சொல்லுகினம். உண்மைதான், தமிழகத்திலை மாணவர்கள் போராடேக்கிள்ளை, ஐ.நா. மனிதவுரிமைச் சபையிலை பிரகடனம் கொண்டு வரக்கிள்ளை நாங்கள் சிரிப்பு காட்டிக் கொண்டிருக்கேலாது எண்டு சொல்லி நாங்கள் தப்பிக் கொள்ளலாம். உங்கடை விருப்பம் எங்களுக்கு விளங்குது, ஆனால் நாங்கள் வைத்துக் கொண்டோ வஞ்சகம் பண்ணிறம்? எங்களுக்கு ஆக்கங்களை அனுப்பிற ஆட்கள் அரசியலைத்தானே எழுதுகிறார்கள். அண்ணை அரசியலை விட்டு விட்டு வேறை எதையாவது எழுதுங்கோவன் எண்டு சொன்னால், ஒண்டு இரண்டு கட்டுரை அப்பிடி எழுதிப் போட்டு திரும்ப அரசியல் எழுதத் தொடங்கி விடுகிறார்கள். நாங்கள் என்ன செய்யிறது?*

*உங்கடை கட்டுரைகளிலை ஒண்டை எழுதிறியள் ஆனால் அதுக்கு நேரெதிராக கார்ட்டுன் போடுகிறியள் எண்டும் சிலர் குறைப்பட்டார்கள். அது மெய்தான் கேலிச்சித்திரக்காரர்களுக்கு அவர்களின்ரை கருத்தை வெளிப்படுத்திறதிற்கு சுதந்திரம் இருக்கிறது. நாங்கள் இதைத்தான் கீறித்தாங்கோ எண்டு அவையளிட்டை சொல்லுறதில்லை. கழுதை மாதிரி கார்ட்டுனிஸ்ட் கீறினால், என்னை நீங்கள் கழுதை எண்டுறியளோ எண்டு அதை மெய்ப்பிக்கிறது போல கழுதை மாதிரி கனைக்காதேங்கோ! தயவு செய்து இதுகளை கொஞ்சம் sense of humor உடன் பாருங்கோ.*

*எள்ளல் மொழியிலை பேசுகிறதுதான் எங்களுக்கு பிடிக்கிறது உங்களுக்கும் பிடிக்கும் எண்டுதான் நம்பிறம். இல்லையெண்டால் இத்தினை வருசமாய் எங்களுக்கு ஆதரவு தந்திருப்பியளோ? எள்ளல் சரி, இங்கிதத்தையும் கொஞ்சம் கவனியுங்கோ எண்டு சொல்லுறவர்களுடன் உடன்படுகிறோம். பூராயத்திற்கு விசயங்களை அனுப்பிறவை இதைக் கொஞ்சம் கவனத்திலை எடுங்கோ! ஆட்களை துரோகி, அந்த ஏஜன்ட், இந்த ஏஜன்ட் எண்டு திட்டுறதை இனி பிரசுரிக்கிறதில்லை எண்டு முடிவெடுத்திருக்கிறம்.*

*ஒரு பேப்பரில் ஆங்கிலப் பக்கங்களை கூட்டுங்கோ எண்டு சில ஆட்களும், அதை யார் வாசிக்கிறது குறையுங்கோ எண்டு வேறை சில ஆட்களும் எங்களுக்கு ஒசியாய ஆலொசனை சொல்கிறார்கள். இது சம்பந்தமாக நீங்கள் என்ன நினைக்கிறியள் எண்டதை எங்களுக்கு அறியத்தாருங்கோ! அதன்படி நாங்கள் முடிவெடுக்கிறம்.*

*வேறை என்ன?*

*அடுத்த பேப்பரிலை சந்திப்பம்...*

***ஒரு பேப்பர்** காரன்கள் + காரிகள்*

# Beyond Geneva...!



**Editorial Tamil Gurdian**

The UN Human Rights Council resolution on Sri Lanka last week rightly invoked mixed sentiments. On the one hand, the passing of the second resolution in two years and the advocacy efforts that accompanied it underlined that Sri Lanka remains firmly on the international agenda and that the coalition of state and non-state actors pursuing accountability for the slaughter of tens of thousands and continuing rights abuses is expanding. On the other hand, the quest for consensus on the Council, and in particular the support of India, resulted in a significant weakening of the resolution's force and the introduction, as Delhi's pound of flesh, of elements deeply antiethical to the goals of accountability and justice, and injurious to the political aspirations of the Tamil nation.

For these reasons the resolution has elicited a range of Tamil responses, from a disgusted rejection to an enthusiastic welcome. Across the various responses, however, there is clear agreement on two things: that accountability for the mass killings of 2009 is a foremost demand of the Tamil people, and that this can only be secured through decisive international action. The futility of the Council's call on the Sri Lankan government to investigate the systematic atrocities committed by its forces, and its extending of another chance to do so, is well recognised by all those campaigning for accountability, as well as by Sri Lanka's allies. It is aptly captured by the title of Amnesty International's 2009 study of Sri Lanka's history of sham inquiries: 'Twenty years of make believe'. As underlined by Colombo's hysterical rejection of even this flawed resolution, only an independent international investigation can ensure genuine and credible accountability. As such, the gains of the diplomatic horse-trading in Geneva are Sri Lanka's, but the price will be paid by the Tamils in the island.

As India, Britain and other members of the international community will discover, no amount of 'friendly gestures' will secure the cooperation of a nationalist, triumphant and paranoid state.

The UNHRC resolution is but a moment in the protracted struggle to ensure accountability and justice for some of the worst mass atrocities of this century. As the United States Ambassador to Sri Lanka, Michele Sison, put it, "life does not stop on 21 March." In that sense, the events of the past few weeks hold a number of important lessons. Firstly, it is clear that support for the goal of accountability for Sri Lanka's genocidal violence against the Tamils is growing across the world. Nowhere is this more demonstrable than in India, whose government did the most to shield Sri Lanka in Geneva. The spontaneous mass protests by university students, the efforts of Tamil Nadu's major political parties, the coverage by the country's mainstream media and the voices of many others reveal the depth of support. Moreover, as Tamil and international campaigners in Geneva found, the resolution has the support of many countries, including some not presently on the Council. In short, international action has more popular support than ever before.

Secondly, however, the search for a multilateral international effort on accountability cannot be pursued solely through the UNHRC or other fora that accord Sri Lanka's allies de facto vetoes. Rather, as we argued ahead of the 22nd session, the international community should now also actively explore other mechanisms and modalities. International institutions are not necessary for acting in concert.

Meanwhile, as demonstrated again in Geneva this year, even when fully cognisant of the horrific atrocities inflicted on the Tamil people, even states espousing principles of democracy, liberal values and the rule of law will readily sacrifice these in tactical, if mistaken, calculations. India and Australia are examples. As Australia and other 'receiving' states will see, refugee flows will not be stemmed by 'security' collaborations with murderous regimes. As India, Britain and other members of the international community will discover, no amount of 'friendly gestures' will secure the cooperation of a nationalist, triumphant and paranoid state.

As underlined by Colombo's hysterical rejection of even this flawed resolution, only an independent international investigation can ensure genuine and credible accountability.

Sri Lanka well knows the campaign for accountability will never cease and neither will the Tamils reconcile themselves to Sinhala hegemony, no matter how intense the repression. And, as has been the case from the outset in the seventies, it is Sri Lanka's repression that will continue to ensure Tamils' aspiration for independent statehood remains undiminished. Sri Lanka's conduct in the Tamil homeland even as the wrangling continued in Geneva makes clear that the island's crisis will intensify in the coming months and years. The ramifications will be felt internationally - what these are, however, depends on whether or not the international community takes decisive action against Sri Lanka.

# புதிய வீச்சை ஏற்படுத்தியுள்ள மாணவர் போராட்டம்

மத்திய மாநில அரசுகளின் சட்ட நடவடிக்கைகளாலும்றோ உள்ளிட்ட நிறுவனங்களின் திட்டமிட்ட சதிச் செயல்களாலும் ஹிந்து ராம், சண் குழுமம் உள்ளிட்ட ஊடகங்களின் பிரச்சாரங்கள் அல்லது இருட்டடிப்புகள் காரணமாகவும் மறக்கப்பட்ட மற்றும் மறைக்கப்பட்ட ஒரு பிரச்சினையாக இருந்த ஈழத் தமிழரின் அல்லல்களை பட்டி தொட்டியெங்கும் எடுத்துச் சென்றுள்ள தமிழக மாணவர்களுக்கும் அவர்களது ஆதரவாளரகளுக்கும் முதலில் என் சிரந்தாழ்ந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலையை ஒத்த வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஈழம் வாழ் தமிழ் மக்களுக்கு தமது பிரச்சினையை சர்வதேச அரங்கிற்கு எடுத்துச் செல்வது என்பது மிகவும் சிக்கலாயுள்ள ஒரு நிலையிலும் தமது இருப்புக்களையும் சொத்துக்களையும் காத்துக் கொள்வதற்காய் திக்கிற்கொருவராய் பிரிந்துள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் தந்த ஏமாற்றம் காரணமாய் புலத்திலே ஒரு பிரமாண்டமான கவனயீர்ப்பைச் செய்ய முடியாத நிலையிலும் ஈழத் தமிழர்களின் அவலங்களை சனல் 4 உள்ளிட்ட ஊடகங்கள் வாயிலாக வெளிக்கொணர வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருந்தோம்.

தமிழகத்தின் பலம்வாய்ந்த, மாறி மாறி ஆட்சிக்கு வந்த இரண்டு கட்சிகளுமே தமது அரசியல் காய்நகர்த்தல்களுக்கான விடயமாகவே பார்த்துக் கொண்டிருந்த நிலையிலும் உள்ளார்ந்த தமிழுணர்வு கொண்ட தலைவர்களிடம் போதிய அரசியல் பலம் இல்லாத காரணத்தாலும் தமிழக மக்களின் உள்ளார்ந்த தமிழுணர்வையும் சகோதர பாசத்தையும் கிஞ்சித்தும் மதிக்காமல் மத்திய அரசும் அதிகாரிகளும் செயற்பட்ட நிலையே தொடர்ந்து நிலவி வந்தது.

ஆயினும் அரசியல் கட்சிகளின் தூண்டுதலோ பின்புலமோ இல்லாத ஒரு நேரத்தில் லயோலா கல்லூரி மாணவர்கள் பற்ற வைத்த ஒரு சிறு பொறி இன்று பெரு நெருப்பாக மாறி ஈழத் தமிழருக்காய் குரலெழுப்பாதவர்கள் தமிழகத்தில் அரசியல் அனாதையாக்கப்படுவர் என்ற நிலைக்குக் கொண்டு வந்திருப்பதே மாணவர்களின் போராட்டத்தின் முதல் வெற்றி எனலாம்.

இதன் தொடர்ச்சி தான் மத்திய அரசிலிருந்து விலகும் திமுகவின் அறிவிப்பும் தனித் தமிழீழம் குறித்த சட்டசபைத் தீர்மானமுமாகும்.

சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது என்று சொல்லிக் கொண்டு திரிந்தவர்களுக்கும் மாணவர்கள் என்றால் சினிமாவிற்கும் தொலைபேசிக்கும் அடிமையாகிப் போன சமூக எண்ணம் அற்ற ஒரு குழுமம் என்ற எண்ணம் கொண்டவர்களுக்கும் பெரும் சாட்டையடியைத் தந்து தொடர்ந்தும் தம் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் மாணவர்களின் தமிழுணர்வும் சகோதர பாசமும் நெகிழ வைக்கிறது.

பெரும் உணர்வுடன் கிளர்ந்தெழுந்துள்ள இந்த மாணவர்களின் போராட்டத்தை ஒருங்கிணைப்பது என்பது மிகச் சிரமமான ஒரு பணியென்பதை யாமறிவோம். அதன் காரணமாய் போராட்டத்தின் போது சிற்சில விரும்பத்தகாத சம்பவங்கள் நடப்பதற்கான வாய்ப்புகளும் உள்ளன. எனவே கட்சி சாராத தமிழுணர்வுள்ள ஐயா பழ நெடுமாறன் உள்ளிட்டவர்களின் அரசியல் பட்டறிவை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் உணர்ச்சிப் பிழம்பாயுள்ள மாணவ சமூகத்தின் சக்தியை மிகச் சரியான வழியில் பயன்படுத்துவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தும் என்பது என் கருத்து.

இந்தப் போராட்டம் மட்டுமே தமிழீழத்தையோ ஈழத்தமிழர் பிரச்சினைக்கான ஒரு தீர்?வையோ பெற்றுத் தந்துவிடும் என்று எதிர்பார்ப்பது தவறானது என்றாலும் இன்றைய நிலையில் மாணவர்க் ஆரம்பித்து வைத்துள்ள இந்தப் போராட்டத்தின் தொடர்ச்சியாய் இது மக்கள் போராட்டமாக மாறுகின்ற பட்சத்தில் மத்திய மாநில அரசுகளால் தமதெண்ணப்படி சிறிலங்காவுடனான அரசியல் தொடர்புகளைப் பேணுவதென்பது முடியாத தொன்றாகி விடும்.

**ஈழத் தமிழருக்காய் குரலெழுப்பாதவர்கள் தமிழகத்தில் அரசியல் அனாதையாக்கப்படுவர் என்ற நிலைக்குக் கொண்டு வந்திருப்பதே மாணவர்களின் போராட்டத்தின் முதல் வெற்றி எனலாம்.**

இந்த நேரத்தில் மாணவர் போராட்டத்திற்கான ஆதரவை வெளிப்படுத்துவதில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் காட்டிவரும் பின்னடிப்பு சற்றுக் கவலை தருவதாயுள்ளது.

இந்த நாடுகளில் இயங்கி வரும் தமிழ் பாடசாலைகள். பழைய மாணவர் சங்கங்கள் ஏனைய ஆமைப்புகள் என்பன வெளிப்படையான தமது ஆதரவை மாணவர் பொராட்டத்திற்கு வழங்க வேண்டும் அந்த ஆதரவை வெளிப்படுத்த வேண்டும் என்பதே எனது கருத்தாயுள்ளது.

இறுதியாக எதிர்வரும் காலங்களில் இந்தப் போராட்டம் எவ்வாறமையப்போகிறது என்ற எதிர்வு கூறல் தற்போதைக்குச் சிரமமானதாயிருந்தாலும் மாணவர்கள் ஆரம்பித்து வைத்த இந்தப் பொறி தமிழரகத்தில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்கனவே ஏற்படுத்தியுள்ளது என்பதில் சந்தேகமேயில்லை.

*மணிவாசகன்*

# "Tamil Eelam - a Pragmatic and Just Solution to the Ethnic Tragedy in Sri Lanka."

**By: Nadarajah Balasubramaniam (PFLT-UK)**
**People's Front of Liberation Tigers**

Nowadays the world of international politics has lost the charm of coming out with refreshingly alternative views. It is always a boring chorus of the strategic partners.

"India's Sri Lanka policy is in a mess because in the dispute between the Tamils and the Sinhalese, India has chosen to go against the historical course which clearly favours a separate nation-state of Tamil Eelam. Eelam as and when it is formed will have no impact on the territorial integrity of India and must essentially be viewed in the same manner as the breakup of the Soviet Union after the Cold War." says N.V.Subramaniam, Editor, political and strategic analyst at www.newsinsight.net , New Delhi

He further says, "Tamil Nadu's political parties, chiefly the AIADMK and the DMK, must be advised to temper their mutual competition on the Tamil issue, and assist the Centre in formulating a sensible and doable Sri Lanka policy. And this, to this writer's mind, is accepting the inevitability and finality of an independent state of Tamil Eelam and doing all that is strategically necessary to bring it to fruition. Essentially, this must be an Indian project, because Sri Lanka lies in India's backyard, and the world community could be involved later."

Had it not been for the human rights activists including the Channel 4, the Eelam Tamils would have perished as a community in Sri Lanka? The only ray of hope the Tamils see in the distant horizon is the daring and kind human beings in the international community who are acting as dedicated saviour of the suffering Tamils. The Tamils now have the international community, their brethren across the Palk Straits and the enlightened around the world supporting them in many ways

Great Callum Macrae, the now very popular journalist and filmmaker, a noble prize nominee, was able to make grotesque images of war crimes, execution and brutality by Sri Lankan armed forces into a film, a documentary called Sri Lanka's Killing Fields which played a major part in bringing the perpetrators of those crimes to justice.

Tamils will never ever forget the work of Richard Dixon's; "Sri Lanka: A Paradise turned into Kingdom of Vultures!". This article was originally posted to Telegraph on 04th of May 2009, while the slaughtering was at its peak. He wrote, "While Tamils are being slaughtered in thousands in the war zone, the ones that come out of that area are sent to barbed wired concentration camps where they are kept as prisoners. Aid agencies, foreign diplomats and Journalists are not allowed to see these notorious camps except to the one that is used only for propaganda purposes."

But unfortunately among us there are stooges and agents of enemies of Tamils who are all out to sabotage the efforts of our friends and the right people. The tragic Sri Lanka-genocide moved the hearts of the international community, yet there are the heartless and prejudiced in our midst unmoved when the Tamils as a minority perish under the cruel Sri Lanka- genocide. There should be a halt to these nonsense.

In a debate on TIMES NOWTV, moderated by Arnab Goswami, the chief editor and panellists 1. Swapan Das Gupta, Sr Journalist 2. Dr Subramaniam Swamy, President, Janata Party; 3. Sheshadri Chari, Convenor, Foreign Affairs Cell, BJP; 4.Suren Surendiran, Spokesperson, GTF; 5.Col (Retd) R Hariharan, Former Head of Intelligence, IPKF and 6.Father Jegath Gaspar Raj, Social Activist discuss the issue of Sri Lankan envoy Prasad Kariawasam's alleged comments creating a controversy, and charges of creating ethnic divide within India against him.

Please watch the pranks of joker Suren and what he says. He simply dosen't even know that the whole Sinhalese population is behind Mahintha and yet a single Sinhalese has to say something against the on going genocide of Tamils. It is simply pathetic !. Pleas visit,

**1.** http://www.timesnow.tv/Debate-Needless-controversy-or-competitive-politics---1/videoshow/4424088.cms **2.** /4424089.cms **3.** 4424090.cms

India's game in the March 2013 UNHRC session, is summed up by a former Foreign Secretary;.

"This time too we began by softening the US resolution where it was too intrusive and undercut Sri Lankan sovereignty too blatantly. However, because of extreme DMK pressure on the government our diplomatic strategy fell into an embarrassing disarray. In a last ditch effort to placate the DMK we sought a toughening of the US resolution after our previous efforts to soften it. We put ourselves in a situation where the US appeared moderate and we unprincipled and opportunistic."

"We do not have to condone Sri Lanka's failure on reconciliation and accountability issues. But we should deal bilaterally with Sri Lanka, and forcefully at that to contain the mounting backlash in Tamil Nadu. As a regional power we should not outsource such responsibility to others, as this erodes our position and exposes our irresolution, adding to our neighborly woes. If we don't use our power we will be seen as powerless."

In response a voice was in air, "It's people like you who are scared of Sri Lanka who have been directing India over the past few decades and got us to this state. Your kind have not been answerable to the public and carried out your corrupt manifest unfettered up to now. Now the people have woken up, you are trying to justify your past idiotic actions. It's time that the politicians act for the people and with some decency for a change. Accept this reality and learn to live with it."

The voice is not definitely from the protesting students!

**ஒரு பேப்பர்** உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

**BBK Partnership**
Croydon.................. 020 8150 9950

**Meera Arnold & Co**
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]

**இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.**

**ஒரு பேப்பர்** தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER**
Bank: **HSBC**
A/C: **61429035**
S/C: **40-33-09**

# ஒரு பேப்பர்
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
**அ.இரவி - மணி - அகிலன் மாதவன்**

கனடா
**தயா - அரவிந்தன் - சிந்து**

சுவிஸ்
**சயந்தன்**

பொறுப்பாசிரியர்
**- கோபி -**

மக்கள் தொடர்பு
**சுகன்யா**

விளம்பரம்
**சோபனா - அஜந்தா**

அச்சு
**தர்சினி (கனடா) - சுகன்யா**

வடிவமைப்பு
**மயூ - யுகன்**

முகப்பு வடிவமைப்பு
**seven zero graphics**

விளம்பர வடிவமைப்பு
**ரஜீவன் - மாயா - சாரங்கன்**

தமிழ் எழுத்துரு உதவி
**சுரதா யாழ்வாணன்**

நிதி – நிர்வாகம்
**சோபனா**

வழங்கல்
**உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்**

**உங்கள் தொடர்புகட்கு:**

தொலைபேசி (Tel)
**லண்டன் 020 7043 4310**
**கனடா 416 613 2850**

தொலைநகல் (Fax)
**லண்டன் 020 7043 4312**
**கனடா 416 438 7855**

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

**பணிமனை முகவரி**
**ORU PAPER**
**G11 LOMBARD HOUSE**
**2 PURLEY WAY**
**CROYDON, CR0 3JP**

மின்னஞ்சல்:
**info@orupaper.com**

இணையம்:
**www.orupaper.com**



*'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*


# ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட "இந்தியத் தீர்மானம்"

**மௌலி**
*(ஒரு பேப்பருக்காக)*

ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை 'அமெரிக்க தீர்மானம் ' என தமிழ் மக்கள் நம்ப வேண்டும் என்பதுதான் இந்திய-சிறீலங்கா உளவு நிறுவனங்களின் கைவரிசை. ஆனால் அங்கு நிறைவேற்றப்பட்டது 'இந்தியத் தீர்மானம்'. இக் கட்டுரை ஐ.நாவின் இணையதளத்தில் (http://ap.ohchr.org/Documents/dpage_e.aspx?b=10&se=136&t=4 ) உள்ள முதல் வரை அமெரிக்க தீர்மானம் பற்றியே பேசுகின்றது. அமெரிக்காவின் நோக்கை இங்குதான் பார்க்கவேண்டும். இந்தியாவின் நோக்கை ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் பார்க்கவேண்டும் .

தேசியத்தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் சுட்டுக்கொல்லப்படுவதற்கு முன் அருகில் நின்ற இராணுவ சிப்பாய் அல்லது இராணுவ அதிகாரி இந்திய இராணுவ சீருடையுடன் நிற்பதையும், 'ஐ.நா அதிகாரிகளால் கட்டுப்பாடுகள் அற்ற சர்வதேச விசாரணை' நடை பெற்றால் போர்க்குற்றவாளிகளும் இனப்படுகொலையும் நிரூபிக்கப்பட்டு தமிழீழம் பிரியலாம் என்ற அச்சம் கொண்ட சக்திகளில் மிக முக்கியமானவையாக இந்தியாவும்சிறீலங்காவும் இருக்கின்றன என்பதையும் மனதில் இருத்தி இந்த கட்டுரை எழுதப்படுகின்றது.

நிறைவேற்றப்பட்ட ஜெனீவாத் தீர்மானமும் - தீர்மானத்தின் அமெரிக்கமுன்வரைபும் இரண்டும் முற்றுமுழுதாக நேரெதிரானவை என்பதை மிகத் தெளிவாக குழப்பங்கள் எதுவும் இன்றி புரிந்தால் மட்டுமே சிறீலங்காவில் ஜெனீவா ஊடாக அமெரிக்கா அடைய முனையும் இலக்கை நாம் சரியாக கணிப்பிட முடியும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையில் மார்ச் 7 ஆம் திகதி அமெரிக்கா சமர்ப்பித்த தீர்மான முன் வரைபு மார்ச் 8 ஆம் திகதி UNHRC இலச்சினை இன்றியும். மார்ச் 12 ஆம் திகதி UNHRC இலச்சினையுடனும் சில இணைய தளங்களில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதில் பின்வரும் விடயங்கள் தெளிவாக உண்டு.

01. சிறீலங்காவின் நல்லிணக்க ஆனைக்குழு LLRC நிராகரிப்பு .."Noting with concern .... commision report DO NOT adequently address serious allegations of International law"

02. சர்வதேச சுயாதீன நம்பத்தகுந்த விசாரணை. "urges the government of Srilanka to implement the recommendations made in the report of the office of High Commissioner -- Note the commissioners call for an independent and credible international investigation "

03. ஐ.நா அதிகாரிகளுக்கு கட்டுப்பாடற்ற அனுமதிக் கோரிக்கை. "uninfected access to special rapporteur ...'"

உலகம் தர்மச் சக்கரத்தில் ஓடவில்லை எனினும், வழக்கில் உள்ளசட்டத்தின் ஆட்சியை நாம் ஏற்றுக் கொண்டால், பின்வரும் ஒழுங்கில் தான் சர்வதேசவிவகாரங்கள் அமைய முடியும் .

- முதலில் கட்டுப்பாடுகள் அற்ற சர்வதேச சுயாதீன நம்பத்தகுந்த விசாரணை
- அதனூடாக இனப்படுகொலை நிரூபிக்கபடுதல்.

இவர்கள் இறுதி ஆவணம் தயாரிக்க இவர்கள் திட்டமிட்டுள்ளதாகவும், யூலை 28 ஆம் திகதி பிரகடனம் ஒன்றைச் செய்யஇவர்கள் முனைவதாகவும் தெரிய வருகின்றது.

ஐ.நா மனித உரிமைச் சபை நடவடிக்கை மீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துதல், இனப்படுகொலையை நிரூபிக்க முக்கியமான சர்வதேச சட்டக் கூறான சர்வதேசசுயாதீன விசாரணையை அர்த்தமற்றதாக்கி வேறு சாத்தியமற்ற ஆனால் சரியானது போலதோற்றமளிக்கும் கானல் நீர் நம்பிக்கைகளை வளர்க்கும் பல்வேறு வகையான முன்னெடுப்புக்களை வளர்த்தல்,'தென்னா பிரிக்க சதி' என்பன இந்திய -சிறீலங்க உளவு நிறுவனம் புகுந்து விளையாடக் கூடிய 'தலைவாசல்களாகவே' தெரிகின்றன.

ஒரு சர்வதேச சட்டமீறல் சட்ட வரையறைக்களுக்கு ஏற்பஆவணப்படுத்தப்பட்டு விசாரணை மூலம் நிரூபிக்கப்பட்டு குறித்த அரசு அந்தசட்ட மீறல்களைச் விசாரிக்க கால அவகாசம் வழங்கப்பட்டு அதுவும் மீறப்பட்டுள்ளதுஎன்பதை சர்வதேச மன்றம் ஒன்று ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் , பொருளாதாரத்தடை விதிக்கப்படும். அதுவும் பொருளாதாரத் தடையால் வேறு நாடுகளுக்கு' சமூகப் பாதிப்பு' ஏற்படுமாயின் பொருளாதாரத் தடை விதிக்கப்படமாட்டாது.இதற்கு நல்ல உதாரணம் ஈரானாகும் . ஈரான் மீது இறுக்கமான பொருளாதாரத் தடைவிதிக்க உலகம் விரும்பினாலும் ஈரான் மீது பொருளாதரத் தடையால் பல்வேறு நாடுகளில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவும் என்பதால் ஈரான் மீதானபொருளாதாரத் தடை விவகாரம் நீண்ட நாட்கள் இழுபட்டது.

**முள்ளிவாய்க்காலை உருவாக்கிய அதே 'ஓட்டைகளால்' மீண்டும்ஏமாற்றப்பட்டு அரசியல் முள்ளிவாய்க்கால் அழிவு நிச்சயமாகும். சுயாதீன சர்வதேச விசாரணையை பசாசு தான் ஆதாரிதாலும் அதனுடன் இணைவோம்.**

அமெரிக்கா முன்வைத்த தீர்மான முதல் பிரதியில் ஐ.நா அதிகாரிகளுக்கு கட்டுப்பாடெதுவும் அற்ற சர்வதேசசுயாதீன விசாரணை தான் அமெரிக்காவின் இலக்கு, அதனைத் தடுப்பது இந்தியாவும் மனித உரிமைகளை மதிக்காத பாகிஸ்தான் உட்பட்ட நாடுகளும் தான்என்பதை தெளிவாக உணருவோம், முதலில் சர்வதேச சுயாதீன விசாரணை நோக்கிஒன்றுபட்டு முழுப்பலத்துடன் நகர்வோம். அதற்கு ஆதரவு திரட்டுவோம்.அதுதான் இனப்படுகொலையை நிருபிக்க சரியான பாதையும்ஒரே ஒரு பாதையும். தவறுவோமாயின் . முள்ளிவாய்க்காலை உருவாக்கிய அதே 'ஓட்டைகளால்' மீண்டும்ஏமாற்றப்பட்டு அரசியல் முள்ளிவாய்க்கால் அழிவு நிச்சயமாகும். சுயாதீன சர்வதேச விசாரணையை பசாசு தான் ஆதாரிதாலும் அதனுடன் இணைவோம் . சரியான இடத்தில் பசாசை கழட்ட தயாராகி நகர்வதில் தவறில்லை. பிரேமதாச ஒரு உதாரணம்.

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்!

## இதுவும் கடந்து போகும்!

" எல்லா காலங்களுக்கும், சந்தர்ப்பங்களுக்கும் பொருத்தமாக வழி காட்டக்கூடிய ஒரு சுருக்கமான மந்திரமோ, வாக்கியமோ இருக்கிறதா?" என்று ஒரு சக்கரவர்த்தி தன் சபையில் இருந்த அறிஞர் பெருமக்களைக் கேட்டார்.

சர்வரோகங்களுக்கும் ஒரே நிவாரணி என்கிற மாதிரி அவர் கேட்டதற்கு அந்த அறிஞர் பெருமக்கள் ஒன்று கூடி சிந்தித்தார்கள். பலரும் பலதைச் சொன்னார்கள். ஆனால் அதெல்லாம் ஒரு சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமாகத் தோன்றியது இன்னொன்றிற்கு அபத்தமாகத் தோன்றியது. எனவே அவற்றையெல்லாம் அவர்கள் ஒதுக்கி விட்டார்கள்.

கடைசியில் ஒரு முதிய அறிஞர் ஒன்று சொல்ல அவர்களுக்கு அதுவே சரியான வாசகமாகப் பட்டது. அதை ஒரு காகிதத்தில் எழுதிக் கொண்டு வந்தனர். "அரசே! நீங்கள் கேட்ட கேள்விக்கான பதில் இதில் உள்ளது. ஆனால் இதை நீங்கள் இப்போது படிக்கக் கூடாது. நீங்கள் உங்கள் வாழ்க்கையின் மிக இக்கட்டான சூழ்நிலையில் தான் எடுத்துப் படிக்க வேண்டும்" என்றனர்.

சக்கரவர்த்தியும் அதை ஏற்றுக் கொண்டு அதை ஒரு வைர மோதிரத்தின் அடியில் வைத்துக் கொண்டு அதை விரலில் மாட்டிக் கொண்டார். சில காலம் கழித்து பக்கத்து நாட்டுடன் போர் மூள அந்தச் சக்கரவர்த்தி போரில் படு தோல்வி அடைந்தார். தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அவர் தப்பியோட வேண்டியதாயிற்று. எதிரிப்படையினர் துரத்தி வர ஒரு காட்டுப் பாதையில் ஓடிய சக்கரவர்த்தி ஓரிடத்தில் அப்பாதை முடிந்து ஒரு பெரிய பள்ளத்தாக்கு தான் அதற்குப் பின் இருந்ததைக் கண்டார். மேலே போக வழியில்லை. பின் செலவும் வழியில்லை. தொலைவில் எதிரி வீரர்கள் வரும் காலடி ஓசை வேறு கேட்டது.

அந்த இக்கட்டான சூழ்நிலையில் என்ன செய்வதென்று கலங்கிய சக்கரவர்த்திக்கு அந்த அறிஞர்கள் தந்த வாசகம் பற்றிய நினைவு வர வைர மோதிரத்தினடியில் இருந்த அந்த காகிதத்தைப் பிரித்துப் படித்தார். அதில் எழுதியிருந்தது- "இதுவும் கடந்துபோகும்". அதை மீண்டும் படித்தார். மனதில் பொறி தட்டியது.

சில நாட்களுக்கு முன் அவர் பெரிய சக்கரவர்த்தியாக இருந்தார். எல்லா செல்வமும், படைபலமும் அவரிடம் இருந்தன. அவை எல்லாம் இன்று அவரைக் கடந்து போய் விட்டன. இன்று தோல்வியும், தனிமையும் மட்டுமே இருக்கின்றன. இதுவும் ஒரு கட்டத்தில் போகுமல்லவா?.... சிந்திக்க சிந்திக்க சொல்லொணா அமைதி அவரை சூழ்ந்தது. லேசான மனதுடன் எதிரிகளை எதிர்நோக்கிநின்றார். ஆனால் எதிரி வீரர்கள் காட்டின் மற்றொரு பாதையைத் தேர்ந்தெடுத்து அவரைத் தேடுவது, குறைந்து வந்த அவர்கள் காலடியோசை மூலம் தெரிந்தது.

கடைசியில் தப்பித்து தன் நேச நாடுகளின் உதவி கொண்டு மீண்டும் படைகளைத் திரட்டி போரிட்டு எதிரிகளைத் தோற்கடித்து அவர் பெரு வெற்றி பெற்றார். நாட்டு மக்களின் வாழ்த்தும், வெற்றி வாகை சூடிய பூரிப்பும் சேர்ந்த போது அவருக்கு மனதில் கர்வம் வந்தது. "அப்படி சுலபமாக நான் விட்டுக் கொடுத்து விடுவேனா? என்னை வெல்வது யாருக்கும் சாத்தியமா?". அந்த எண்ணம் வர வர சூரிய ஒளிபட்டு அவர் வைர மோதிரம் பளீரிட்டது. படிக்காமலேயே அந்த செய்தியை அது நினைவூட்டியது. 'இதுவும் கடந்து போகும்'. அந்தக் கணத்தில் அவர் கர்வம் நீங்கியது. அன்றிலிருந்து அவர் வாழ்க்கையில் அந்த வாக்கியம் தாரக மந்திரம் ஆகியது. அமைதி குறையாத அரசரென அவர் எல்லோராலும் பாராட்டு பெறும்படி ஆட்சியையும் வாழ்க்கையையும் நடத்தினார்.

நம்முடைய இதுநாள் வரை வாழ்க்கையையும் திரும்பிப் பார்த்தால் இந்த வாக்கியத்தின் மகத்தான உண்மையை உணர முடியும். எத்தனை வெற்றிகள், எத்தனை தோல்விகள், எத்தனை மகிழ்ச்சிகள், எத்தனை துக்கங்கள்..... எல்லாம் வந்து சிறிது காலம் தங்கி கடந்து போயிருக்கின்றன. வந்ததெல்லாம் நம்மை விட்டுப் போவதால் நம்முடையதல்ல என்பது உறுதியாகிறதல்லவா? வந்துபோவதெல்லாம் நம்முடையதல்ல என்பதால் நாம் வெறும் பார்வையாளர்களே அல்லவா? எத்தனை நண்பர்கள், எத்தனை பகைவர்கள், எத்தனை உறவுகள் நம் வாழ்வில் முக்கிய அங்கம் வகித்து வெறும் நினைவுகளை மட்டும் நம்மிடம் விட்டு விட்டுப் போயிருக்கிறார்கள்? வாழ்வில் வந்ததெல்லாம் நம்மைக் கடந்து சென்று கொண்டு தானே இருக்கின்றன. ஒரு விதத்தில் என்றும் நாம் தனியர்களே அல்லவா?

இயற்கையின் விதியே இது என்று உளமார உணர்ந்து தெளியும் போது கிடைக்கும் அமைதி சாதாரணமானதல்ல. அந்த அமைதியை மனதில் நிரந்தரமாக்கிக் கொள்ளுங்கள். வெற்றிகள் கிடைக்கும் போது 'இதுவும் கடந்து போகும்' என்பதை நினைவில் கொள்ளுங்கள். கர்வம் தலை தூக்காது. தோல்விகள் தழுவும் போது 'இதுவும் கடந்து போகும்' என்பதை நினைவில் கொள்ளுங்கள். சோர்ந்து விட மாட்டீர்கள்.

நல்ல மனிதர்களும், நண்பர்களும் உங்கள் வாழ்க்கையில் வரும் போது 'இதுவும் கடந்து போகும்' என்பதை நினைவில் கொள்ளுங்கள். இருக்கும் போது அவர்களை கௌரவிப்பீர்கள். அவர்கள் விலகும் போது பெரிதாக பாதிக்கப் படாமல் இருப்பீர்கள்.

நெற்றி சுருங்கும் போதெல்லாம் 'இதுவும் கடந்து போகும்' என்பதை நினைவில் கொள்ளுங்கள். சுருக்கம் போய் முகத்தில் புன்னகை தவழக் காண்பீர்கள். நினைவில் கொள்ளும் அவசியமே இல்லாமல் வாழ்க்கையின் ஜீவநாதமாக அந்த உண்மை உங்கள் இதய ஆழத்தில் பதிந்து போய் விட்டால் அந்தப் புன்னகை நிரந்தரமாக உங்கள் முகத்தில் தங்கி விடுவதை மற்றவர்கள் காண்பார்கள்

*- என்.கணேசன்*

# பொதுப்பிரகடனம், சுதந்திர சாசனம், மற்றும் ஒருங்கிணைவு முயற்சிகள்







**கோபி**
*ஒரு பேப்பர்*

தாயகத்திலும், புலம்பெயர்நாடுகளிலும் உள்ள தமிழ் அமைப்புகளிடையே புரிந்துணர்வினை ஏற்படுத்தி அவர்களிடையே காணப்படும் முரண்பாடுகளைக் களையும் சில முயற்சிகள் கடந்த நாலாண்டுகளில் நடைபெற்று அவை தோல்வியில் முடிவடைந்துள்ளன. இங்கு குறிப்பிடப்படும் தமிழ்த் தேசியம் சார்ந்த அமைப்புகள் யாவும் நான்காண்டுகளுக்கு முன்னர் ஓரணியில் நின்றன, அல்லது ஒரணியாக இயங்கின என்பதனை கவனத்தில் எடுத்தால், அவற்றிடையே கொள்கையளவிலாவது ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான சாத்தியப்பாடு உள்ளது என்பதனை நாம் உணர முடியும். இருப்பினும் அவ்வாறான எந்த ஒரு முயற்சியும் இதுவரை கைகூடவில்லை என்பது நிலைமையின் தாற்பரியத்தை விளக்குவதாக அமைந்துள்ளது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை, இவ்வமைப்புகளிடையே முழுமையான ஒருங்கிணைவு ஏற்பட வேண்டுமென அவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். மறுபுறத்தில், வெளிச்சக்திகள் தமது முயற்சிகளுக்கு வசதியாக, இவற்றிடையே கொள்கையளவிலான ஒருங்கிணைவை ஏற்படுத்த முயற்சி செய்து வருகிறார்கள். இம்முயற்சிகளின் அவசியத்தை உணர்த்துவதும், இங்கு காணப்படும் கொள்கைமயப்பட்ட சிக்கல்களை வெளிப்படுத்துவதும் இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

### ◆ அமைப்புகள், குழுக்கள்

இங்கு ஒருங்கிணைவு ஏற்படுத்த வேண்டும் எனக்குறிப்பிடும் அமைப்புகளும், அவற்றிடையே காணப்படும் குழுக்களும், முள்ளிவாய்க்காலுக்கு முற்பட்ட காலத்தில் விடுதலைப்புலிகளின் தலைமையை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டு தாயகத்தில் செயற்பட்ட அரசியல் கட்சிகள், மற்றயவை விடுதலைப்புலிகளின் முன்னணி அமைப்புகளாக புலம்பெயர் தேசங்களில் செயற்பட்ட அமைப்புகள் ஆகும். இவற்றுள் சில இன்று தம்மை விடுதலைப்புலிகளிலிருந்து விலக்கிக் காட்ட முயன்றாலும், இவற்றின் கடந்தகாலச் செயற்பாடுகளை தமிழ் மக்கள் நன்கு அறிவர்.

விபரமாகப் பார்த்தால், தாயகத்தில்: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகிய அரசியல் கூட்டமைப்புகள், புலம்பெயர்நாடுகளில் கிளைக் கட்டமைப்பு எனப்படும் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், மக்களவைகள், பிரித்தானிய தமிழர் பேரவை, கனேடிய தமிழ் காங்கிரஸ், அவுஸ்திரேலிய தமிழ் கொங்கிரஸ், USTPAC போன்ற Lobby குழுக்கள், தமிழ் இளையோர் அமைப்பு, உலகத் தமிழர் பேரவை, தலைமைச் செயலகம் என்ற குழுவும் அது சார்ந்த அமைப்புகளும், இனப்படுகொலைக்கு எதிரான தமிழரமைப்பு எனப் பட்டியலிடலாம்.

### ◆ அரசியல் கொள்கை

பொதுவில் மேற்குறித்த தமிழ் அமைப்புகளுக்கிடையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுவிடயத்தில் கொள்கை வேறுபாடுகள் இல்லை எனக் கருதப்பட்டாலும், அதனை அடையும் வழிமுறைகள் என இவ்வமைப்புகள் தெரிவு செய்யும் விடயங்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய முரண்பாடுகள் தென்படுகின்றன.

- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வெளிப்படையாகவே ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தீர்வையே வலியுறுத்தி வருகிறது. அதன் தலைவர் திரு. சம்பந்தன் 'ஐக்கிய இலங்கை' என்ற விடயத்தை கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வலியுறுத்தி வருகிறார். கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இதரகட்சிகள் இவ்விடயத்தில் உடன்படுகின்றனவா, இல்லையா என்பதில் குழப்பம் இருக்கிறது. அவை தமிழ் மக்கள் மத்தியில் ஒரு கருத்தும், வெளி அரங்கங்களில் வேறு கருத்தும் வெளிப்படும் விதத்தில் இரண்டு மொழிகளில் பேசிவருகின்றன. இருப்பினும் வெளியார் பார்வையில் கூட்டமைப்பு ஒரு தனி அமைப்பாகவே கருதப்படுகிறது என்பதனை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகவே அதன் தலைமையின் நிலைப்பாடே ஏற்றுக் கொள்ளப்படும்.

- தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஒரு தேசிய இனமான ஈழத்தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் 'ஒரு நாடு இரண்டு தேசங்கள்' என்ற இணைப்பாட்சி முறையை தமது அரசியல் தீர்வாக வரித்துக் கொண்டுள்ளது. இவ்விரு அணிகளுக்கும் இடையில் மிகத் தெளிவான கொள்கை வேறுபாடு உள்ளது. கூட்டமைப்பு, ஐக்கிய இலங்கைக்குள், உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அதிகாரப்பகிர்வினை வேண்டி நிற்கிறது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது, பிரிந்து செல்லக்கூடிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு இணைப்பாட்சி முறையை வலியுறுத்தி நிற்கிறது.

- நாடு கடந்த அரசாங்கம், மக்களவைகள், தமிழர் ஒருங்கிணைப்புக்குழு என்பன சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்து சென்று தனித் தமிழீழம் அமைப்பதனை இறுதித் தீர்வாக ஏற்றுக் கொண்டு அதனடிப்படையில் செயற்படுகின்றன.

இதர அமைப்புகளைப் பொறுத்தவரை மேற்படி மூன்று நிலைப்பாடுகள் சார்ந்து தமது செயற்பாடுகள் அமைந்துள்ளதாக குறிப்பிடுகின்றன. இவற்றுள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தீவிரமாக ஆதரிக்கும் உலகத்தமிழர் பேரவை, ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்ற விடயத்தில் கூட்டமைப்புடன் உடன்படுகிறதா என்பதனை வெளிப்படுத்தாமல், இடத்துக்கு ஏற்றமாதிரி கருத்துகளை வெளியிட்டு தப்பிக் கொள்ளும் நழுவல் போக்கை கையாண்டு வருகிறது. இன்னும் சில தரப்புகள் சிறிலங்காவின் இனவாத முகத்தை வெளிப்படுத்த கூட்டமைப்பின் மிதவாத நிலைப்பாடு உதவும் என கூட்டமைப்பிற்கான தமது ஆதரவினை நியாயப்படுத்துகின்றன. நாடு கடந்த அரசாங்கத்தினரும் கூட்டமைப்பை ஆதரிப்பது கொள்கையளவில் முரண்நகையாகவே தெரிகிறது.

### ◆ ஒருங்கிணைவு முயற்சிகள்

தமிழ் அமைப்புகளிடையே உள்ள கொள்கை வேறுபாடுகளை தெளிவாக அடையாளங் காண முடிவதனால் இவற்றை ஒன்றிணைக்கும் முயற்சிகள் சிக்கலானது என்பதனை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். இங்கு மற்றைய மோதல்கள் முரண்பாடுகளும் உள்ளன என்பதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இருப்பினும் இவ்வமைப்புகள் யாவும் தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டவை என்ற எண்ணக்கருவின் அடிப்படையில் குறைந்தபட்ச விடயங்களிலாவது ஒருங்கிணைவை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையில் இவ்வாறான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

### ◆ பொதுப்பிரகடனம்

தமிழ் அமைப்புகளை இணைத்து ஒரு பொதுப் பிரகடனம் ஒன்றை வெளியிடும் நோக்கில் உலகத் தமிழர் பேரவை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இம்முயற்சி உலகத் தமிழர் பேரவையின் 'நான்கு தூண்கள்' வேலைத் திட்டத்தின் ஒரு தூணாக அடையாளங்காணப்பட்டாலும், இதன் பின்னணியில் வெளிச் சக்திகள் இருப்பது தெரிய வருகிறது. சுவிற்சலாந்து அரசாங்கத்தின் நிதியுதவியில், தென்னாபிரிக்க அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளின் ஒரு பகுதியாகவே இது அமைந்துள்ளது.

பேர்லினை தளமாகக் கொண்டு செயற்பட்டு வரும் Bergh of Foundation என்ற அமைப்பு இதற்கான அனுசரணையாளராகச் செயற்பட்டு வருகிறது. இம்முயற்சி தொடர்பில், அண்மைய மாதங்களில் பேர்லினில் நடைபெற்ற சந்திப்புகளில், உலகத் தமிழர் பேரவை, மக்களவைகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, நாடுகடந்த அரசாங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்கள். கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், பொதுப் பிரகடனத்தை உருவாக்கும் அளவிற்கு இதுவரை இணக்கப்பாடு ஏற்படவில்லை என அறிய முடிகிறது.

### ◆ தமிழீழ சுதந்திர சாசனம்

உருவாகப் போகும் தமிழீழ தேசம், எவ்வாறான அரசியல், பொருளாதார, சமூக கட்டமைப்புகளைக் கொண்டிருக்க வேண்டும், கொள்கை மற்றும் சட்டமாக்கல் போன்ற விடயங்களில் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் போன்ற விடயங்களில் ஈழத் தமிழ் மக்களின் கருத்தறிந்து ஒரு விடுதலை சாசனத்தை உருவாக்கும் முயற்சியை நாடுகடந்த அரசாங்கம் முன் மொழிந்துள்ளது. 1955 இல் தென்னாபிரிக்க விடுதலை அமைப்புகள் இணைந்து ஏற்படுத்திய விடுதலை சாசனத்தை ஒத்த இம் முயற்சியில் ஏனைய தமிழ் அமைப்புகளையும் இணைத்துக் கொள்வதில் தாம் ஆர்வமாக உள்ளதாகவும், இவ்வாறான இணைப்பு சாத்தியமாகும் பட்சத்திலேயே சுதந்திரசாசனத்திற்கான அங்கீகாரம் எட்டப்படும் என நாடுகடந்த அரசாங்கத்தின் பிரதமர் திரு. உருத்திரகுமாரன் இக்கட்டுரையாளருடனான ஒரு உரையாடலில் தெரிவித்தார்.

தமழீழ தேசம் தனி நாடாக அமைகிறதா, இணைப்பாட்சிக்குள் வருகிறதா அல்லது ஒற்றையாட்சிக்குள் அடங்கி விடுகிறதா என்பதனையிட்டு இப்போதைக்கு சொல்ல முடியாவிட்டாலும், தமிழ்த் தேசிய இனத்திற்கான முற்போக்கான, சர்வதேச சட்டங்களைத் தழுவியதான ஒரு சுதந்திரப்பிரகடனத்தை உலகக் கண்ணோட்டதற்கு விடுவது அவசியமானது என்பதனை தமிழ் அமைப்புகள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

தமிழ் அமைப்புகளால் முன்னெடுக்கப்படும் இத்தகைய முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலமே அமைப்புகளுக்கிடையிலான கொள்கையளவிலான ஒருங்கிணைவு வெளிப்படுத்தப்படும்.

தம்மால் முன்மொழியப்பட்ட இவ்வாறான ஒருங்கிணைவு முயற்சிகளுக்கு நாடு கடந்த அரசாங்கத்தை சேர்ந்தவர்கள் முழுமனதுடன் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்பதனை அவர்களது செய்கை மூலம் வெளிப்படுத்த வேண்டியது அவசியமானது என இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

கருத்துக்களுக்கு @orupaper & facebook.com/orupaper

## ஒரு பேப்பர்
### கிடைக்குமிடங்கள்

| | |
|---|---|
| **New Malden** | |
| Ayngaran | 020 8949 6734 |
| Megaa Superstore | 020 8336 0061 |
| Vaaniyan | 020 8605 0434 |
| Murugan Kovil | 020 8942 4475 |
| Vaishna Superfoods | 020 8399 4488 |
| Stoneleigh Amman | 020 8393 8147 |
| **Tooting** | |
| Yhaal House | 020 8767 8585 |
| Rainbow Restaurant. | 020 8640 4230 |
| Amman Kovil | 020 8795 4258 |
| Niru Con.Store | 020 8672 3200 |
| Ayngaran | 020 8540 1500 |
| Suvai Aruvi | 020 8543 6266 |
| Adchaya | 020 8540 8192 |
| **Croydon** | |
| Best Foods | 020 8684 6269 |
| Haran Bros | 020 8686 2552 |
| Chennai dosa | 020 8665 9192 |
| Eelam Video | 020 8664 8351 |
| Spice Land | 020 8667 1700 |
| **Lewisham** | |
| Chandra | 020 8333 8680 |
| Eelam Shop | 020 8690 6545 |
| Katpagam | 020 8694 8810 |
| AJ Video | 020 8691 8888 |
| Sivan Kovil | 020 8318 9844 |
| KRS | 020 8297 9432 |
| **Eastham** | |
| Seelans | 020 8471 5733 |
| Sakthi Cash & Carry | 020 8394 4560 |
| Murugan Temple | 020 8478 8433 |
| Station Super Store | 020 8503 4711 |
| Best Food | 020 8552 9578 |
| Akilan Enterprise | 020 8548 0033 |
| **Ilford** | |
| Vinnayagar Kovil | 020 8911 8934 |
| Nathan | 020 8514 1744 |
| Angels | 020 8553 0490 |
| Sri Supermarket | |
| **Edmonton** | |
| New Kannan Stores | 020 8884 4979 |
| Sayas | 020 8805 9529 |
| Nagapoosani Temple | 020 8884 3333 |
| **Walthamstow** | |
| Vinayagar Kovil | 020 8527 3819 |
| Kumarans | 020 7609 1912 |
| Prabas | 020 8509 3322 |
| **Harrow** | |
| Tsk food & Wine | 020 7622 4258 |
| Eelavan | 020 8863 6160 |
| Prabhas | 020 8866 0977 |
| South Harrow F&W. | 020 8423 6321 |
| Best foods | 020 8423 9933 |
| Sambal Express | 020 8799 7171 |
| **Wembley** | |
| Malar Super Market | 020 8795 5797 |
| Ganapathy C & C | 020 8795 4627 |
| Best foods | 020 8900 0100 |
| Vahizan Disc | 020 8795 0648 |
| **Ealing** | |
| Amman kovil | 020 8810 0835 |
| **Greenford** | |
| Ambiha | 020 8813 0967 |
| **Coventry** | |
| Eellakanthan Temple | 02476663554 |
| **South hall** | |
| Thamilini C & C | 020 8606 9900 |
| Duvaraka C & C | 020 8813 9126 |
| Palm Palace Restaurant | 020 8574 9209 |
| Spicy Palace Restaurant | 020 8574 4087 |
| Luxmys C & C | 020 8571 4599 |
| Tamilan C & C | 020 8561 8174 |
| Lady Margret | 020 8571 4434 |




# Wembley Malar cash & carry

## சித்திரை தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு

## ஏப்ரல் 10 முதல் மாபெரும் மலிவு விற்பனை



**Curry powder**
2 for £7.99



**அரிசி வகைகள்**
1 Kg Pack
2 for £1.99



**டின் மீன்கள்**
2 for £2.99




**Nestomalt**
2 for £4.49




**Maggi coconut powder**
1 kg Milk Powder
2 for £11.99



**Jaggery**
£1.99
Buy one get one free




**Gingely Oil**
£7.99
Buy one get one free




**Pride 2kg Ghee**
£8.99



**மா வகைகள்**
1kg Pack
2 for £2.49




**Niru Coconut Milk Tin**
2 for £1.29




**Niru Soya Meat**
2 for £1.29




**Kings Curry Powder**
2 for £8.99




**Vaani Brand URID Dhal**
2 for £2.99



**மல்லிகைப் பூ 1 முழம்**
£0.75




**Vaani Brand Mysoor Dhal**
2 for £1.99

பணப்பரிமாற்ற சேவையும் எம்மிடம் உண்டு

- திருமகள் நிரு மாதங்கி - ஊர்க்குத்தரிசி 5kg - £9.99 Buy 1 Get 1 FREE
- Diamond & Vaisyaa - குறிப்பிட்ட மீன் வகைகள் - 2 For 4.49

கத்தரிக்காய், வாழைக்காய், வாழைப்பூ, வட்டுக்கத்தரிக்காய் (Pink) முருங்கைக்காய், புடலங்காய், சின்ன வெங்காயம் கருணைக்கிழங்கு **1 Kg - £1.99**

100 பவுண்ஸ்களுக்கு மேல் கொள்வனவு செய்தால் 50 இடியப்பம், சொதி, சம்பல், கறி இலவசம்



கோவில், திருமண மாலை, பூச்சடை, நாகசடை போன்றவற்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

கோவில்களுக்கு தேவையான அனைத்து வகைப் பூக்களையும் பெற்றுக் கொளளலாம்.

*இன்னும் பல பல பொருட்கள் மலிவு விற்பனையில்*

**சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!!!**

**541-543 High road, Wembley, HA0 2DJ, Tel : 02087955797**

# பொதுபல சேனாக்களின் வருகை ஆட்சி மாற்றத்தைத் தடுக்குமா ?



தமிழகத்தில் தீவிரமடையும் மாணவர் போராட்டம், வெகுசன மட்டத்தில் விரிவடைகிறது.

'மனித உரிமை மீறல்' என்கிற, பிராந்திய நலன் பேணும் வல்லரசுகளின் குற்றச் சாட்டுக்களுக்கு அப்பால், இன அடியழிப்பு என்பதன் அடிப்படையில் மாணவர்களின் போராடக் கருத்துருவம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

6வது திருத்தச் சட்டம் தடுக்கும் தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் கோட்பாட்டை அவர்கள் பேசுகிறார்கள்.

பெரும்பான்மையான புலம் பெயர் ஈழத்தமிழ் மக்கள், வட்டுக்கோட்டை தீர்மானம் மீது மீள் வாக்கெடுப்பினை மேற்கொண்டு, மாணவர்கள் முன்வைக்கும் அரசியல் கோரிக்கையை கடந்த நான்கு ஆண்டுகளில் உறுதி செய்துள்ளார்கள்.

எதிர்கால அமெரிக்கத் தீர்மானங்கள் ஊடாக எது நடக்க வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றார்களோ ,அதையே அவர்கள் முன் வைக்கின்றார்கள். அமெரிக்க மென் அழுத்தங்கள், பேரினவாத அரசியலில் ஆட்சி மாற்றம் ஒன்றையே எதிர்பார்க்கின்றது என்பதை உணர்ந்து கொள்கின்றார்கள்.

அதேவேளை மாணவர் போராட்டத்தின் எதிர்வினையாக, தென்னிலங்கை பேரினவாத அரசியலும் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளதைக் காணலாம்.

இந்நிலையில் தமிழ் நாட்டின் ஏற்றுமதி-இறக்குமதி தடை செய்யப்படுமென ,கொழும்பு துறைமுக தொழிற்சங்க கூட்டமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே முஸ்லிம் வர்த்தகர்களுக்கு எதிராக, பல வன்முறைச் சம்பவங்கள் தென் பகுதியில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக கடந்த 28 ஆம் திகதியன்று பெப்பிலியா பகுதியிலுள்ள முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான 'பேஷன் பக்' என்கிற கடை, வன்முறைக் கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்களில் பொருட்களை கொள்வனவு செய்யக்கூடாது என்கிற பரப்புரையை, பேரினவாத அமைப்புக்கள் கிராமங்கள் தோறும் முன்னெடுப்பதாக தகவல்கள் வருகின்றன.

இவைதவிர, அமெரிக்கத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட 'வட மாகாணசபைத்தேர்தல்' நடைபெறக்கூடாதெனவும், அது 'தமிழீழத்திற்கு வழி சமைக்கும்'என்பதனை முன்வைத்து, சிங்களக் கடும்போக்குவாதிகளால் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நிகழ்த்தப்பட்டுள்ளது.

பொதுபல சேனா என்கிற அமைப்பு இப் போராடங்களில் முன்னணி வகிப்பதோடு, பௌத்த சிங்களப் பேரினவாத சிந்தனை கொண்ட, சிங்கள ராவய, ஜாதிக ஹெல உறுமய மற்றும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் என்பவையும் அதில் இணைந்து கொள்கின்றன.

தமிழ் மக்களிற்கு எந்த குறைந்த பட்ச அரசியல் தீர்வினையும் கொடுப்பதற்கு இந்த கடும்போக்குவாதிகள் மறுப்பதுதான் இன்றைய இலங்கை அரசியலின் யதார்த்த நிலையாகும்.

இதனைப் புரிந்து கொள்ளாமல், வட-கிழக்கு இணைப்பு, 13 வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தல் என்பவற்றினை மட்டும் அடிப்படையாகக் கொண்டு தமிழக மாணவர்கள் தமது அரசியல் கோரிக்கைகளை முன் வைக்க வேண்டுமென எதிர்பார்க்கக்கூடாது.

கிளிநொச்சியிலுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் காரியாலயத்தின் மீதும், 'உதயன்' நாளிதழின் கிளை அலுவலகம் மீதும், கும்பலொன்றால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட தாக்குதல்கள், தமிழ் மக்களின் அரசியல்-ஊடக உரிமை எவ்வாறு அச்சுறுத்தலுக்கு உள்ளாகிறது என்பதற்கான சில உதாரணங்களாகும்.

அமெரிக்காவின் இரண்டாவது மென் தீர்மானம் ஏற்படுத்தும் தாக்கமும், தமிழக எழுச்சியும் சேர்ந்து, பேரினவாத சிந்தனையை பலப்படுத்த வேண்டிய அவசியத்தை அதிகார வாசிகளுக்கு உருவாக்கியுள்ள தென்றும் கூறலாம்.

அதுமட்டுமல்லாது, ஆட்சியிலுள்ள கட்சிக்குள் பிளவுகள் உருவாகுவதைத் தடுப்பதற்கும் இந்த சிங்களப் பேரினவாத எழுச்சி உதவுமென ஆட்சியாளர்கள் எதிர்பார்க்கலாம்.

தற்போதைய ஆட்சியாளர்களின் பலமென்பது முப்படை மற்றும் அவர்களது கட்சி என்பவற்றை ஆதாரமாகக் கொண்டதாக இருக்கும். ஆனால் 'புலிகளை போரில் வென்றோம்' என்கிற உரிமையைக் கோருவதற்கு பொன்சேக்கா உட்பட பலர் இருக்கின்றார்கள்.

ஆகவே அரசின் பலவீன பக்கங்கள் என்று பார்த்தால், அது கட்சியாகவும் முப்படையாகவும் மட்டுமே இருக்கும்.

ஐ.நா தீர்மானத்தால் படைத்துறையினர் மத்தியில் ஏற்படும் பதட்டமும், சந்திரிகாவின் வருகையால் ஆளும் கட்சிக்குள் உருவாகும் சிதைவும் சேர்ந்து, கடும்போக்குவாதிகளின் செயற்பாடுகளை அனுமதிக்க வேண்டியதன் அவசியத்தை அரசிற்கு உணர்த்துகிறது.

இப்போராட்டங்களை அரசே தூண்டிவிடுகிறது என்று நாம் சொல்வதை, இலங்கையின் ஊடக தர்மம் அனுமதிக்குமாவென்று தெரியவில்லை.

## அரசியல் பார்வை

**இதயச்சந்திரன்**

அதேவேளை, வடக்கிலுள்ள படைதளங்களிற்கு பாதுகாப்புச் செயலாளரும் , இராணுவத் தளபதியும் அடிக்கடி விஜயம் செய்வதும், படைத்துறையினருக்கான பிரத்தியேக குடியிருப்புக்களை பரந்தளவில் நிர்மாணிப்பதும், இதனை உறுதிப்படுத்துகிறது. அத்தோடு ஆளும் கட்சி மட்டத்தில் சந்திரிகாவின் அரசியல் வரவால் உடைவுகள் ஏற்படலாம் என்கிற சந்தேகம் எழுவதைக் காணலாம்.

நீதித்துறையால் பாதிப்படைந்த சிராணி பண்டாரநாயக்கா, தீப்பந்தச் சின்னம் பெற்ற பொன்சேக்காவின் மனைவி அனோமா மற்றும் முன்னாள் சனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா ஆகிய மூவரும் இணைந்து இரகசியப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதாகவும் செய்திகள் கசிகின்றன.

ஆகவே இத்தகைய உள்முரண்பாடுகள் ஊதிப்பெருக்காமல் இருப்பதற்கு, இந்த சேனாக்களும், தேசப்பற்றுக் கூட்டங்களும் அரசிற்குத் தேவை போல் இருக்கிறது.

ஆனால் ஏனைய தேசிய இனங்களின் மீது இச் சக்திகள் மேற்கொள்ளும் வன்செயல்கள் , ஏற்கனவே நலிவடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை மேலும் மோசமாகப் பாதிக்கும் என்பதை உறுதிபடக் கூறலாம்.

கடந்த இரண்டு மாதங்களில் இலங்கையின் ஏற்றுமதி 12 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் [EDB] நிறைவேற்றுப்பணிப்பாளர் கலாநிதி. யூசுப் மரைக்கார் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் ,சர்வதேசச் சந்தையின் தேக்க நிலை, ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதாரப் பின்னடைவு மற்றும் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகை இழப்பால் ஆடை ஏற்றுமதியில் ஏற்பட்ட பாதிப்பு என்பன போன்றவையே இந்த வீழ்ச்சிக்கான முதன்மைக் காரணிகளென அவர் குறிப்பிடுகின்றார்.

ஆகவே இத்தகைய உள் முரண்பாடுகள் ஊதிப்பெருக்காமல் இருப்பதற்கு, இந்த சேனாக்களும், தேசப்பற்றுக் கூட்டங்களும் அரசிற்குத் தேவை போல் இருக்கிறது.

2012 இன் ஏற்றுமதி 10 பில்லியன் அமெரிக்க டொலர்கள். இந்த வருடம் அத்தொகை 12 பில்லியனாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மகிந்த சிந்தனையின் அடிப்படையில் 2015 இல் இத்தொகை 15 பில்லியனாக, 2020 இல் 20 பில்லியனாக உயர்வடையுமென மதிப்பீடுசெய்யப்பட்டாலும்,பூகோள அரசியல் மற்றும் நல்லாட்சி என்கிற சில காரணிகள் வகிக்கும் பாகம் இதனை நிர்ணயம் செய்யுமென சபையின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கூறுகின்றார்.

இவைதவிர கென்யா, சீனா வரிசையில், தேயிலை ஏற்றுமதியில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ள இலங்கையின் நிலை சிக்கலான நிலைமையினை எதிர்நோக்குவதைக் காணலாம். தேயிலை வர்த்தக ஒத்துழைப்பு குறித்து உரையாட , பிரதி பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் எர்ல் குணசேகர , ஜனவரி மாதம் சீனாவின் ஹுனான் மாநிலத்திற்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார். அது குறித்து எட்டப்பட்ட உடன்பாடு என்னவென்று இன்னமும் வெளியாகவில்லை.

அதேவேளை, ஈரானின் மீது அமெரிக்க விதித்துள்ள பொருளாதாரத்தடையால் , ஈரானிற்கான இலங்கையின் தேயிலை ஏற்றுமதியும் பாதிப்புற்றுள்ளது.

அடுத்த இரண்டு வருடங்களுக்கு 30 மில்லியன் கிலோகிராம் தேயிலையை ஈரானிற்கு ஏற்றுமதி செய்யும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினை அண்மையில் இந்தியா மேற்கொண்டது போன்று, இலங்கையால் செய்ய முடியாதுள்ளது.

ஆக மொத்தம் , ஏற்றுமதி வர்த்தகம் மிகப் பெரிய சிக்கல்களை எதிர்கொண்டுள்ள நிலையில், தமிழ்நாட்டு எதிர்ப்பு, போலியான ஏகாதிபத்திய எதிர்ப்பு, சிறுபான்மைத் தேசிய இனங்கள் மீதான வெறுப்பு என்பவற்றை கையிலெடுத்து, பேரினவாத வெறியூட்டி, அதிகாரத்தை தக்க வைக்கலாமென கற்பிதம் கொண்டால், தமிழக மாணவர்களின் முக்கிய கோரிக்கையை நோக்கியே உலக மக்களின் கவனம் திரும்பும்.



# பாரதிராஜாவுடன் மாணவர் எழுச்சி பற்றிய ஒரு சந்திப்பு



சுகி

*(ஒரு பேப்பருக்காக)*

பதினாறு வயதினிலே முதல் கொண்டு புதிய வார்ப்புக்கள், அலைகள் ஓய்வதில்லை, மண் வாசனை, புதுமைப்பெண், முதல்மரியாதை, வேதம் புதிது, போன்ற பெயர் போன திரைப் படங்களின் இயக்குனராக பாரதிராஜாவை ஒரு பேப்பரின் சார்பில் சந்தித்து அளவளவாகும் சந்தர்ப்பம் கிடைத்தது. பிரயாணக்களையும், பல நிகழ்ச்சி நிரலின் நேர நெருக்கடியிலும் எம்மைக் கண்டதும் மிகவும் உற்சாகமாக, இயல்பாக உரையாடினார்.

மாணவர் போராட்டங்கள் மும்முரம் பெற்றிருக்கும் இவ்வேளையில் அப்போராட்டத்தை வலுசேர்க்கும் வகையிலும், அவர்களின் போராட்டத்தின் நியாயத்தன்மையையும், இந்தியாவினதும், உலகத்தினதும் பாராமுகம் பற்றிய தமிழர்களின் ஆற்றாமையையும் எடுத்தியம்பும் வகையில் சிறந்த திரைப்பட இயக்குனர் என்ற ரீதியில் அவரின் பார்வை பற்றி குறிப்பிடும் போது, அவர் சில வருடங்களுக்கு முன்பு ஒரு படப்பிடிப்புக்காக ஈழத்திற்கு சென்றிருந்தாகவும், திருக்கோணமலையில் உள்ள நிலாவெளி கிராமம் உட்பட பல கிராமங்களுக்கு சென்றிருந்ததாகவும் அப்போதும் ஈழத்தமிழ் பிரச்சனைபற்றி ஒரு திரைப்படம் இயக்கும் வண்ணம் தன்னிடம் கேட்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார். அப்போது தான் தனது இரண்டு பிள்ளைகளுக்கும் திருமணமான பிறகு அது பற்றி பலமாக சிந்திப்பேன் என்று கூறியதாகச் சொன்னார். இப்போ அவரின் பிள்ளைகளுக்கு திருமணம் ஆகி பேரக்குழந்தைகளும் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

போராட்டங்களின் மூலம் தட்டமுடியாத மனசாட்சிகளை அதே போராட்டத்தின் கருப்பொருளை தரமான திரைப்படமாக, கலப்பும் மிகையும் இல்லாமல், உள்ளதை உள்ளபடியே இயல்பாக தரும் போது அது காலத்தின் கண்ணாடி போன்று வரலாறு பகிர்வதோடு, அது தரமாக இருக்கும் இடத்து, பிற மொழிகளிலும் மொழிபெயர்த்து பல தரப்பட்ட மக்களையும் அடையும் வாய்ப்பு உள்ளது. இது எமக்கு நடக்கும் அழிவைப்பற்றி அறியாமல் தொலைக் காட்சியில் வரும் தொடர் நாடகங்களை பார்த்து பிழியப் பிழிய அழும் எம்மக்களுக்கும் இது பொருந்தும் அவர்களின் மனசாட்சியை தட்ட வேண்டும் என்றால், முள்ளை முள்ளால் எடுப்பது போல இன்னொரு திரைப்படத்தால்தான் முடியும்!

ஈழத்தமிழர் பற்றி திரைப்படம் எடுக்கும் போது லாபத்தையோ, பணம் பண்ணுவதையோ முக்கிய குறிக்கோளாக இல்லாது ஒரு மிகத்தரமான யதார்த்த நிலையை பிரதிபலிப்பதாகவும், அது ஒரு வரலாற்று பதிவாக வரும் வகையில், பிற மொழி பேசுபவர்களும் விளங்கிக் கொள்ளும் வகையில், எளிமையாக சரியான தகவல்களை பகிர்ந்து கொள்வதாக இருக்கவேண்டும்.

மேலும் ஈழப்போராட்டம் பற்றிய மாணவர் எழுச்சி பற்றி அவர் குறிப்பிடும் போது, இப்படியான ஒரு எழுச்சியை வேண்டியே முத்துகுமார் தனது மேன்மையாக உயிரை தீயிட்டு கொழுத்திக்கொண்டான். இறுதியாக எழுதிய கடிதத்தில் கூட தனது உடலில் இருந்து எழும் தீ மாணவர்களுக்கு வழிகாட்டும் தீ பந்தமாக தமிழ் நாடு முழுவதும் பரவி தமிழ் மக்களை அழிவில் இருந்து காக்கட்டும் என்றான். ஆனால் அவனின் கனவை மாணவர்கள் புரிந்து கொண்டாலும் அன்நேரத்தில் ஆட்சி பீடங்களில் இருந்தவர்களால் அது கைகூடாமல் போய்விட்டது. இப்போது நடப்பது போல அப்போது நடந்திருந்தால் எவ்வளவோ உயிர்களை அழிவில் இருந்து காப்பாற்றி இருக்கலாம்.

இப்போது கூட மாணவர்கள், தாம் ஒரு கட்சியையோ, குழுவையோ சேர்ந்தவர்கள் இல்லை. பொது மகன், தமிழன் என்ற ரீதியில் தெருவில் இறங்கியுள்ளோம். அவர்களோடு சேர்ந்து ஆதரவளிக்க கட்சியைக் கடந்து தன் மானமுள்ள மனிதனாக வாருங்கள் என்கிறார்கள். ஆனால் இந்திய அரசியல் வாதிகளோ, கட்சிகளோ அவர்களின் தோளில் இருக்கும் கட்சி துண்டை கழற்றி வைத்துவிட்டு வீதியில் இறங்கி மாணவர்களோடு மாணவர் போல நின்று தோள் கொடுக்கும் எண்ணம் இல்லை. நீண்ட நாளைக்கு அல்ல கொஞ்ச நாளைக்கு தன்னும் அப்படி இருப்பதற்கு கூட மனமில்லாமல் அரசியல் வாதிகள் தோளில் கட்சி துண்டோடு பிறந்தது போல நடக்கிறார்கள்.

ஈழத்தமிழர்களுக்கு நடந்த இனப்படுகொலை, தனிய ஈழத்தமிழரின் பிரச்சனை அல்ல, அது தமிழரின் பிரச்சனை. இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் என எங்கெங்கெல்லாம் தழர்கள் பரந்து வாழ்கிறார்களோ அங்கெல்லாம் உள்ள தமிழர்களால் அது பேசப்பட வேண்டும். எல்லா தமிழர்களும் ஒருங்கிணைந்து தமிழர்களுக்கு நடந்த கொடுமையின் தாத்பரியத்தை மற்ற இனத்தவர்களுக்கும் சொல்லி அவர்களையும் உள்வாங்க வேண்டும் என்றார்.

உண்மைதான் முத்துகுமாரனின் தியாகம் அப்போதைய ஆட்சியில் இருந்த சுயநலவாதிகளின் மாயஜால வார்த்தைகளாலும், பொய்யான வாக்குறுதிகளாலும் எதிர்பார்த்த எழுச்சிக்கு வித்திடாமல் போய்விட்டது. ஒன்று மட்டுமா ஒன்றன் பின் ஒன்றாக எத்தனை தீக் குளிப்புக்கள். இத்தனை இழப்புகளுக்குப் பின்னும் தமிழன் திருந்தா விட்டால் வரலாறு எம்மை மன்னிக்காது. எமது சந்ததிகள் எமது வரலாற்றை படிக்கும் போது எம்மை சபித்துக் கொள்வார்கள். தமிழ்நாட்டு மாணவர்களின் கோரிக்கை புலம் பெயர் தமிழர்களுக்கும் ஒரு விதத்தில் பொருந்துகிறது. தேசியம், தேசநலன், என்று வருகின்ற போது மட்டும் தன்னும், எமக்கிடையே உள்ள முரண்களை களைந்து விட்டு நாம் தமிழன், ஒருமனிதாபிமானமுள்ளவன் என்ற ரீதியில் போராட்டத்தில் கைகோர்க்க முன் வரவேண்டும். எல்லோருமே செயற்பாட்டாளராக மாறவேண்டும்.

**தமிழ்நாட்டு மாணவர்களின் கோரிக்கை புலம் பெயர் தமிழர்களுக்கும் ஒரு விதத்தில் பொருந்துகிறது. தேசியம், தேசநலன், என்று வருகின்ற போது மட்டும் தன்னும், எமக்கிடையே உள்ள முரண்களை களைந்து விட்டு நாம் தமிழன், ஒருமனிதாபிமானமுள்ளவன் என்ற ஈதியில் போராட்டத்தில் கைகோர்க்க முன் வரவேண்டும்.**

செய்வது கடினம், செய்பவர்கள் மேல் சின்ன பிழையைக் கண்டு பிடித்து இணையத் தளத்தின் மூலம் அதை பெரிய செய்தியாகுவது சுலபம். எந்தச் செய்தியை எழுதும் போதும் இதனால் தற்போது தமிழரின் பிரச்சனைக்கு ஏதாவது விதத்தில் முன்னேற்றம் வருமா? ஆழிவா? ஆக்கமா? எது கூட உள்ளது? எனது ஈகோவிற்கு (மனதான்மைக்கு) தீனி போடுவதற்காகவா இதை எழுதுகின்றேன் என்று ஒரு கணம் சிந்தித்துவிட்டு பிரசுரித்தால் பல பிரச்சனைகள் பனிபோல மறைந்து விடும், அல்லாவிடில் ஒற்றுமை என்பதை தமிழர்கள், அகராதியில் மட்டும் தான் பார்க்கமுடியும்!


MASS GLOBAL SHIPPING
MASS GLOBAL SHIPPING
Sea - Air - Road & Ticketing , Serving all Communities
MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK
* Packers * Movers * Shippers
Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers
We Offer the Best Services than all the Other in the trade!
உங்கள் பொருட்களை ஆகாய தரை கடல் மார்க்கமாக பாதகாப்பாகவும் துரிதமாகவும் குறைந்த செலவிலும் அனுப்புவதற்கு நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.



Special rates for Containers and Machinery
4 Collection Points :
Harrow
Watford
Knightsbridege
Croydon
T-chest Box சென்னைக்கு அனுப்ப £40 மட்டுமே
ஒரு T-chest Box அனுப்ப £40 இரண்டு T-chest Box அனுப்ப £30
FREIGHT ONLY £15.00
FREIGHT AND BOX £15.00
(Volume 4.5Cu.ft)
Wooden boxes available
Call - 0208 3862314
Hot Line 24/7- 079 4010 8177
Local Collection Charge £10.00 upto Hounslow.
Within M1 collection charge £15.00 All other area's we will offer the best rates
MASS GLOBAL SHIPPING
N0 58 THE ARCHES, HARROW, HA2 8AA
E-Mail: info@massshipping.com, Web : www.massshipping.com
*Condition Apply - No hidden charges - No bogus promotions



We offer our clients expert and focused legal advice, quality, care and efficiency
- Residential Property and commercial property (WE CAN ACT FOR ALL THE LENDERS)
- Immigration Law
- Intellectual Property
- Company law
- Landlord and Tenant
- CRIME (Business Immigration and Regulatory)
- Outsourcing Law
- Partnership Law
- Contract Law
- Serious Fraud

Residential Property and Commercial Property
Immigration
Intellectual Property
Company Law
Landlord and Tenant
Outsourcing Law
Serious Fraud
Partnership Law
Contract Law
KTS LEGAL Solicitors & Advocates
KTS Legal Solicitors & Advocates
Tel:020 8367 0505
Fax:020 8367 0404
Nicholos House, 12 River Front, Enfield, EN1 3TF
Email: info@ktslegal.co.uk | Web:www.ktslegal.co.uk


ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர, ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: ______________________

Address : ______________________

______________________

______________________

Postcode: ______________________

Telephone: ______________________

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், G11, Lombard House, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# இன அழிப்புக்கு இந்திய அரசு எவ்வைகையில் உதவுகின்றது ?



**S.G ராகவன்**

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான இந்தியாவின் வீடமைப்புத் திட்டம், வன்னியில் சிங்களவர்களைக் குடியேற்றுவதற்கும் பயன்படுத்தப்பட்டு வருவதை, இலங்கை இராணுவத்தின் வன்னிப் படைத் தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கையில் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிரான 'இந்தியாவின்' போரைத்தான் தாம் நடத்தியதாக இலங்கை அதிபர் ராஜபக்சே பகிரங்கமாக கூறியிருக்கிறார் இவை செய்திகள் தான்.

## இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்களின் தமிழர் விரோத போக்கு காரணமாக ஒரு இனத்தை அழிக்கும் கொடிய செயல் திட்டத்தை இலங்கை அரசுடன் சேர்ந்து இந்திய அரசு செய்கிறது.

தற்போது வடகிழக்கில் நடப்பவை என்ன? இலங்கை அரசு மிகத் தீவிரமாக இன அழிப்பை நடாத்தி வருகின்றது, இவ்வின அழிப்புக்கு இந்திய அரசு எவ்வைகையில் உதவுகின்றது என்பதை பார்ப்போம்

- இலங்கை அரசு வடகிழக்கில் தமிழர் தாயகத்தில் அரச காணிகள், தனியார் காணிகள் என்பவற்றை அபிவிருத்தி என்ற போர்வையில் பறிமுதல் செய்து இராணுவத்தினரையும் சிங்கள மக்களையும் குடியேற்றுகின்றனர்
- வலுக்கட்டயாமாக தமிழர்களை அவர்களின் வாழ்விடங்களில் இடம் பெயரச் செய்து, அவர்களின் காணிகளை கைப் பற்றுகின்றனர் .
- இலங்கை அரசு செய்த, செய்து கொண்டிருக்கின்ற இனப் படுகொலை, இன ஒதுக்கல் கொள்கை காரணமாக நாட்டை விட்டு புலம் பெயர்ந்து சென்ற, சென்று கொண்டிருக்கின்ற தமிழர்களின் காணிகளை இலங்கை அரசு, மற்றும் சிங்களப் படைகள் அடாத்தாகவும், இலங்கை அரசின் தமிழர் விரோத சட்டங்கள் மூலமாகவும் பறிமுதல் செய்கிறது.
- தமிழர் காலம் காலமாக வழிபட்டு வந்த கோவில்கள் கலாச்சார வாழ்விடங்கள் திட்டமிட்ட வகையில் தமிழர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப் படுகிறது.
- வடக்கு கிழக்கு மாகாணங்களை இரண்டாக பிரித்து வெலிஓயா எனும் புதிய மாவட்டத்தை தமிழர்களின் பூர்வீக நிலமான முல்லைத்தீவு, திருகோணமலை போன்ற மாவட்டங்களை இணைத்து அங்குள்ள பெருவளவு தமிழர்களை விரட்டி அடித்தும் (முள்ளிவாய்க்கால் படுகொலை மற்றும் 1984 இல் முல்லைத்தீவு மணலாற்றில் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த இனப் படுகொலையில் இப்பகுதிகளில் பூர்வீகமாக வாழ்த்த தமிழ் மக்கள் பெருமளவில் கொல்லப்பட தற்போது எஞ்சி இருக்கும் தமிழ் மக்களின் காணிகளையும் சிங்கள அரசு பறிமுதல் செய்கிறது. அங்கு சிங்கள குடியேற்றங்களை செய்து வருகிறது.
- இப்பொழுது தீவிரமாக தமிழர் தாயகத்தில் சிங்கள குடியேற்றம் நிகழந்துவரும் பிரதேசங்கள் மாவட்ட அடிப்படையில் தருகிறேன்.

*யாழ்ப்பாண மாவட்டம்* - மாதகல், தெல்லிப்பளை, பலாலி, காங்கேசன்துறை, மயிலிட்டி, வளலாய், மாவிட்டபுரம், கைதடி, ஆனையிறவு, வடமராச்சி கிழக்கு, போன்ற பகுதிகளில் சிங்கள மக்கள் இரவோடு இரவாக நிரந்தரமாகக் குடியேற்றப்பட்டுவிட்டார்கள் இவர்களில் பெருமளவில்இராணுவத்தினரின் குடும்பங்களாகும் , இவ்வாறு குடியேற்றப்பட்ட சிங்கள குடியிருப்புகளில் சிங்களப் பாடசாலைகள், பௌத்த கோவில்கள், தபாலகங்கள் உட்பட்ட சகலவசதிகளும் அடங்கும். இப்பகுதிகளில் பூர்வீகமாக வாழ்ந்த மக்கள் அனைவரும் விரட்டப் பட்டு அகதிகளாக அநாதரவான நிலையில் உள்ளனர்.

*கிளிநொச்சி மாவட்டம்*- கிளிநொச்சி நகர், முழங்காவில், முறிகண்டி, மற்றும் சிங்களப் படைகள் நிலை கொண்டுள்ள முகாம்களில் நிரந்தர வீட்டுத் தொகுதிகள் அமைக்கப் பட்டு அங்கும் சிங்களவர்கள் குடியேற்றப் படுகின்றனர்.

*மன்னார் மாவட்டம்* - மடு , திருக்கேதீஸ்வரம் (சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடல் பெற்ற 2500 வருடங்களுக்கு மேற்பட்ட தமிழர் பிரதேசம்) மன்னார் மேற்கு பிரதேசம் என்பன தற்போது வேகமாக சிங்களக் குடியேற்றம் நிகழும் பிரதேசங்களாகும்.

*வவுனியா மாவட்டம்* - நெடுங்கேணி , மாமடு, கனகராயன் குளம், உட்பட இன்னும் பல பிரதேசங்கள் அரச ஆதரவுடன் தீவிரமாக சிங்கள மக்கள் குடியேற்றப் படுகின்றனர்.

*முல்லைத்தீவு மாவட்டம்:* கொக்கிளாய், நாயாறு, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை , தண்ணீரூற்று, இரணைமடு, மற்றும் முல்லைத்தீவு கடலோரப் பிரதேசங்கள் போன்ற தமிழர் பிரதேசங்கள் சிங்களவர்கள் குடியேற்றங்கள் அரச ஆதரவோடு நடைபெறுகின்றன.

*திருகோணமலை மாவட்டம் :* மாவட்டத்தின் பெரும்பான்மை பிரதேசங்கள் ஏலவே ஆக்கிரமிக்கப் பட்டுவிட்டன, ஏனைய பகுதிகளிலும் தொடர் குடியேற்றங்கள் நடை பெறுகின்றன.

*மட்டக்களப்புமாவட்டம் :* வாகரை, குடும்பிமலை போன்ற பிரதேசங்கள் மிகத் தீவிரமாக சிங்கள குடியேற்றம் நடைபெறுகின்றது. இங்கு ஏலவே தமிழர் பிரதேசம் ஒன்று புனானை என சிங்கள பெயர் மாற்றப் பட்டு அங்குள்ள தமிழர்கள் கொள்ளப் பட்டு துரத்தி அடிக்கப் பட்டு விட்டனர்.

*அம்பாறை மாவட்டம் :* இம்மாவட்டம் முழுவதுமே தற்போது திகாமடுல்ல என சிங்கள பெயராக மாற்றப் பட்டு எஞ்சி இருக்கும் தமிழ் மக்களின் பூர்விக நிலங்கள் பறிக்கப் பட்டு கொண்டிருக்கிறது. அதில் தற்போது பொத்துவில் என்ற தமிழ் தொகுதி சிங்கள மயமாக மாற்றப் படுகிறது . ஏலவே பாணமை எனும் தமிழ் பிரதேசம் சிங்கள மயமாக்கப் பட்டு விட்டது அங்குள்ள தமிழர்கள் பயத்தின் காரணமாக வலுகட்டாயமாக சிங்களவர்களாக மூன்று தலைமுறைக்கு முதல் மாற்றப் பட்டுவிட்டனர் இங்குள்ள தமிழர்களில் வயது முதிந்தவர்களுக்கு மாத்திரம் தமிழ் தெரியும். அவர்களது பிள்ளைகள் சிங்களப் பெயரோடு தமிழ் தெரியாதவர்களாக மாறிவிட்டனர்.

**இந்திய அரசு எவ்வைகையில் உதவுகின்றது?**

இந்தியாவின் புகழ் 50000 வீட்டுத் திட்டம், இலங்கை, இந்திய கூட்டு சதித் திட்டம் என்பதே உண்மை ஏனெனில் இவ் வீட்டுத் திட்டத்தில் 75 சதவீதமானவை சிங்கள ராணுவ குடியிருப்புகளுக்கும், சிங்கள குடியிருப்புகள் கட்டவுமே பயன் படுகின்றன. இதில் வெளிப் படையாக மடு, நெடுங்கேணி, மணலாறு மற்றும் வவுனியா என்பவற்றில் சிங்கள வடமாகாண ஆளுநரின் நெறிப்படுத்தலில் சிங்கள குடியேற்றம் இந்திய அரசின் வீட்டுத்திட்ட நிதி உதவியுடன் நடைபெறுகின்றது. இவ்விடயம் தமிழ் அரசியல் வாதிகளால் இந்திய தரப்புக்கு தெரியப் படுத்தியும் அவர்கள் அதனை கண்டு கொள்ளவில்லை இந்தியாவின் தூதுவர், உதவித் தூதுவர் என்போருக்கு இவ்விடயம் முறைப்பாடு செய்யப் பட்டும் எந்த மாறுதலும் இல்லை.

இந்தியாவும் இலங்கையும் சேர்ந்து இலங்கை வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழர் பெரும் பான்மையை அழித்து அவர்களை சிறுபான்மை ஆக்கும், அல்லது முற்றாகவே தமிழர்களை இலங்கையில் இருந்து ஒழிக்கும், திட்டம் இவர்களிடம் இருப்பதாகவே தெரிகிறது.

## இதனை தமிழ் நாட்டு தமிழர்கள் எவ்வித அரசியல் சாயமும் அற்று, வன்முறையற்று, தமிழ் நாட்டையும் தாண்டி இந்தியா முழுவதும் முன்னெடுத்துச் சென்று இலங்கையில் தமிழ் இனப்படுகொலை இந்திய அரசின், பூரண உதவியுடன் நடைபெறுகின்றது என்பதை அம்பலப் படுத்தி அதனை நிறுத்தி ஈழத் தமிழர்களுக்கு உரிமையை வாங்கி கொடுப்பதே சிறந்த செயற்பாடாக அமையும்.

இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்களின் தமிழர் விரோத போக்கு காரணமாக ஒரு இனத்தை அழிக்கும் கொடிய செயல் திட்டத்தை இலங்கை அரசுடன் சேர்ந்து இந்திய அரசு செய்கிறது. இதன் மூலம் இந்திய அரசு அடையப் போகும் நன்மை எதுவும் இல்லை. இவை எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும். இந்தியா நினைப்பது ஒன்று மாத்திரமே ! தமிழ் நாட்டுக்கு அருகில் இலங்கையில் தமிழர் பலம் பொருந்தி இருப்பதை விரும்பவில்லை. இந்த தெளிவற்ற தமிழர் விரோத மனப் பான்மையே இலங்கையில் தமிழர்களை இன அழிப்பு செய்ய இந்திய அரசு தூண்டுகிறது.

இதனை தமிழ் நாட்டு தமிழர்கள் எவ்வித அரசியல் சாயமும் அற்று ,வன்முறையற்று,தமிழ் நாட்டையும் தாண்டி இந்தியா முழுவதும் முன்னெடுத்துச் சென்று இலங்கையில் தமிழ் இனப் படுகொலை இந்திய அரசின், பூரண உதவியுடன் நடைபெறுகின்றது என்பதை அம்பலப் படுத்தி அதனை நிறுத்தி ஈழத் தமிழர்களுக்கு உரிமையை வாங்கி கொடுப்பதே சிறந்த செயல் பாடாக அமையும்.

*நன்றி: இனியொரு*




Challenger Services
Group Holiday and Tour Services - Tours for 2013/14

April 19th 2013
Bulb fields Holland Two Nights £ 225

May - Benneux, Belgium
one day trip to Benneux, Belgium
(24th to 26th )
Four days Two nights Exeter outing
£60.00

June : china Beiging & xian
சீனா, பேஜிங்,
(சீனா பெருஞ் சுவர்) சியோன்

July 13:- Lourdes
லூர்து மாதா யாத்திரை
18th - 22nd - £250.00 (BY Coach)

Sept 13:- Lourdes
லூர்து மாதா யாத்திரை
07th - 10th - £360.00 (BY Air)

Sep/Nov 2013
Main Jothylinga Program
18 Days £2450.00
முக்கிய 12 ஜோதிலிங்க யாத்திரை

September 19th 2013
North India (£1399.00)
Varnasi (£1450.00) Late booking
வட இந்திய காசி யாத்திரை
டெல்லி, ஹரித்துவா, ரிசிகேஸ்,
காசி விஸ்வநாதன், தாஜ் மஹால்,
ஜெய்பூர் அரண்மனைகள்

November 2013
Viatnam,Cambodia
& YANGON (£2200.00)
வியட்னாம், கம்போடியா, பர்மா.
மோஸ்கோ, சென் பிட்ரேஸ்பேர்க்

Pilgrimage Tours
Late booking may increase the cost of the trip due to the varying value of Sterling (£)

A.E.Joseph 62, Canadian Avenue, Catford, London, SE6 3BP.
Tel/Fax: 020 8697 1608 Mobile: 07940782282 Email: aejoseph90@hotmail.com

# ஐ.பி.எல் கிரிக்கெட்டும் இந்திய பேரினவாதத்தின் அசிங்க முகமும்

வேல் தர்மா
(ஒரு பேப்பருக்காக)

ஐ.பி.எல் துடுப்பாட்டம் தொடர்பாக கடுமையான விவாதங்கள் வட இந்தியாவில் நடந்தன. ரைம்ஸ் ஒஃப் இந்தியா பத்திரிகையில் ஜெயலலிதாவின் முடிவு பற்றிய செய்தி வெளிவிடப்பட்டு அதற்கு காரசாரமான பின்னூட்டங்கள் இடப்பட்டன. ஒரு இசுலாமியர் ‘இப்போது 80 மில்லியன் தமிழர்களுக்குத் தெரிந்திருக்கும் ஏன் ஜின்னா எல்லாப் பார்ப்பனர்களையும் துரத்திவிட்டு பாக்கிஸ்த்தானை தனிநாடாக பிரித்தார் என்று’ எனப் பின்னூட்டமிட்டிருந்தார்.

தனது நாற்பதிலும் வெற்றி பெறும் இலட்சியத்தைக் கருத்தில் கொண்டு ஜெயலலிதா மீண்டும் ஒரு துணிச்சலான முடிவை எடுத்து இலங்கையைச் சேர்ந்த வீரர்கள், நடுவர்கள், அதிகாரிகள் மற்றும் களப்பணியாளர்கள் யாரும் பங்கேற்க மாட்டார்கள் என்று போட்டி அமைப்பாளர்கள் உறுதி அளித்தால் மட்டுமே, ஐ.பி.எல் போட்டிகளை தமிழ் நாட்டில் நடத்த தமிழக அரசு அனுமதி அளிக்கும் என்று இந்தியப் பிரதம மந்திரிக்குக் கடிதம் எழுதியுள்ளார். NDTV யில் ஜெயலலிதாவின் அதிரடி முடிவு தொடர்பாகக் காரசாரமான விவாதம் நடைபெற்றது. அதை NDTVயின் சிறிநிவாசன் ஜெயின் நெறிப்படுத்த காங்கிரசுக் கட்சியின் மாநிலங்களவை(ராஜ்ய சபை) உறுப்பினர் அபிஷேக் சிங்வி, துடுப்பாட்ட வீரர் முத்தையா முரளீதரன், இந்து ராம், அவுட்லுக் பத்திரிகை ஆசிரியர் கிருஷ்ணா பிரசாத், நடிகை குஷ்பு, புது டில்லிக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவாசம், முன்னாள் இந்தியக் துடுப்பாட்ட வீரர் அதுல் வாசன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களில் ஒருவர் கூட தமிழர் இல்லை. நடிகை குஷ்பு மட்டும் தமிழ்நாட்டில் இருந்து கலந்து கொண்டார். அவர் ஜெயலலிதாவின் செயலை ஆதரிக்கவில்லை. அவரைத் தவிர மற்ற எல்லோரும் ஜெயலலிதாவின் செயலை எதிர்ப்பவர்களாக இருந்த போதிலும் நிகழ்ச்சியை நெறிப்படுத்திய NDTVயின் சிறிநிவாசன் ஜெயின் தொடக்கத்தில் இருந்து முடியும் வரையும் ஜெயலலிதாவின் செயலை கடுமையாக எதிர்ப்பவராகவே இருந்தார். அவரது எதிர்ப்பு மற்றவர்களின் எதிர்ப்பிலும் பார்க்க பல மடங்கு கடுமையாக இருந்தது. அவர் தமிழ் மாணவர்களின் கிளர்ச்சி தொடர்பாகக் கதைக்காமல் முடி மறைப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். ஆனால் தமிழ்நாட்டில் சட்டமும் ஒழுங்கும் முழுமையாக சரிந்து விழுந்துவிட்டது (total collapse of law and order) என்பதை அவர் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார். சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் இலங்கையில் போர் முடிந்த பின்னர் மக்கள் அமைதியாக வாழ்கின்றனர் என்றார். தனக்கு ஒரு தமிழனாக ஒரு போதும் பிரச்சனை இருந்திருக்கவில்லை என்றார். அவரது தகப்பனது பிஸ்கட் தொழிற்சாலை 1977ம் ஆண்டு சிங்களக் காடையர்களால் அடித்து நொறுக்கப்பட்டு எரியூட்டப்பட்டதை முரளி மறந்து விட்டாரா? ஆரம்பக் காலத்தில் அவர் இலங்கை அணியில் இடம் பிடிக்க பட்ட சிரமத்தையும் முரளி மறந்து விட்டார். அர்ஜூண ரணதுங்க முரளியைப் பிடிக்காத ஒருவராக இருந்ததையும் பின்னர் முரளியின் அபரிமித திறமையைக் கண்டு அவரை இலங்கை அணியில் இணைத்துக் கொண்டதையும் முரளி மறந்துவிட்டார்.

### ◆ தமிழ்நாடு சட்டசபைத் தீர்மானம் சட்ட விரோதமானதாம்.

கருணாநிதி ஆளும் கூட்டணியில் இருந்து வெளியேறியது, ஜெயலலிதா தமிழ்நாட்டில் சிங்களவர்கள் ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றுவதைத் தடை செய்தது ஆகியவற்றிலும் பார்க்க வட இந்தியர்களை அதிகம் உலுக்கியது தமிழ்நாடு சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட இலங்கைத் தமிழர்கள் தொடர்பான தீர்மானம். பிரபல ஊடகவியலாளரான பி ஜீ வேர்கீஸ் என்பவர் டெக்கான்ஹெரால்ட் பத்திரிகையில் 03-04-2013-ம் திகதி எழுதிய கட்டுரையில் தமிழ்நாட்டு மாணவர்களின் எழுச்சி, சட்டசபைத் தீர்மானம் போன்றவை நாடுகளுக்கிடையிலான சிநேக பூர்வ உறவு தொடர்பான மனித உரிமைக்கான பிரகடனத்தின் 19(2) இற்கு விரோதமானது என்று எழுதினார். பிஜீவேர்கீஸ் தமிழ்நாட்டில் நடப்பவை இணைப்பாட்சித் தத்துவத்திற்கு முரணானது என்று வதாடுகிறார். இணைப்பாட்சி என்பது எல்லா மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதா அல்லது பெரும்பான்மையினரின் கருத்துக்களுக்கு மட்டும் மதிப்புக் கொடுப்பதா? தமிழ் நாட்டினரல்லாத இந்தியர்கள் இலங்கைப் பிரச்சனை என்றவுடன் இந்திய வெளியுறவுக் கொள்கை என்பது பெரும்பானமை இந்தியர்களாலும் மத்திய அரசினாலும் மட்டும் முடிவு செய்யப்பட வேண்டியது என வாதாடுவது இந்திய பேரினவாதத்தின் அசிங்க முகமாகும்.

### ◆ வட இந்தியப்பேரினவாதிகள் முன்வைக்கும் சில கருத்துக்கள்

*1. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை என்பது தேசியநலனைக் கருத்தில் கொள்ள வேண்டும் ஒரு மாநில மக்களின் உணர்விற்காக அதை மாற்ற முடியாது.*

இந்தியா என்பது ஒரு அரசுகளின் ஒன்றியம். பல மாநிலங்களின் கூட்டமைப்பு என்ற வகையில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை எல்லா மாநிலங்களின் விருப்பு வெறுப்புக்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாவிடின் இந்தியா என்பது ஒரு பேரினவாதிகளின் அரசு மட்டுமே எனப் பொருள் படும். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் பாதிக்கப்பட்ட மாநிலம் தனக்கு என்று ஒரு வெளியுறவுக் கொள்கையை ஏற்படுத்துவதற்காக பிரிவினையை கையில் எடுக்கலாம்.

*2. வெளியுறவுக் கொள்கை நிபுணர்களால் தீர்மானிக்கப்படவேண்டும்.*

இந்தியாவைச் சூழவுள்ள நாடுகள் எதுவும் இந்தியாவிற்கு சார்பாக இல்லை. ராஜீவ் காந்திக்குப் பின்னர் இலங்கை, பங்களாதேசம், மாலை தீவு, நேப்பாளம் ஆகிய நாடுகள் இந்தியாவின் பிடியில் இருந்து வெகுதூரம் விலகிவிட்டன. இவையாவும் இந்த நிபுணர்களின் தவறுகள். இலங்கையில் 1983-ம் ஆண்டு இனக்கலவரம் நடந்து இலங்கையில் படைத்துறை கட்டுக்கடங்காமல் போன போது அப்போதைய இலங்கை அதிபர் ஜே ஆர் ஜயவர்த்தன பிரித்தானியா, சீனா, பாக்கிஸ்த் தான் ஆகிய நாடுகளை தனக்கு உதவியாகப் படையினரை அனுப்பும் படி வேண்டினார். எல்லா நாடுகளும் இந்தியாவைக் கேள் எனச் சொல்லி விட்டன. ஆனால் கடந்த இருபது ஆண்டுகளாக இஸ்ரேல், பாக்கிஸ்த்தான் உட்படப் பல நாட்டுப் படைகள் இலங்கையில் நேரடியாக போரில் பங்கு பெற்றிருந்தன. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை தீர்மானிக்கும் நிபுணர்களின் தவறு இது. இவற்றை அரசியல்வாதிகள் திருத்தவில்லை. இப்போது மக்கள்திருத்த வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

*3. இலங்கை சீனாவின் பக்கம் சாய்ந்துவிடும்.*

இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டை இந்திய வெளியுறவுத் துறை எடுத்தால் அது இலங்கையை சீனாவின் பக்கம் சாய்த்து விடும். இலங்கை ஏற்கனவே சீனாவின் பக்கம் சாய்ந்து விட்டது என்பதுதான் உண்மை. இதனால் தான் 2009-ம் ஆண்டு இலங்கைக்கு எதிராக மனித உரிமைக்கழகத்தில் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது நடுநிலை வகித்த அமெரிக்கா பின்னர் தானே தீர்மானங்களைக் கொண்டு வந்து இலங்கையை சீனாவிடமிருந்து மீட்கப் பார்க்கிறது.

*4. இந்தியா இலங்கைக்கு உதவாவிடில் சீனா உதவி செய்யும்.*

இலங்கைக்கு இந்தியா உதவி செய்யா விடில் சீனா உதவி செய்யும் என்ற பூச்சாண்டியைப் பலரும் முன்வைக்கின்றனர். ஆனால் இந்தப் போட்டிக்கு உதவும் நிலை எங்கு போய் முடியும் என்ற கேள்விக்கு என்ன பதில்? இந்தப் போட்டியில் வெல்லும் தகமை இந்தியாவிற்கு இருக்கிறதா? பொதுநலவாய நாடுகளின் மாநாடு இலங்கையில் நடப்பதற்கு இந்தியா எல்லா முயற்ச்சிகளையும் செய்கிறது. பொதுநலவாய நாடுகள் அமைப்பில் சீனா இல்லை. அங்கு இந்தியா செய்யாவிட்டால் சீனாவால் செய்ய முடியாது. அங்கு யாருக்குப் போட்டியாக இந்தியா இலங்கைக்கு வக்காலத்து வாங்குகிறது? இலங்கைக்கான இந்தியாவின் உதவி 2007இல் இருந்து 2011வரை $298.1மில்லியன் அதேவேளை சீனாவின் உதவி $2.126பில்லியன். எந்த உதவியாளர் பக்கம் இலங்கை இருக்கும்? இலங்கையில் சீனாவின் நடவடிக்கைகள்:

Chinese engineers are building roads, railway lines, telecommunication links, dams, hospitals, expressways like the one between Colombo and Katunayake, stadiums, schools, hotels and power plants. Last year, Sri Lanka launched its first communications satellite with the help of China Great Wall Industry Corp, China's state-owned space technology firm. It has since signed a string of satellite deals with Sri Lanka. It's also helping build a space academy. Deals are being struck between the two countries to build telecommunication and information technology networks. The two have also pledged to improve their defence ties.

2012இல் இந்தியாவிற்கு விற்பனை செய்யவிருந்த நிலத்தை இலங்கை நிறுத்தி அதை சீனாவிற்கு விற்றுவிட்டது.

*5. வெறும் உணர்வுகளை வெளிநாட்டுக் கொள்கை கணக்கில் எடுக்கக் கூடாது.*

இந்திய வெளிநாட்டுக் கொள்கையில் தற்போது தமிழ்நாடும் மேற்கு வங்கமும் தாக்கத்தை ஏற்படுத்த முயல்கின்றன. மேற்கு வங்கம் பங்களாதேசத்துடனான நீர்ப்பங்கீட்டை எதிர்க்கிறது. மேற்கு வங்கத்தைச் சேர்ந்த திரினாமூல் காங்கிரசுக் கட்சியின் சௌகத்தா ரோய் (Saugata Roy) என்பவர் தமிழாடு வெறும் உணர்ச்சிக்காக வெளிநாட்டுக் கொள்கையை மாற்ற முயல்கிறது. மேற்கு வங்கம் பொருளாதாரக் காரணங்களுக்காக இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையை மாற்ற முயல்கிறது என்றார். அவர் அத்துடன் நிற்கவில்லை. ஒரு 13 வயதுச் சிறுவன் பதுங்கு குழியில் இருக்கும் ஒரு படத்தையும் சுடுபட்டு இறந்து கிடக்கும் ஒரு படத்தையும் வைத்துக் கொண்டு இந்திய வெளியுறவுக் கொள்கையை மாற்ற முடியாது என்றார். இலங்கையில் இந்தியாவின் உதவியுடன் கடந்த 25 ஆண்டுகளாக மூன்று இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டது வெறும் உணர்ச்சியோடு சம்பந்தப்பட்ட விடயம் அல்ல. இந்தியா தொடர்ந்து உதவிக் கொண்டிருந்தால் இன்னும் எத்தனை இலட்சம் பேர் கொல்லப்படுவார்கள்? வெளிநாட்டு கொள்கை என்பது இனக்கொலைக்கு உதவி செய்வதா?

*6. இலங்கையில் நடந்தது ஒரு இனக் கொலை அல்ல.*

சில இந்தியர்கள் ஒரு இனத்தை முழுமையாக அழித்தால்தான் அது இனக்கொலை என்றனர்.

(தொடர்ச்சி 26ம் பக்கம்)

கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?
தனிநபரோ... வியாபாரமோ...
▶ கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
▶ Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
▶ வியாபாரத்தை பலப்படுத்த...
▶ TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...
இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்
உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்



BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN
BBK PARTNERSHIP
www.bbkca.com
Email: admin@bbkca.com
Chartered Accountants and Business Recovery Professionals
▶ Accountancy / Audit
▶ Tax Solutions
▶ Company Formation
▶ Confidential Tax Consultancy
▶ Investigations / Tax Mitigation
▶ Bankruptcy / IVA
▶ Liquidations
▶ Business Startup & Consultancy
▶ Solicitors Rules Audit
▶ Payroll / VAT / Bookkeeping
R3
THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

# "The student struggle in Tamil Nadu is the only glimmer of hope"



**- Gajendrakumar Ponnambalam**

*Following are the excerpts of an interview given by Gajendrakumar Ponnambalam to "Tamizh Aazhi", a political magazine published in Tamil Nadu.*

*On the recent UNHRC resolutionon Sri Lanka: Is it a step forward?*

The resolution that passed in Geneva, although claiming to be centered around "reconciliation and accountability", which as we all know are non descript references to the Tamil-Sinhala Conflict in Sri Lanka, in real terms has nothing positive to offer the aggrieved party, who are the Tamils. On the contrary, this second resolution entrenches the idea of the LLRC, and for the first time welcomes the announcement of holding the Northern Provincial Council Elections in 2013.

> But we know that the recognition of the Tamil Nation is the only solution to the Ethnic conflict.

The LLRC is a fundamentally flawed initiative. The accused is asked to investigate himself. This makes a mockery of Natural Justice. Further, the overwhelming majority of the Tamil people boycotted the LLRC sittings and refused to appear before it. It is the report of such a commission that the Geneva resolution holds as the panacea for reconciliation. If one actually goes into the substance of the recommendations of the LLRC, one will find that it contains the blue-print to assimilate the Tamil Nation – to systematically dismantle the existence of the Tamils as a distinct Nation in the North-East of the island of Sri Lanka. Further the LLRC for the Government of Sri Lanka is a time buying exercise. They use it to give a false impression that they are working on 'reconciliation' and then at forums like the UNHRC, ask for 'time and space' to implement the LLRC programme. The contrary is true. The time and space that they seek is to destroy the Tamil nation.

This resolution, unlike the previous one, talks of the Provincial Council System. The Provincial Councils was a system that was introduced by the 13th Amendment to the Constitution of Sri Lanka on account of the Indo-Lanka Accord of 1987. The Provincial Councils and the 13th Amendment have been consistently rejected by the Tamil people ever since it was created, as in didn't come anywhere close to recognizing the nationhood and right to self-determination of the Tamil people. This resolution, by explicitly mentioning it, seeks to legitimize it. As a result this resolution has the potential of taking the Tamil National struggle back 26 years to an irredeemable stage.

For these reasons, and for the additional, but very obvious reason of calling for the Sri Lankan government to investigate itself for the grave breaches of International Human Rights Law and International Humanitarian Law, we not only unreservedly distance ourselves from the resolution, but we are going further and rejecting the resolution, as it is potentially dangerous.

There was an expectation that the resolution might be stronger this time around. But at the end of the day, there is a feeling that once again Sri Lanka has prevailed. Please comment on this.

It is our considered view that this resolution is being pursued not with the intention of bringing about "reconciliation and accountability" in Sri Lanka but with the geopolitical interests of the West and India in mind. The intention of the West and India is to bring about sufficient pressure using the Genocide of the Tamil people, to bring about a regime change in Colombo – a regime that will be faithful to their interests and not to those of China, but at the same time not do anything that might put a future friendly regime in difficulty by asking it to seriously address the root causes of the conflict.

The fact is that the Sinhala people will never accept the recognition of the Tamils as a distinct Nation. Any Sinhala leader who says he will recognize the Tamil Nation will be rejected by the Sinhalese. But we know that the recognition of the Tamil Nation is the only solution to the Ethnic conflict. The West and India know this. But they will not make this their official policy as it would make it impossible for them to bring about a regime change and keep a friendly regime in power. Therefore the only time they will consider seriously addressing the Tamil National question, is when they realize that a regime change to their liking is not possible in Sri Lanka, as the Sinhalese people will not let go of the Rajapakse policies (policies that are pro China and detrimental to India's and the US's national interest).

It is for this reason that despite all the mounting evidence, a resolution such as this, that has nothing for the Tamil people, has been passed, albeit in the name of the suffering of the Tamil people.

The argument that the resolution was weak because other countries were not willing to go further, is unacceptable. We all know that if the most powerful country in the world, and the regions most powerful country put their minds to it, there would have been no difficulty in getting other member states to agree. The truth is that the US, the West and India at the time of passing the resolution didn't have the will – it was not in their interest!

*What did the Tamil lobby groups achieve?*

This resolution is a failure for the Tamil people. The Tamil suffering is being used in the UNHRC to put pressure on the Sri Lankan government in order to bring about a regime change to safeguard the geopolitical interests of the US and India, but the Tamils have nothing! Clearly this is an unmitigated failure.

And the truth is that the Tamil people will continue to fail for as long as we have groups like the Tamil National Alliance (TNA) "represent" the Tamil people. I say this because the TNA's job today has been reduced to lobbying the Tamil people to accept the agenda of the US and India, and not what it actually should be doing, which is lobbying India and the US on behalf of the Tamil people.

The TNA is the only Tamil group that I am aware of that has not only welcomed the resolution, but has even gone to the extent of saying that they are "happy" with it!

*How do you view the students struggle in Tamil Nadu?*

The student struggle in TN is the only glimmer of hope that we see. I say this not only because they have managed to mobilize at a level that has not been seen in Tamil Nadu in recent times, but more so because the demands that they have put forward are demands that show that they fully understand international politics well. They have demonstrated that they comprehend the geopolitical configuration of India, US and the China blocks in South Asia and in Sri Lanka. They have also formulated their struggle fully understanding the geopolitical worth of the Tamils, both in Eelam and in Tamil Nadu.

Our fervent wish and hope is that this struggle spearheaded by the students grow exponentially. It must succeed in not only mobilizing all the students of TN, but also other sections of Civil Society. The ideal situation would be for the TN student struggle to spill over to the other states of India too.

Our party, the Tamil National People's Front (Thamil Thesiya Makkal Munnani) has been talking to diaspora youth organisations encouraging them to demonstrate solidarity with the Students of TN. Our party also hopes to organize solidarity demonstrations in Eelam. We can't afford for the TN student struggle to fail, because it actually is OUR struggle!!

*Did the TN struggle have any impact whatsoever over the UNHRC?*

The truth is that I think the struggle started too late to make a difference for the resolution this time around. However, if the struggle can be sustained and if it grows, there can be no doubt that it will have a tremendous impact in the future.

The fact that the American Permanent Representative to the UN in Geneva stated that the US is watching the student struggle in TN, is a good indicator of the potential power the struggle has on the geopolitical landscape for the region.

> The truth is that the US, the West and India at the time of passing the resolution didn't have the will – it was not in their interest!

*What will be your strategy to win over or neutralize India in favour of Eelam Tamils?*

India will have to be convinced that in the new geopolitical configuration in Sri Lanka and the region, the recognition and the safeguarding of the existence of the Eelam Tamils as a Nation will be the only buffer against her interests being compromised in Sri Lanka. India must also be forced to see, that if she don't recognize and safeguard the Eelam Tamil Nation, she runs the risk of losing the Tamils who are not only her true natural ally in the island of Sri Lanka, but also her only real leverage on the Sinhala State. We believe this can only be achieved by the demonstration of the world Tamil's people power.

The student struggle in TN we believe is a game-changer in this regard.

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

**seven | zero**
graphic designers
**020 7043 4319**
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP



creative artwork from **concept to design**

# Who says foreign policy can only be made in Delhi?

By Ajaz Ashraf

The ongoing furious debate over the myriad issues arising from the Tamil question in Sri Lanka smacks of incredible hypocrisy and gross simplification of complexities inherent in the 21st century brand of Indian politics. Perhaps nothing is more hypocritical than the trite assertion harping on the imperative of insulating sports from politics.

Politicians have always endeavoured to harness sports to realise goals defined as national in importance. New Delhi has been quite adept at it: for instance, it cancelled the India-Pakistan hockey series following the February blasts in Hyderabad. Earlier, the Kargil conflict led to the suspension of cricketing ties between India and Pakistan, which were promptly renewed again, in 2004, as the relationship between the two countries got back on the rails.

Then came the catastrophic 26/11 attacks on Mumbai. As the relatives of the dead grieved and those injured writhed in suffering, India's planned tour of Pakistan in 2009 was cancelled forthwith. No doubt, New Delhi's bellicosity against Pakistan would have appeared a sham had it been 'cricket as usual' between the two countries.

In taking this decision yet another vital factor was taken into account: the general election was months away and the Congress-led coalition wanted to eschew the risk of being perceived as soft on Pakistan. The electoral calculation, quite understandably, wasn't a compulsion in early 2011, as the Pakistan prime minister flew down to Mohali to watch the India-Pakistan World Cup match with his Indian counterpart.

Why are we then shrieking in horror and wringing our hands in dismay at the decision of Tamil Nadu Chief Minister J Jayalalithaa to ban the stylish Lankan cricketers from playing in Chennai? Did you smirk and mutter, 'Well, Chennai isn't India, how can she take a decision impacting the country's foreign policy, traditionally considered the exclusive preserve of New Delhi?'

To those aghast at the feisty lady's audacity, it suffices to remind – India has changed. The Centre no longer holds and the state satraps call the shots.

Jayalalithaa has decidedly taken her cue from New Delhi's propensity to lasso sports into politics. Just as 26/11 and Kargil angered and shocked us at the duplicity of the Pakistani state, so has the killing of Tamilians in Lanka shocked their brethren in Tamil Nadu. The Lankan military bombed indiscriminately and relentlessly the civilian population of North and East Lanka in the months before the LTTE was decisively defeated and decimated. Thus, free from the fear of retaliation, the Lankan soldiers killed in cold blood, secure in the knowledge that they enjoyed impunity.

It has taken time to disseminate the evidence of war crimes the Lankan army perpetrated, explaining partially why Tamil Nadu appears more incensed in 2013 than in 2009, the year in which the LTTE was routed. A popular movement, we all know, requires a symbol for its trigger. In this case the trigger was the photograph of LTTE supremo V Prabhakaran's cherubic son, who was apparently brutally gunned down. It was his killing, captured on camera, which has drawn out the young across Tamil Nadu to demand a sterner measure against Colombo for neither punishing those guilty of violating human rights nor initiating a credible reconciliation process vis-à-vis its Tamil population.

It is indeed incredible that the media and foreign policy wonks in New Delhi can't fathom the compulsion of political parties to be sensitive to the hurt sentiments in Tamil Nadu. The logic of democracy demands they respond to the popular disaffection, as the parties ruling New Delhi have often following every terror incident involving Pakistan. Since her writ doesn't run over the entire country, Jayalalithaa consequently chose to keep out the Lankans from the city where she calls the shots, emulating the Indian prime ministers who too have had no compunction in mixing sports with politics.

It is true political parties in Tamil Nadu have been cynical and hypocritical in their decision not to blow against the popular sentiment. Jayalalithaa, for instance, remained cocooned in her estate as the Lankan army went around bombing the civilians. As for the DMK, it was a partner in the ruling coalition that chose to supply strategic information and military assistance to the Lankan army as it buttonholed the LTTE. They have gone hyper now because every passing day brings the political class in Tamil Nadu, as elsewhere in the country, closer to their five-yearly tryst with the national election. In this, though, they are no different from other politicians in other parts of the country. Why should we expect the Tamil Nadu politician to subscribe to political norms nobody in India ever does?

The outcry against Jayalalithaa and Karunanidhi arises from the sense that they have encroached upon New Delhi's exclusive right to frame the country's foreign policy. Their parochial interests, it is claimed, have compromised the national interest, defined as India's strategic need to ensure Colombo doesn't slip under Beijing's umbrella and Pakistan doesn't acquire a firmer foothold there. Such claims, the veracity of which is anyway debatable, raise a pertinent question: who is to determine what the national interest is? Is this the task of foreign policy mandarins? Or should the people decide what it ought to be? It is the supercilious who feel the masses lack the political sophistication to define national interest.

As far as the people of Tamil Nadu are concerned, they perceive their national interest in persuading Colombo to mete out justice to its Tamil citizens. This mode of determining national interest will increasingly become the norm in what is termed the era of coalition politics. Regional parties will push the government at the Centre to respond to popular upsurge or be prepared to bow out of office.

Before the Lanka issue, Mamata Banerjee had vetoed New Delhi's plan for Bangladesh; the Italian marines issue was propelled, at least initially, by the local politics of Kerala. Tomorrow, developments in Nepal could have consequences for Uttar Pradesh and Bihar, whose politicians could then mount pressure on New Delhi to do their bidding.

Ask another question: had the Congress a majority in Parliament, would it have heeded to the display of people power in Tamil Nadu?

Indeed, the most redeeming aspect of the Lankan controversy has been the manner in which the youth in Tamil Nadu mobilised in support of the Tamil people of Lanka. Their political action is seemingly devoid of hypocrisy and did not cynically calculate the gains accruing to them. You could say it is the idealism of the young, an idealism which will gradually wear out. For the moment, though, they have brought about a readjustment of our moral compass, however ephemeral. The Rajapakse government can't be allowed to get away with its ineffable war crimes.

*Courtesy: firstpost.com*









# KIDS பேப்பர்

## Seasonal Poem

### Snow

Snow is falling A beautiful sight
Snow is falling
It plays with the light
Snow is falling It plays it's game
Snow is falling
It makes all that's different look the same Snow is falling
It's source is storm
Snow is falling It makes all conform
Snow is falling
It blinds all who see
Snow is falling
It hides you from me
Snow is falling
From a sky of lead
Snow is falling
Never mind...we're dead

### Easter Wing

Lord, who createdst man in wealth and store,
Though foolishly he lost the same,
Decaying more and more,
Till he became Most poore:
With thee O let me rise
As larks, harmoniously,
And sing this day thy victories:
Then shall the fall further the flight in me.
My tender age in sorrow did beginne
And still with sicknesses and shame.
Thou didst so punish sinne,
That I became Most thinne.
With thee Let me combine,
And feel thy victorie:
For, if I imp my wing on thine,
Affliction shall advance the flight in me.

### Spring

Spring Spring Spring
is almost here
Spring Spring Spring
is the time to cheer
But when the rain comes
everyone won't be glum
Spring Spring Spring
is almost here
Spring Spring Spring
the sky will be so clear
Summer on the way....

## Kitten and Duck go to School

One day when kitten and duck woke up,
it was the first day of school.
When they got dressed and went to school They got nervous!
When they went into the school There were lots of kids and toys. They then went outside to play!
They came back in the classroom.
The teacher read them a story while they had a nap.
When they woke up, it was time for lunch.
After lunch it was time to go home.
They had so much fun
They could not wait until the next day of school.



## The Two Goats

Over a river there was a very narrow bridge. One day a goat was crossing this bridge. Just at the middle of the bridge he met another goat. There was no room for them to pass. Two Goats"Go back," said one goat to the other, "there is no room for both of us".

"Why should I go back?", said the other goat. "Why should not you go back?"

" You must go back", said the first goat, "because I am stronger than you."

"You are not stronger than I", said the second goat.

"We will see about that", said the first goat, and he put down his horns to fight.

"Stop!", said the second goat. " If we fight, we shall both fall into the river and be drowned. Instead I have a plan- I shall lie down, and you may walk over me."

Then the wise goat lay down on the bridge, and the other goat walked lightly over him. So they passed each other, and went on their ways.

*- Kirishan Raju*

## சொர்க்கத்தில் நரிப் பிள்ளை

நரி ஒன்று தாகத்தால் தவித்தது. எங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை. என்ன செய்வது...?தண்ணீரைத் தேடி அலைந்தது.

தூரத்தில் கிணறு ஒன்று இருப்பதைப் பார்த்தது. கிணற்றின் அருகே சென்றது, கிண்ற்றில், கயிற்றின் ஒரு முனையில் வாளி ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. அதைக் கண்ட நரி, வாளியில் தாவி ஏறி அமர்ந்தது. உடனே வாளி 'விரி'ரெனக் கிணற்றின் உள்ளே சென்றது. நரி வயிறு நிறையத் தண்ணீரைக் குடித்தது. தாகம் தணிந்தபின் மேலே பார்த்தது. 'எப்படி வெளியேறுவது' என்று யோசிக்கத் தொடங்கியது.

'மேலேயிருந்து யாராவது கயிற்றை இழுத்தால்தானே என்னால் மேலே போக முடியும். என்ன செய்வது?' நேரம் ஆக ஆக நரிக்கு அச்சம் தோன்றியது. அந்த நேரம் பார்த்துக் கிணற்றின் அருகே ஓநாய் ஒன்று வந்தது. கிணற்றின் உள்ளே எட்டிப் பார்த்தது. அங்கு நரி இருப்பதைக் கண்டது. 'அடடா! நரி ஐயா! உள்ளே என்ன செய்கிறீர்கள்?' எனக் கேட்டது.

'நான் இப்போது சொர்க்கத்தில் இருக்கிறேன். என்ன அருமையான இடம் தெரியுமா? இங்கு மீன், கோழி, ஆடு எல்லாம் தருகிறார்கள்' என்றது நரி. ஓநாய் சற்றும் யோசிக்காமல் கயிற்றின் மறுமுனையில் கட்டப்பட்டிருந்த வாளிக்குள் குதித்தது. அந்த வாளி 'சரசர' வென்று கிணற்றின் உள்ளே போயிற்று. அப்போது நரி அமர்ந்திருந்த வாளி மேலே வந்தது.

நரி மேலே வரும் போது பாதி வழியில் ஓநாயைப் பார்த்தது. 'நான் இப்போது சொர்க்கத்திற்கும் மேலான இடத்திற்குப் போகிறேன்'. என்று கூறிக் கொண்டே மேலே சென்றது. மேலே வந்ததும் கிணற்றுச் சுவரின் மேலே தாவிக் குதித்துத் தப்பியோடியது. பாவம் ஓநாய்.....!

*ஒரு செயலைச் செய்வதற்கு முன் பல முறை யோசிக்க வேண்டும்..*

*- ராம்*

## Word Search



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| S | G | E | N | A | L | I | K |
| E | Q | L | Y | H | F | A | P |
| N | N | I | L | U | N | A | T |
| F | A | E | P | C | R | U | P |
| F | A | T | H | U | I | R | C |
| P | P | I | P | T | X | O | V |
| A | Y | P | M | W | H | S | H |
| J | U | L | J | Z | L | V | T |

**Words: Subject:** தமிழர் பாரம்பரிய உணவுகள்
PARUPPU, SORU, PAAN, KANCHI, ILANE

## Quotable Quotes

" An investment in knowledge Always pay the best interest"
*Benchimin Franklin*

"A true friend is the greatest of all blessings"
*Fracois de la Rochefoucauld.*

"you must never FIND time for any thing. If you want time you must MAKE it".
*Charls Buxton*

## Colouring - 191





### Dear Kids...

Colour and Send in a picture to ORU PAPER. you could be the lucky winner Gift from KALAIKILI...

நீங்களும் கலைக் கிளி வழங்கும் பரிசினைப் பெற படத்திற்கு அழகுற வர்ணம் தீட்டி எங்களுக்கு அனுப்பி வையுங்கள்..

**Web: www.facebook.com/Kalai.Kili**



## Issue 190 Winner
## Nijantha - E



Nijantha Eswar



Jolene Theva



A-Vigaashan



Rehasan Asokan

### தம்பி தங்கைகளே.....

உங்களது பிறந்தநாள் வாழ்த்துகள், குட்டிக்கதைகள் மற்றும் படங்கள் வரைந்தும், விடுகதைகள், பழமொழிகள் என்று எதுவானாலும் உங்களது பெயரைக் குறிப்பிட்டு எமது முகவரிக்கு மின்னஞ்சல் மூலமோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வையுங்கள். E-Mail - info@orupaper.com

## Tips of the Week



ஹலோ குட்டீஸ் இந்த வாரம் http://www.amarkkalam.net என்ற இணையத்தளத்தை சும்மா ஒரு தடவை தட்டித்தான் பாருங்களேன். பிடிச்சா அடிக்கடி தட்டுங்கோ, பிடிக்காட்டி அடுத்த வாரம் வேற ஒன்டை சொல்லுறம். உங்களுக்கு தெரிஞ்சதையும் எங்களுக்கு சொல்லுங்கோ.

**http://www.amarkkalam.net**

AartiTV

# உலகின் மிகப் பிரமாண்டமான தமிழ் தொலைக்காட்சி நிலையம்!

- ✓ 25 க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிச் சேவைகளை ஒரேதளத்தில்
- ✓ 7 நாட்களுக்குரிய பதிவினை அனைத்துச் சேவைகளிலும் பதிவு செய்து கொள்ளத்தக்க வசதியானது
- ✓ பல வேகங்களில் Pause - Forward - Rewind செய்து கொள்ள வசதியானது
- ✓ சட்டடைல்டிகளைப் பொருத்த தேவை இல்லை
- ✓ நம்பிக்கையான சேவை
- ✓ Broadcast Quality Picture
- ✓ Zero Cost Installation - Easy set up in minutes
- ✓ Wi-Fi enabled Set top Box
- ✓ LIVE & Video On Demand broadcast
- ✓ FREE Set Top Box with 12 months subscription

## LIMITED OFFER

ஒரு வருட சந்தா

£149

## FREE Cricket Channels

Watch all the cricket action LIVE!

**Aarti TV** சந்தா செலுத்துவது மிகச் சுலபம்!

24/7 வாடிக்கையாளர் சேவை இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

100% LEGAL

UK 0203 318 2004 / 0759 105 8813

France 06 3426 0744 / 06 0597 7431

Switzerland 043 508 2375

Germany 305 6837 0039

15 Days Money Back GUARANTEE

WWW.AARTITV.TV

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த
சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!!!

# SRI VENILALS



சித்திரை புதுவருடப்பிறப்பை முன்னிட்டு மாபெரும்
விலைச்சலுகைகள்... தவற விடாதீர்கள்...

SPECIAL OFFER
EXCLUSIVE
SAREES

DESIGNER
LEHNGA
SUITS

DESIGNER
PAVADAI & HALF
SAREES

DESIGNER
SALWAR
SUITS

DESIGNER
COSTUME
JEWELLERY

EXCLUSIVE
KANCHEEPURAM
SAREES

மங்கையர்
மனங்கவர்
ஆடைகளின்
சங்கமம்!

ராசியான
கூறைப்புடவைகள்
அனைத்து வகையான
சாறிகள் மற்றும்
சிறுவர்களுக்கான
உடைகளைத் தரமாகப்
பெற்றுக் கொள்ள
இன்றே நாடுங்கள்

**விலைச் சலுகைகளைத் தவற விடாதீர்கள் இன்றே நாடுங்கள்!!!**

**Sri Venilals**
115-117 Ealing Road
Wembley, Middlesex, HA0 4BP.
Tel: 020 8903 3144

**Celebrations By Sri Venilals**
99-103 Ealing Road
Wembley, Middlesex, HA0 4BP
Tel: 020 8795 3051

உங்கள் அன்புக்கும், ஆதரவுக்கும் நன்றிகள்...

# தமிழக மாணவர் கிளர்ச்சிக்கு எது மூலம் ?

**அலசுவாரம்**

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

பாகம் 128

*ஒரு பேப்பர்* அலசுவாரம் வாசகர்கள் அனைவருக்கும் இன்னும் சில நாட்களில் வரப்போகும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

*ஒன்றை நினைக்கின்*

*அதுவொழிந்திட்டொன்றாகும்*

*அன்றி அதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை*

*நினையாது முன்வந்து நிற்பினும் நிற்கும்*

*எனையாளும் ஈசன் செயல்*

*நல்வழி - ஔவையார்.*

நாமொன்றை நினைக்கத் தெய்வமொன்றை நினைக்குமென்பார்கள். தற்போது நடைபெற்றுக் கொண்டிருப்பவற்றை அவதானிக்கும் போது மேற்கண்ட பாடல்தான் ஞாபகத்துக்கு வருகின்றது.

தமிழ்நாட்டில் மாணவர்களின் கிளர்ச்சியும் அதைத்தொடர்ந்து நடைபெறும் அரசியல் நடவடிக்கைகளும் உண்மையில் நாம் சற்றும் எதிர்பாராதவை. இப்படியொரு எழுச்சி ஈழத்தமிழர் மக்களுக்காக அங்கே உருவாகுமென்றோ அது இந்திய நடுவண்ணரசிலிருந்து தி.மு.க வெளியேறுமளவுக்கு அரசியற் சூழ்நிலைகளை ஏற்படுத்துமென்றோ நாம் கனவிலும் நினைக்கவில்லை. முள்ளிவாய்க்காலில் அணைக்கப்பட்டுவிட்ட எமது விடுதலைத்தீ இன்னொரு முறை சாம்பரிலிருந்து கனல்கக்கியெழும் என்பது கற்பனையிற்கூட நடைபெற முடியாதவொன்று என்று நினைத்திருந்த எமக்கு, நாம் மூட்டிய விடுதலை நெருப்பு தமிழ்நாட்டில் தீப்பிழம்பாய் கனன்றுவருவதைக் காணும்போது இதுவென்ன மாயமோவென்று எண்ணத் தோன்றுகின்றது.

நதிமூலம் ரிஷி மூலம் பார்க்கக்கூடாது என்பார்கள். ஆனால் இது எமது தலைவிதியின் மூலமல்லவா? அடிமுடி காணமுடியாத பெரு நெருப்பாக அந்த விடுதலைத் தீ தற்போது எமது எதிர்காலச் சந்ததியினரிடத்தில் பற்றியெரியத் தொடங்கியிருக்கின்றதே. அடியையோ முடியையோ காண நாம் என்ன விஷ்ணுவா பிரமனா? நமக்கேன் இந்த ஆராய்ச்சி என்று விட்டுவிட முடியவில்லையே. சற்று உற்சாகத்தோடு இதன் சாதகத் தன்மைகளை எண்ணிப்பார்ப்பதற்கு இதனை மூட்டுவித்தவர் யார்? எண்ணெய் ஊற்றுபவர் யார்? இவ் வேள்வித் தீயை அணையாது காத்து வளர்த்தெடுக்கப் போகிறவர்கள் யார் யார்? என்கின்ற கேள்விகளுக்கு விடைகாணவேண்டியிருக்கிறதே. தற்போதைக்கு தர்மத்தைக் காக்கும் ஈசன் செயலாகவே நாம் இந்த எழுச்சியை நோக்க வேண்டியிருக்கிறது. ஐக்கிய இந்தியா என்கின்ற கோட்பாடு கருத்தற்றதாகி அதன் ஆணிவேர் பிடுங்கப்படக்கூடியதான ஓர் இயற்கைப் பிறழ்வாக, ஓர் வினோத நிகழ்வாகவே நாம் இதனைக் கொள்ள வேண்டியிருக்கிறது. இது நிஜம்தானா அல்லது ஓர் மாயச்சுழலா என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியவில்லை.

நண்பர் ஒருவருடன் பேச்சுக் கொடுத்தபோது: " லண்டனில் சில வருடங்களுக்கு முன் நடந்த இளையோர் கிளர்ச்சியும் தீவைத்தலும் யாரால் முடுக்கிவிடப்பட்டன, யார் யார் அதன் பின்னணியில் நின்றார்கள் என்பதை வெளிப்படையாக அறியமுடியவில்லை அதை யாரும் தெளிவுபடுத்தவுமில்லை. மொபைல் போன்ற தொடர்புச் சாதனங்கள் இளையோரின் கையில் பரவலாய் விட்ட காரணத்தால் எங்கெங்கே கடையுடைப்பும் கொள்ளையும் தீயிடலும் நடைபெறப் போகின்றது என்ற செய்தி மிகவிரைவாகப் பரப்பப்பட்டது. அந்த இடங்களில் இளைஞர்கள் கூடினார்கள் வீதிக் கடைகளை உடைத்து அள்ளக் கூடியதை அள்ளிக்கொண்டு தீயை வைத்துவிட்டு ஓடித்தப்பினார்கள். ஆனால் அத்தகைய தகவல்களை ஒரு சிலரே அனுப்பிக் கொண்டிருந்தார்கள். பெரிய அளவிலான ஸ்தாபனப்படுத்தல் அங்கே இருக்கவில்லை. இந்த வன்முறைகளில் ஈடுபட்ட இளையோர்களின் கோரிக்கை என்ன ஏன் அப்படிச் செய்கிறார்கள் என்பன தொடர்பாக யாரும் முன்வந்து சொல்லவுமில்லை அதனை எவரும் விசாரித்து அறிந்துகொள்ளவுமில்லை. யாரோ ஒரு போதைப் பொருள் கடத்திய இளைஞனைக் காரில் துரத்திய பொலீஸாரால் அவன் சுடப்பட்டு இறந்துபோனபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆரம்பிக்கப்பட்ட கிளர்ச்சியே அத்தனை வன்முறைகளுக்கும் மூலவிசையானது. கொஞ்சநாட்களில் அந்த வன்முறை அடக்கப்பட்டுவிட்டது. அல்லது தானாகவே அடங்கிவிட்டது. அதனை நோக்கும்போது சரியான தலைமைத்துவமும் நெறிப்படுத்தலும் இல்லாத கிளர்ச்சிகள் எங்குபோய் முடியுமோவென்று சிந்திக்க வேண்டியிருக்கிறது." என்றார்.

தமிழ் நாட்டில் மாணவர்களின் போராட்டத்தை லண்டன் இளையோர்களின் வன்முறை கிளர்ச்சிகளுடன் ஒப்பிட்டுக் கொச்சைப்படுத்துவது ஏற்கக் கூடியதல்ல. ஏனெனில் அவர்கள் குறித்த சில கோரிக்கைளை அதாவது தமிழீழம் சார்பான தங்களது அணுகுமுறைகளை மத்திய மாநில அரசுகளின் முன்வைத்துப் பரவலான போராட்டங்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதன் பெறுபேறாய் எதிர்கால அரசியலில் தாம் ஓரங்கட்டப்பட்டு விடுவோமோ என்ற பயத்தில் கலைஞர் குடும்பத்தின் தி.மு.க, தாங்கள் பெற்றுக்கொண்டிருந்த சுயலாபங்களையும் கருத்திலெடுக்காமல் முழு மந்திரி, அரைமந்திரிப் பதவிகளுட்பட அனைத்தையும் உதறித்தள்ளிவிட்டு மத்திய அரசிலிருந்து வெளியேறியிருக்கிறார்கள். ஏற்பட்டுப் போன சுய இழப்புக்களால் சற்று விரக்தியடைந்து உட்கட்சிப்பூசல்கள் ஏற்பட்டிருந்தாலும் அனைத்தையும் பூசி மெழுகி ஈழத்தமிழர்களுக்காகக் குரல்கொடுப்பதே தம்மைத் தற்காத்துக்கொள்ள இன்றுள்ள அவசரதேவையென்ற நிலைக்கு, நடந்துகொண்டிருக்கும் மாணவர் கிளர்ச்சி திமுகவைக் கொண்டு வந்திருக்கிறது. மறு புறத்தில் அதிமுகவும் தி.மு.கவின் தடாலடி நடவடிக்கையைத் தகுந்த முறையில் எதிர்கொண்டு தனது செல்வாக்கைக் காப்பாற்ற தனித் தமிழீழத்துக்கான பொதுவாக்கெடுப்பை நடத்த வேண்டுமென்று தீர்மானம் போட்டுத் தன்பங்கில் தனது மக்கள் செல்வாக்கைக் காப்பாற்றும் முயற்சியில் இறங்கியிருக்கிறது. மேலும் சினிமா நடிகர்கள், சட்டத்தரணிகள், லாறி டிரைவர்ககள் என்று சமூகத்தின் பலதரப்பட்ட அங்கத்தினர்களும் கிளர்ந்தெழுந்துள்ள மாணவசக்திக்கு உந்து சக்தியாக தங்களது ஆதரவையும் தெரிவித்து வருகின்றார்கள். போதாததற்கு சென்னையில் நடக்கவிருக்கும் ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகளையே, அவற்றில் இலங்கை வீரர்கள் பங்கெடுப்பதால், மாணவர்கள் உட்பட மாநில அரசும் வேண்டாமென்று தியாகம் செய்திருக்கிறது.

ஆனாலும், தூரத்திலிருந்து இவற்றை நாம் அவதானிப்பதால் அப்போராட்டங்களின் வலிமை, பரிமாணம் போன்றவற்றை எம்மால் சரிவர மதிப்பிட முடியாதுள்ளது. தமிழீழத் தமிழர்களுக்குச் சார்பான ஊடகங்கள் இத்தகைய போராட்டங்களைப் ஓரளவு பிரமாதப்படுத்துகின்றன என்பதை மறுக்க முடியாவிட்டாலும், இன்றுவரை மூடப்பட்டுள்ள பல கல்லூரிகள் திறக்கப்படாமலிருப்பதை நோக்கும் போது இத்தகைய கிளர்ச்சிகளை குறைத்து மதிப்பிட்டு விடமுடியாது என்பது புலனாகின்றது.

அடுத்த தேர்தலொன்றை தமிழ்நாடோ அன்றி இந்தியாவோ சந்திக்கும்வரை இப்போராட்டங்கள் தொடரக்கூடும். டெல்லியில்? அரசமைக்க முயலும் எந்தவொரு கட்சியோ கூட்டணியோ தமிழரின் கோரிக்கைகளுக்கு உரிய பதிலைக் கூறிவிட்டே தமிழ்நாட்டினுள் காலடியெடுத்து வைக்கவேண்டும் என்னும் நிலைக்கு தமிழக மாணவர்கள்..

*(தொடர்ச்சி 26ம் பக்கம்)*







# தமிழர்களைப் பிரிக்கும் வேலையில் ஜீ.ரீவி இறங்கி விட்டதா ?

**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

ஈழத் தமிழர்களுக்காக தமிழ்நாட்டுத் தமிழர்கள் கொடுக்கும் குரல் வலிமையடையும் போது அதை நசுக்க பேரினவாதிகள் சில அம்புகளை எய்வதை வழக்கமாகக் கொண்டிருப்பார்கள். இலங்கைத் தமிழர்கள் மலையகத் தமிழர்களைப் புறக்கணிக்கிறார்கள் என்பார்கள். அவர்களின் குடியுரிமையைப் பறித்தார்கள் என்பார்கள்.

இந்த மலையக-யாழ் சிண்டு முடிவதன் மூலம் ஈழத் தமிழர்களையும் தமிழ்நாட்டுத் தமிழர்களையும் பிரித்து வைக்கும் வேலை தமிழ்நாட்டு மாணவர்களின் எழுச்சிப் போராட்டம் தீவிரமடையும் வேளையில் மிக அவசியமாகிறது. இந்த சிண்டு முடிதல் வேலையை வழமையாக இந்து ராம் ஒரு ஆசிரியத் தலையங்கத்தின் மூலம் செய்வார், சோ ஒரு பத்திரிகைப் பேட்டியின் மூலம் செய்வார் அல்லது விகடன் ஒரு கட்டுரை மூலம் செய்யும். இவர்கள் யாரின் கைக்கூலிகளாகச் செயற்படுகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். வழமைக்கு மாறாக இம்முறை இந்த மலையக-யாழ் சிண்டு முடிதல் வேலையை ஜீரிவியில் தயானந்தா பேசாப் பொருள் நிகழ்ச்சியில் செய்கிறாரா என்ற கேள்வி 24-03-2013 இலன்று அந்த நிகழ்ச்சியில் திரேசம்மா என்ற ஒல்லாந்தில் வாழும் மலையகப் பெண்மணியின் பேட்டியைப் பார்த்த போது எழுகிறது.

திரேசம்மா கொலினியஸ் என்ற ஒரு சமூக சேவகி தனது அமைப்பைப் பற்றி அதிகம் சொல்லவில்லை. அவர் நீண்ட காலமாக அந்த அமைப்பில் பணியாற்றுகிறார்.

பேட்டியின் போது முதலில் கேட்கப்பட்ட உங்களுக்கு யார் உதவி செய்கிறார்கள் என்ற கேள்விக்கு திரேசம்மா பதிலளிக்கையில் தேயிலை விற்பனை மூலம், டொனேசன் மூலம், ஒல்லாந்தில் இருக்கும் நன்கொடையாளர்கள் மூலமும் தாம் நிதி சேகரிப்பதாக திரேசம்மா பதிலளித்து பதிலின் இறுதியில் "இலங்கைத் தமிழர்கள் தமக்கு உதவி செய்வதில்லை' என்ற சொற் தொடரையும் வலிந்து இணைத்துக் கொண்டார். மலையகத் தமிழர்களுக்கு உதவி செய்ய வேண்டி கடமையும் தகமையும் உள்ள இன்னொரு தரப்பு இருக்கிறது அதைப்பற்றி தயானந்தாவும் கேட்கவில்லை திரேசம்மாவும் சொல்லவில்லை.

### ◆ மலையகத் தமிழர்களிற்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான முரண்பாடு

தமிழ் அரசியல் கட்சியான தமிழ் காங்கிரசுக் கட்சியின் தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் இலங்கை பிரித்தானியக் காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுபட்ட பின்னர் இலங்கை வாழ் தமிழர்கள் அனைவரையும் ஒன்றிணைக்க முற்பட்டார். அவர் தனது காங்கிரசையும் இந்தியாவிலிருந்து வந்து இலங்கையின் மலைநாட்டுப்பகுதியில் குடியேறிய தமிழர்களின் தலைவராக இருந்த ஆறுமுகம் தொண்டமான் தலைமையில் இயங்கிய தோட்டத் தொழிலாளர் காங்கிரசையும் ஒன்றிணைக்கும் தனது எண்ணத்தை திரு எஸ் தொண்டமான் அவர்களிடம் தெரிவித்தார். திரு தொண்டமானுக்கும் இது நல்ல ஆலோசனையாகப்பட்டது. தொண்டமான் இது தொடர்பாக அப்போது இந்தியப் பிரதமராக இருந்த ஜவகர்லால் நேரு அவர்களிடம் ஆலோசனை கேட்டார். பேரினவாதியான நேரு, தொண்டமானைப் பெரும்பான்மை சமூகத்துடன் ஒத்துழக்குமாறு பணித்தார். தொண்டமானும் அதன்படியே பொன்னம்பலத்தின் ஆலோசனையை நிராகரித்தார். ஆனால் சிங்களப் பேரினவாதிகள் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையைப் பறித்த போது தொண்டமான் நேருவிடம் முறையிட்டார். நேரு இது உள்நாட்டு விவகாரம் என்று பகிரங்கமாகச் சொல்லித் தட்டிக் கழித்தார். இங்கு ஆரம்பமானது இலங்கைத் தமிழர்களுக்கும் மலையகத் தமிழர்களுக்கும் இடையிலான முரண்பாடு.

தயானந்தா இலங்கைத் தமிழர்கள் மலையகத் தமிழர்களை தோட்டக்காட்டான்கள் என்று அழைப்பதாக சொல்லி தன்னை ஒரு மலையகத் தமிழர்களின் நண்பர்களாக காட்ட முற்பட்டார். ஆனால் தோட்டக்காட்டான் என்ற சொற்பதம் இப்போது நடைமுறையில் இல்லை என்பது திரேசம்மாவிற்கோ தயானந்தாவிற்கோ தெரியாமல் போனதுதான் ஆச்சரியம். இன்னும் ஒரு உண்மை தோட்டக்காட்டன்கள் என்று முதலில் மலையத் பெரும் தோட்டங்களில் வாழும் தமிழர்களை அழைக்கத் தொடங்கியதே கண்டியில் வாழும் இந்திய வம்சாவழித் தமிழர்கள்தான் என்ற உண்மை இவர்கள் இருவருக்கும் தெரியாது போலும்.

திருமதி திரேசம்மா கொலினியஸ் தனது பேட்டியின் போது சொன்ன கருத்துக்கள்:

- இலங்கைத் தமிழர்களுக்கும் மலையகத் தமிழர்களுக்கும் இடையில் எந்த உறவும் கிடையாது
- இரு தமிழர்களுக்கும் இடையில் நிறைய வித்தியாசம் இருக்கிறது.
- கல்வித்துறையில் நிறைய வித்தியாசம் இருக்கிறது.
- யாழ்ப்பாணத்தமிழர்கள்தான் மலையகத் தமிழர்களின் கல்வியில் பின் தங்கிய நிலைக்குக் காரணம்.
- இலங்கைத் தமிழர்கள் மலைநாட்டுத் தமிழர்களை ஒரு மனிதர்களாகக் கருதவில்லை.
- கிருத்துவத் தந்தைகள் நினைத்திருந்தால் மலையகக் கல்வித்தரத்தை உயர்த்தி இருக்கலாம்-அதற்குக்காரணம் அதிகாரப் போட்டி.
- எல்ரிரிக்குச் சென்ற மலையக இளைஞர்கள் திரும்பி வரவில்லை. அவர்களின் குடும்பங்களுக்கு யாரும் உதவி செய்யவில்லை.
- மலையகத்தில் தமிழர்கள் கஷ்டப்படுவது ஏன் இலங்கைத் தமிழர்களுக்குத் தெரியவில்லை.
- மலையகப் பிள்ளைகளை யாழ்ப்பாணத்திற்கு வேலைக்கு கொண்டு செல்கிறார்கள் ஒரு பிள்ளையைத் தன்னும் கொண்டு போய் படிப்பீக்கிறார்கள் இல்லை.
- இந்து சமயத்தில் சாதிப்பிரச்சனை இருக்கிறது. கிருத்துவ சமயத்தைப் பின்பற்றும் மலையகத் தமிழர்களிடையே சாதிப் பிரச்சனை இல்லை.
- யாழ்ப்பாண இளைஞர்கள் வெளிநாடு செல்வதற்காக மலையகப் பெண்களைத் திருமணம் செய்து ஏமாற்றுகிறார்கள்.
- மலையகத் தமிழர்களின் வீடுகளில் நாய் பன்றிகள் கூடத் தங்காது.
- மலையகத் தமிழர்களைக் கழுதைகள் என்கிறார்கள்.
- தனது அமைப்பு நீண்டகாலப் போராட்டத்தின் பின்னர் ஒருவரை கற்பித்து சட்டவாளராக உருவாக்கியுள்ளது.
- ஈழப்போரின் பின்னர் மலையகத்தில் பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள்.

பேட்டியின் போது இடையில் தயானந்தா தமிழ்நாட்டில் மாணவர்களின் போராட்டம் பற்றிய காணொளியை ஒளிபரப்பி இலங்கைத் தமிழர்களுக்காக தமிழ்நாட்டில் போராட்டம் நடத்தும் போது மலையகத் தமிழர்களுக்காக ஏன் நாம் போராடவில்லை என்ற கேள்வியை எழுப்பினார். மலையகத் தமிழர்களின் அவல வாழ்க்கை பற்றிய காணொளிகள் காட்டப்படவில்லை. ஏதோ ஒன்று உதைக்கிறது இங்கே.

யாழ்ப்பாணத் தமிழர்களை வைத்து வாங்கு வாங்கு என்று வாங்கிய இருவரும் இடையில் மலையகத் தமிழர்களுக்கு சிறந்த சேவை செய்யும் ஒரு கிருத்தவ தந்தையை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேட்டி கண்டனர். அவர் மலையக மக்களின் பிரச்சனையை எடுத்து விளக்கினார். யூஜின் பெனடிக்ற் என்னும் பெயருடைய அந்த தந்தையைப் பற்றியும் அவர் சேவையைப்பற்றியும் திரேசம்மா பாராட்டினார். ஆனால் அவர் தொலைப்பேசியின் மூலம் பேசும் போது அவர் ஒரு யாழ்ப்பாணத் தமிழர் என எண்ணத் தோன்றியது. அவரது பின்னணிபற்றி திரேசம்மாவும் சொல்லவில்லை தயானந்தாவும் கேட்கவில்லை. அது வெளிவந்தால் பேட்டியின் நோக்கமே கெட்டுவிடுமா?

### ◆ மலையகத் தமிழர்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இடையில் உறவு இல்லையா?

மலையகத் தமிழர்களுக்கு ஜீ ஜீ பொன்னம்பலம் நீட்டிய நட்புக்கரம் நேருவால் துண்டிக்கப்பட்டது. அதன் பின்னர் அவருடன் மலையகத் தமிழர்கள் தொடர்பாக கருத்து முரண்பட்ட எஸ்.ஜே.வி செல்வநாயகம் தமிழ் காங்கிரசுக் கட்சியில் இருந்து பிரிந்து தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார். தமிழரசுக் கட்சி மலையகத்தமிழர்களின் பிரச்சனையை அடிப்படையாக வைத்தே ஆரம்பிக்கப்பட்டு அதுவே பின்னர் தமிழர்களின் பிரதிநிதியாகத் திகழ்ந்தது. பின்னர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி ஆரம்பிக்கப்பட்ட போது அதில் மலையக அரசியல்வாதிகளும் இணைக்கப்பட்டனர். தொண்டமான் தலைவராக்கப்பட்டார். முதலில் அதை ஏற்றுக் கொண்ட தொண்டமான் பின்னர் ஜே . ஆர் ஜெயவர்தனேக்கு வால் பிடிப்பதற்காக தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியில் இருந்து விலகினார். திம்புப் பேச்சு வார்தையில் பங்கு பற்றிய இலங்கைத் தமிழர்கள் முன் வைத்த ஒரு முக்கியமான கோரிக்கைகளில் ஒன்று மலையகத் தமிழர்களின் உரிமை தொடர்பானதாகும்: ***இலங்கைத் தீவைத் தமது நாடாகக் கருதுகின்ற எல்லாத் தமிழர்களினதும் பிரஜா வுரிமையையும் அடிப்படை உரிமைகளையும் அங்கீகரித்தல்.*** தோழர் சண்முகதாசன் என்ற இலங்கைத் தொழிற்சங்கவாதி சொன்னது இப்போது நினைவிற்கு வருகிறது.

***"மலையகத் தமிழர்களின் வாக்குரிமையைப் பறித்த ஐக்கிய தேசியக் கட்சியினரின் கால்களை நக்கிப் பிழைப்பு நடத்துவதையே மலையகத் தமிழர்களின் தலைவர்கள் செயலாக இருந்தது."***

மலையகத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மற்ற அரச பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு குறைவான ஊதியமே வழங்கப்பட்டது. இதனால் அங்கு கல்வித்தரம் குறைவாக இருந்தது. பெற்றோர்களின் கல்வித் தரமும் பிள்ளைகளுக்கு சாதகமாக இல்லை. மலையகத் தமிழ் சிறார்கள்..

*( தொடர்ச்சி 26ம் பக்கம் )*

**ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது, அவர்தம் ஆற்றலும் தனித்துவமானதே..**

**உங்கள் பிள்ளைகளும் கல்வியில் ஓங்கிட, நாளைய உலகின் சவால்களை வென்றிட..**

**Enrol them in Learna**

• Individualised • Interactive • Inspiring

**Maths & English Teaching for 4-16 years olds**

FREE Assessment

**We also prepare pupils for**

- 11 plus entrance exams
- Key Stage 2 SATS examinations
- Key Stage 3 and GCSE Maths
- A' Levels - Maths, Chemistry & Physics



LEARNA because every child is unique

Call 0845 094 0061 or visit www.Learna.co.uk 5-6 The Broadway, Sutton, Surrey, SM1 4BU.

# நெஞ்சு பொறுக்குதில்லையே...

இது சரியோ பிழையோ நீங்கள் தான் சொல்ல வேணும்

வணக்கம் பிள்ளையள்!

எல்லாரும் எப்படி இருக்கிறியள்?

இண்டைக்கும் கொஞ்ச நேரம் உங்களோடை புலம்பிப் போட்டுப் போவம் எண்டு வந்திருக்கிறன்.

மனிசருக்கு மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை எண்ட மூண்டும் இருக்கும் எண்டு ஆரோ ஒரு பெரியவர் சொல்லியிருக்கிறாராம். அதெண்டால் உண்மை தான். ஆனால் இந்த மூண்டு ஆசையோடையும் புகழாசையையும் சேத்துக் கொள்ளலாம் எண்டு நினைக்கிறன்.

அதிலையும் எங்கடை புலம்பெயர்ந்த ஆக்களுக்கு இந்தப் புகழாசை கொஞ்சம் கூடவே இருக்குது எண்டு இந்தப் பாழாய்ப் போன மண்டைக்குப் படுகுது. இந்தப் புகழாசையாலை அவையள் தாங்களும் கஸ்ரப்பட்டுத் தங்கடை பிள்ளைகள் பேரப்பிள்ளைகளையும் போட்டுப் பாடாப் படுத்துகினம்.

தங்கடை அந்தஸ்தை செல்வாக்கைக் காட்டுறதுக்கு கன கூத்துக்களை இஞ்சை பண்ணுகினம். அது உங்களுக்கும் தெரிஞ்சிருக்கும். அதிலை அரங்கேற்றம் வைச்சுப் படம் காட்டிறதும் ஒண்டு. சரி, அரங்கேற்றம் வைக்க வேணுமெண்டால் அரையும் குறையுமா ஆவது ஒரு கலையைப் படிக்கத்தானே வேணும். அதுக்காக பொம்பிளைப் பிள்ளையெண்டால் பரதநாட்டித்தையும் பெடியள் எண்டால் மிருதங்கத்தையும் படிப்பிச்சுப் போட வேணும் எண்டு ஒற்றைக் காலிலை நிக்கினம்.

ஆனால் நான் சொல்ல வாறது என்னெண்டால் கலை எண்டுறது இரத்தத்திலை ஜீனிலை கலந்து இயற்கையா வாறது. அதைப் பிறகு பயிற்சி எடுத்து பொலிஸ் பண்ணலாம். அதை விட்டுப் போட்டு முன்வீட்டுப் பிள்ளை ஆடுது. அப்ப என்ரை பிள்ளையும் ஆட வேணும் எண்டு அடம்பிடிக்கிறது சரியில்லைப் பாருங்கோ!

இப்பிடித்தான் சில பிள்ளைகளுக்கு டான்ஸ் வரும். சில பிள்ளைகளுக்கு பாட்டு வரும். சில பிள்ளைகளுக்கு வாத்தியக் கருவிகளை வாசிக்கிற திறமை இருக்கும். இன்னும் சில பிள்ளைகளுக்கு சித்திரம் கீறுற திறமை இருக்கும். அந்த அந்தத் திறமையையும் பிள்ளையின்ரை ஆர்வத்தையும் கண்டு பிடிச்சு அந்தத் துறையிலை பிள்ளையை பழக்கப்படுத்திறதை விட்டுப் போட்டு நீ ஆடத் தான் வேணும். நீ மிருதங்கம் தட்டத்தான் வேணும் எண்டு அடம் பிடிக்கிறது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கேல்லை. பிள்ளைகளும் மூஞ்சியை நீட்டிக் கொண்டு இந்த வகுப்புகளுக்குப் போய் வருகினம்.

எனக்குத் தெரிஞ்ச ஒராளின்ரை பிள்ளை விருப்பப்பட்டு வயலின் வகுப்புக்குப் போய் வந்தது. பிள்ளையும் நல்ல வடிவா வயலின் வாசிக்கப்பழகிக் கொண்டு வந்தது. திடீரெண்டு அம்மாக் காறி பிள்ளையைப் பிடிச்சு டான்ஸ் கிளாசுக்கு விட்டிட்டா ஏனணை திடீரென மாத்தினனியள் எண்டு கேட்டதுக்கு அவா ஒரு விளக்கம் தந்தா. எனக்கும் தலை சுத்தத் தொடங்கீட்டுது.

அம்மாக்காறி கிட்டடியிலை ஒரு வயலின் அரங்கேற்றத்துக்குப் போயிருந்தவவாம். அங்கை பெரிசாச் சனமும் இல்லையாம். வந்த ஆக்களுக்கும் வயலினைக் கேக்கிற இன்ரறஸ்ற் இல்லாமல் தங்களுக்குள்ளை கதைச்சுக் கொண்டு இருந்தவையாம்..

ஆனால் டான்ஸ் அரங்கேற்றம் எண்டால் சனம் கொஞ்சம் ஆர்வமா இருந்து பாக்குமாம். அதாலை தான் தன்ரை பிள்ளையையும்மாத்தி டான்ஸ் கிளாசிலை விட்டிருக்கிறாவாம். பாவம் பிள்ளையும் இப்ப அம்மா அப்பாக்காக தனக்கு விருப்பமில்லாத டான்ஸ் வகுப்புக்குப் போய் வருகுது.

இது கலையிலை மட்டுமில்லை விளையாட்டிலையும் தான். இப்ப சமர் தொடங்கின உடனை எல்லாப் பிள்ளைகளும் சொக்கர் எண்டு போகுது. ஆனால் பாஸ்கற் போல், பேஸ் போல், கிறிக்கெற் எண்டு போற ஆக்கள் ஒரு நூறு கூடத் தேறாது. எங்கடை ஆக்களுக்கு சொக்கரை விட இயல்பா கிறிக்கெற் மாதிரியான விளையாட்டுக்கள் தானே நல்லா வரும். அதாலை கிறிக்கெற்றை அல்லது கிட்டத்தட்ட அதே மாதிரியான பேஸ் போலைத் தெரிஞ்செடுக்காமல் ஏன் எல்லாரும் சொக்கர் சொக்கர் எண்டு போகினமோ தெரியேல்லை.

இப்படி பிள்ளையளின்ரை விருப்பத்தை அறியாமல் எங்கடை ஆசைகளைத் திணிக்கிறது சரியோ பிழையோ நீங்கள்தான் சொல்ல வேணும்?.

*- மணிவாசகன்*

APRIL 05 FRIDAY

**மாபெரும் எழுச்சிப் பேரணி**

*65 ஆண்டு கால இன அழிப்பிற்கு நீதி வழங்கும் வகையில் ஐ.நா சர்வதேச சுயாதீன விசாரணையை வலியுத்தியும் தமிழக மாணவர்களின் எழுச்சிக்கு வலுச்சேர்க்கவும் நடாத்தப்படும் மாபெரும் எழுச்சிப் பேரணி*

*நேரம்:* மதியம் 01:00 மணி முதல்

*இடம்:* Trafalgar Square, London, WC2N 5DN

*தொடர்புகளுக்கு:* தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

APRIL 20 SATURDAY

**அ ஆ இ... உயிர்மொழி நூல் வெளியீடு**

*தமிழாசிரியர் துரைச்சாமி சிவபாலன் அவர்கள் எழுதிய 'அ ஆ இ.. உயிர்மொழி' பாடநூல் வெளியீட்டு விழா*

*நேரம்:* மாலை 05:30 மணி

*இடம்:* The Town Hall, Barking Road
East Ham, London, E6 2RP

*தொடர்புகளுக்கு:* 07958 007 132

MAY 26 SUNDAY

**இன்னிசைக் கச்சேரி**

*யாழ்-மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியின் நூற்றாண்டு விழா நிதி சேகரிப்புக்கான ஸ்ரீமதி சாருலதா மணியின் இன்னிசைக் கச்சேரி.*

*நேரம்:* மாலை 06:30 மணி முதல்

*இடம்:* Sivan Center, 12A, Lee High Road,
Lewisham, SE13 5ES

*தொடர்புகளுக்கு:* chu.ramanathancentenary@gmail.com

**நடந்த நிகழ்வுகள் மற்றும் நடக்க இருக்கும் நிகழ்வுகள் எவையாயிருந்தாலும் பிரசுரிப்பதற்கு தொடர்பு கொள்ளுங்கள்**

அனுப்பவேண்டிய முகவரிகள் –
www.facebook.com/orupaper
Email: info@orupaper.com
தொலைபேசி இலக்கம்: 020 7043 4314.




# கற்பக விநாயகர் கோவில்

**2-4, Bedford Road, london E-17, T: 0208 527 3819**



அற்புத அருள் புரியும் கற்பகன் பொற்பதம் பணிந்தால் நற்பலன் நாம் பெறலாம்

## வசந்த நவராத்திரி விழாவும் சந்திர தேர் உற்சவமும்

**11.04.2013 வெள்ளிக்கிழமை முதல் 20.04.2013 சனிக்கிழமை வரை**

கற்பக விநாயகப் பெருமானின் சந்நிதானத்தில் அன்னையின் அருள் பிரகாசிக்கும் ராஜ ராஜேஸ்வரி, மீனாட்சி, துர்க்கை, லட்சுமி, அம்பிகை போன்ற சாக்த வடிவங்களைப் போற்றி விழா எடுக்கும் வசந்த நவராத்திரி அலங்கார விழா **11-04-2013** தொடக்கம் **20-04-2013** வரை சிறப்பாக நடைபெறவுள்ளது.

**தினசரி வழிபாட்டுக்கால நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| காலை 10.00 மணி | லலிதா திரிசதி ஹோமம், ராஜராஜேஸ்வரி அம்மன் அபிசேகம் |
| மதியம் 12.00 மணி | பூஜை |
| மாலை 5.00 மணி | கட்கமாலா ஹோமம், மீனாட்சி அம்மன் அபிசேகம் |
| மாலை 6.00 மணி | மூலஸ்தான பூஜை |
| மாலை 6.30 மணி | ஸ்ரீ சக்கர பூஜை |
| இரவு 7.00 மணி | வசந்த மண்டப பூஜை தொடர்ந்து திருவீதியுலா இசை சமர்ப்பணம் |

**அலங்கார தரிசனம்**

| | |
|---|---|
| 11 /04 /2013 வியாழன் | ஸ்ரீ ராஜராஜேஸ்வரி தரிசனம் |
| 12 /04 /2013 வெள்ளி | ஸ்ரீ அபிராமி தரிசனம் |
| 13 /04 /2013 சனி | ஸ்ரீ சரஸ்வதி தரிசனம் |
| 14 /04 /2013 ஞாயிறு | ஸ்ரீ நாகபூசணி தரிசனம் |
| 15 /04 /2013 திங்கள் | ஸ்ரீ காமாட்சி தரிசனம் |
| 16 /04 /2013 செவ்வாய் | ஸ்ரீ கேதாரகௌரி தரிசனம் |
| 17 /04 /2013 புதன் | ஸ்ரீ சந்தான பாக்யலட்சுமி தரிசனம் |
| 18 /04 /2013 வியாழன் | சப்பறம் |
| 19 /04 /2013 வெள்ளி இரவு | சந்திர தேர்த் திருவிழா |
| 20 /04 /2013 சனி | பூங்காவனம் |

- குறிப்பு – **14-04-2013** ஞாயிற்றுக்கிழமை விஜய வருட சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு காலை 8.00 மணி முதல் விநாயகப் பெருமான் அபிசேகம், பஞ்சமுக விநாயகர் சங்காபிசேகம் இரவு அம்பிகையின் அருட்காட்சியுடன் பஞ்சமுக விநாயகப் பெருமானும் வீதி உலா.
- **18-04-2013** வியாழக்கிழமை பகல் அபிஷேகம் நடைபெறும். இரவு சப்பறத் திருவிழா.
- **19-04-2013** வெள்ளிக்கிழமை காலை பூசை மீனாட்சி ராஜராஜேஸ்வரி அபிசேகம் ஸ்ரீ சக்கர பூசை பூர்த்தி.
- மாலை 06:00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை தொடர்ந்து நவசக்தி அர்ச்சனை இரவுத் தேர்த் திருவிழா

அடியார்கள் அனைவரும் ஆனைமுகன் அருளும் அம்பிகையின் அருளும் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்!

இங்ஙனம், ஆலய நிர்வாகத்தினர், உபயகாரர்கள்.

# அரசியல் பிழைத்தாருக்கு அறமே கூற்றாகும்



## தம்பி

*“அரசியல் பிழைத்தவர்களுக்கு கை கொடுக்கும் ‘இராசதந்திர’ முகமூடி” என்ற தலைப்பில் ஜனவரி 11, 2013 **ஒரு பேப்பர்** வெளியீட்டில் ராசதந்திரம் குறித்தும், சில தமிழ் அரசியல்வாதிகளின் கயமைகள் குறித்தும் ஒரு பேப்பரின் பொறுப்பாசிரியர் திரு.கோபி எழுதியிருந்தார். நான் அரசியல் விஞ்ஞானம் படித்திராதவனாக இருந்தபோதும் கூட எமது எதிர்காலம் குறித்த ஐயப்பாடுகளுடன் வாசகர்களுடன் கருத்துப் பரிமாற்றம் செய்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.*

சுயவிருப்பு, வெறுப்புகளைப் புறந்தள்ளி தமிழ் அரசியல்வாதிகளின் கடந்தகால நடவடிக்கைகளையே அரசியல் அரிச்சுவடியாகப் பார்ப்போம். இராணி அப்புக்காத்தாகிய செல்வநாயகம் (QC) அவர்கள் எமது வீடு தேடி வாக்கு வேட்டைக்கு வரும் போது தமிழரசுக் கட்சியின் பிரதிநிதியாகத் தம்மை அறிமுகம் செய்து கொண்டே வருவார். எமது பெற்றாரும் இவர் நாடாளுமன்றுக்குச் சென்றால், தமிழை அரசு அரியணையில் வைத்துச் சிறப்பிப்பாரென்ற நம்பிக்கையில் அவரது பின்னணி பற்றி ஆராயாமல் அவரது போட்டியாளரின் பிரச்சாரங்களைச் செவிமடுக்காமல், இயந்திரமயமாக அவருக்கு வாக்களிப்பர்.

**ஈழத்தமிழர் மீது பாய்ச்சும் இந்தியாவின் கொடிய கரங்களை மட்டுமே தடை செய்ய முடியும். எமது விடிவிற்காக நாம் தான் போராடியாக வேண்டும்.**

தமிழரசுக் கட்சி வேட்பாளராக, மக்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், நாடாளுமன்றில் சமஷ்டிக் கட்சிப் பிரதிநிதியாக நாடாளுமன்றின் அமர்வில் பங்குபற்றுவதாகச் சொல்லமாட்டார். மாறாக தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகவே கூறுவார். இப்படித் தமிழ் மக்களை ஏமாற்றி அரசியல் செய்வதுதான் இராசதந்திரமாக தமிழ் அரசியல்வாதிகளால் விளங்கிக் கொள்ளப்பட்டதோ என்னவோ. இந்த மோசடியைப் புரிந்து கொண்ட எமது தேசியத்தலைவர் தனதுசகோதரியின்திருமணத்தின்போது தனக்கு அணிவிக்கபட்ட மோதிரத்தை விற்றுப் பெற்ற பணத்தில் வாங்கிய கைத்துப்பாக்கியுடன் தமிழ்மக்களுக்குத் தீர்வாக ஆயுதப் போராட்டப் பாதையைத் தெரிவு செய்கிறார்.

ஆயுதப் போராட்டம் உருவாகி வளர்ச்சியடைகிறது. தங்களது தலைமைப் பதவி தங்களை விட்டு இளைஞர்களிடம் போய் விடக் கூடாது. இளைஞர்களிடம் போய் விடக் கூடாது என்ற எச்சரிக்கையில் சட்டத்தரணிகள் வட்டுக்கோட்டையில் கூடி தீர்மானம் இயற்றுகின்றனர். தீர்மானத்தை செயல்படுத்துவது போன்ற மாயையைத் தமிழ் மக்களுக்குத் தரும் வகையில் 77ஆம் ஆண்டுத் தேர்தல் சர்வஜன வாக்கெடுப்பாகக் கருதி, தனிநாடு விரும்புவோர் தமக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டனர். மக்களும் அறியாமை காரணமாக, இவர்களுக்குப் புள்ளடி போட்டு வாக்குச் சீட்டை வாக்குப் பெட்டியில் போட்டால், இவர்கள் தனி நாட்டை பெட்டியில் கொண்டு வந்து வீட்டுவாசலில் வைப்பரென்று நம்பி இவர்களை வெற்றிவாகை சூட வைத்தனர். இவ்வாறாகத் தான் தனது உடுப்பிட்டி தொகுதியில் தோற்ற சிவசிதம்பரம்,(வாக்காளர்களுக்கு அறிமுகமாகாமலேயே) நல்லூரில் அமோக வெற்றியீட்டினார். வெற்றி பெற்ற கூட்டணியினருக்கு எதிர்க்கட்சி வரிசை கிடைத்தது. மக்களாணையை காற்றில் பறக்க விட்டனர். மக்கள் தனிநாட்டுக்குத்தான் ஆணை தந்திருக்கிறார்களென்று கூறி ஒற்றை ஆட்சி நாடாளுமன்றைப் புறக்கணித்துப் போராடியிருந்தால், ஒரு வேளை தமிழ் மக்கள் இவ்வளவு அழிவைச் சந்திக்காமலேயே சில ஐரோப்பிய, முன்னை நாள் சோவியத் ஒன்றிய நாடுகளைப் போலவே சமாதானமாகப் புரிந்து நட்பு நாடுகளாக இருந்திருக்கலாம். சட்டத்தரணிகளுக்கு இது தெரியாததல்ல. உள்ளாட்சித் தேர்தல் வந்தபோது, ஆயுதப் போராட்டத்தில் மக்கள் இணைந்து விடக்கூடாது என்ற எச்சரிக்கையுடன், இரண்டு துப்பாக்கிகளுடன் நான்கு தம்பிமார் எதையும் செய்து விடமுடியாது என்று பிரசாரப்படுத்திய இவர்கள் தேர்தலில் வென்றும் தமிழ் மக்களுக்கு எதுவும் செய்யவில்லை.

தமிழர்களை எதிர்க்கட்சி வரிசையில் சகிக்காத சிங்களம் சந்தர்ப்பம் பார்த்து இனக் கலவரம் செய்தனர். சந்தர்ப்பத்தை இந்தியாவும் சாதகமாகப் பயன்படுத்தி இலங்கை அரசியலில் நேரடித் தலையீடு செய்கிறது. இந்தியாவை விலக்கி, இந்தியக் கூலிகளை மீறி தேசியத் தலைவர் தமிழர் போராட்டத்தை முன்னெடுக்கிறார். புலிகளை அழிக்கவும், சிங்களத்தை தனது கட்டுப்பாட்டினுள் கொண்டு வரவுமென,‘தமிழர்களுக்காக எழுதப்பட்ட ஒப்பந்தம்’ என்ற போர்வையில், இந்தியா இராணுவத் தலையீடு செய்கிறது. திலீபன் இந்தியாவின் காந்திய முகத்தைக் கிழித்து இந்தியாவின் கோரமுகத்தை அம்பலமாக்கினார்.

தமிழர் போராட்டம் இலக்கை அடைந்து விடும் என்று பயந்த உலகம் பேச்சுவார்த்தை மூலம் புலிகளை அழிக்க முனைந்தது. பேச்சுவார்த்தைக்கு புலிகள் சார்பில் வந்த தமிழ்ச் செல்வனை ஒரு தொலைக்காட்சி நிருபர் பேட்டி காண்கிறார். அப்போது அவர், “பேச்சுவார்த்தைக்காக நீங்கள் பட்டறைகள் நடத்தினீர்களா? என்னென்ன வகையில் உங்களைத் தயார் செய்திருக்கிறீர்கள்” என தமிழ்ச் செல்வனிடம் வினவினார். (சிங்களம் பயிற்சி பெற்றே வந்திருந்தது.) அப்போது தமிழ்ச் செல்வன் தனக்கேயுரிய எள்ளல் சிரிப்புடன் “இங்கே நாங்கள் பட்டிமன்றம் நடத்தவரவில்லை-யாருக்கு வெற்றி என்று தீர்ப்புக் கூற. மக்கள் பிரச்சினைகளைச் சொல்லித் தீர்வு காணவே வந்திருக்கிறோம்” என்று பதிலளித்திருந்தார். சிங்களத்தை பேச்சுவார்த்தையில் முறியடித்திருந்தார்.

பேச்சுவார்த்தையில் புலிகளை வெற்றிபெற முடியாதஉலகம், ஆயுத ரீதியான இனக் கொலையின் மூலம் புலிகளை அழிக்கத் தொடங்கியது. தாயகத்தைப் பார்த்திராத, தமிழ் பேசத் தெரியாத சிறுவர், சிறுமியர் எல்லாரும் படிப்பு, உணவு, உறக்கம், உறவைத் துறந்து வெயிலில் உருகி, பொலிஸ்காரரின் வன்முறையைத் தாங்கி, இனக்கொலையை நிறுத்துமாறு உலக நாடுகளைக் கேட்டுக் கொண்டனர். அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்காயின. இனக் கொலை முள்ளிவாய்க்காலுடன் முற்றுப் பெற்றது. தமிழர் இரத்தம் காயு முன்னே அபிவிருத்தி, புனர்நிர்மானம் என்ற பெயரில் சீனா இலங்கைத்தீவில் கால்பதித்தது.

உலகநாடுகள் விக்கித்துப் போயின. அமெரிக்காவும், மேற்குலகும் போர்க்குற்றம் என்ற பாதையில் பயணிக்க இந்தியா வேறுவழி தேடியது. சீனாவை மிறி செலவழிக்க இந்தியாவால் முடியாது. உலகப் பணக்காரர் வரிசையில் இந்தியர் இருந்தும் கூட கொமென்வெல்த் மாநாட்டை இலங்கையில் நடத்துவதன் மூலம் அந்நிய முதலீட்டை சிங்களத்துக்கு இறக்கி சீனாவை வெளியேற்றுமாறு சிங்களத்துடன் பேரம் பேச இந்தியா நினைத்தது. அன்றைய கால கட்ட பிரித்தானியாவின் பிரதமர் கோல்டன் பிறவுன் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். ஏன்? தன் பிள்ளைகளை ஒத்த சிறார்கள் கட்டுக்கோப்பாக இனக் கொலைக் கெதிராக அணி திரண்டு தம்மை வருந்தியதை நினைத்திருப்பார். இந்தியாவின் ஆசையில் மண் விழுந்தது. சாணக்கிய தேசம் தனது 60 ஆண்டு வாழ்வில் முதல்முறையாக தமிழ் சிறார்களிடம் தோற்றது. இந்தியா தமிழ்ச் சட்டத்தரணிக்கு காசு கொடுத்து சிறார் போராட்டத்தை அமெரிக்காவின் ஒரு வீட்டின் அறையினுள் பூட்டி வைக்க வழிதேடிக் கொண்டது.

தமிழ் நாட்டின் மாணவர்கள் எங்கள் போராட்டத்தைக் கையிலெடுத்துக் கொண்டார்கள். தமிழர்களைச் சாட்டி இலங்கையுள் நுழைய பிரித்தானியா ஈழத்தமிழரை நாடாளுமன்றுக்கு அழைத்திருந்தது. பாதிப்பிற்குள்ளான நாம், எமது பிரச்சினையை வெளிப்படுத்துவதற்கு இனக்கொலை செய்த அரசின் பங்காளியாகவிருந்த ஸ்டானினை அழைத்ததன் முட்டாள் தனத்தை எங்கே போய் முட்டிக் கொள்ள? எதிரெதிர் அணியில் இருந்தவர்களை ஒன்று சேர்த்ததாக புளங்காதிதம் வேறு இந்தியாவிற்கும் மேற்குலகம் இலங்கைத் தீவு தொடர்பாக என்ன செய்கிறது என்று வேவு பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம். நல்ல வேளை தமிழ் நாட்டு மாணவர்கள் அரசியல்வாதிகளைப் புறம் தள்ளி விட்டனர். அவர்களாவது தேசியத் தலைவரை உணர்ந்து கொண்டிருக்கிறார்களே.

**தமிழ் நாட்டின் மாணவர்கள் எங்கள் போராட்டத்தைக் கையிலெடுத்துக் கொண்டார்கள். தமிழர்களைச் சாட்டி இலங்கையுள் நுழைய பிரித்தானியா ஈழத்தமிழரை நாடாளுமன்றுக்கு அழைத்திருந்தது. பாதிப்பிற்குள்ளான நாம், எமது பிரச்சினையை வெளிப்படுத்துவதற்கு இனக்கொலை செய்த அரசின் பங்காளியாகவிருந்த ஸ்டானினை அழைத்ததன் முட்டாள் தனத்தை எங்கே போய் முட்டிக் கொள்ள?**

ஆனாலும், நாம் தமிழ் நாட்டு மாணவர்களின் போராட்டத்தில் திருப்தியடைந்து சோர்வாயிருக்க முடியாது. ஏனெனில், அவர்களால், தமது பிராந்திய நலனுக்காக ஈழத்தமிழர் மீது பாய்ச்சும் இந்தியாவின் கொடிய கரங்களை மட்டுமே தடை செய்ய முடியும். எமது விடிவிற்காக நாம் தான் போராடியாக வேண்டும்.

அவ்வவ் காலகட்டங்களில் உண்மைக்கான போராட்டங்கள் முறியடித்ததையும், எல்லா ராசதந்திர சூழ்ச்சிகளையும், வரிகளுக்கிடையே வாசித்தால் புரியும். இதையே தலைவரும் பின்பற்றினார். நானும் தலைப்பாகவே கொடுத்திருக்கிறேன்.

* கூற்று என்பது யமன்



# அறஞ்செய்ய விரும்பு

சமீபத்தில் நல்வழி என்று தலைப்பிட்ட ஒரு வெளியீடு இலவசமாகக் கிடைக்கப்பெற்றேன். இப்புத்தகத்தை தமது தாய், தந்தையரின் நினைவாக நிறுவப்பட்ட அறக்கட்டளையின் நிதியூடாக வெளியிடப்பட்டு யாழ்ப்பாணத்தில் இயங்கும் அனேக பாடசாலைகளில் பயிலும் மாணவர்களிடம் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளது. இத்தகைய தரும சிந்தனை வெகு சிலருக்கே உதிப்பதை ஒப்புக் கொண்டு தான் ஆகவேண்டும்.

இந்நல்வழி புத்தகத்தை வாசித்து முடிந்தவுடன் இதில் அடங்கியுள்ள அறிவுரைகள் சிறு வயது மாணவர்களுக்கு மட்டுமல்ல, முதிர்ச்சியடைந்த மனிதர்களுக்கும் மிகவும் பயனுள்ளதென்பதை உணர முடிந்தது. பள்ளிப் பராயத்தில் படித்த பல அறிவுரைகள் இதில் அடங்கியிருந்தாலும் அதைப் படித்த காலத்தில் உணர முடியாத நல்வழிகள் எந்தக் காலத்திலும், எந்தப் பராயத்திலும் உதவக் கூடிய அற்புதமான அறிவுரைகள் அடங்கியுள்ளதை படிக்க படிக்க மனதில் மோதியதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாமென ஆசைப்படுகிறேன்.

ஔவைப் பாட்டியார் தந்துதவிய பல நூல்களில் ஆத்திசூடி முதன்மை பெறுவதை எவரும் ஒப்புக் கொள்வர். இரண்ரொரு சொற்களில் அடங்கியுள்ள அற்புதமான அறிவுரை எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எப்போதும் மனிதவர்க்கத்திற்கு வழிகாட்டும் நற்சிந்தனையாக அமைந்துள்ளது இன்றியமையாதது. ஆத்திசூடியில் வரும் முதல் சிந்தனையான 'அறஞ் செய்ய விரும்பு' என்ற அடிகளை ஆராய்வோமேயானால், எங்கள் மத்தியில் தருமம் செய்ய விரும்பும் மக்களின் தொகையைக் கணக்கில் எடுத்தால் உலகச் சனத்தொகையில் ஒரு சதவிகித மக்களும் இருப்பார்களே என்பது சந்தேகமே. எனினும், அல்லல்படும் மக்களுக்கு உதவ தரும நிறுவனங்கள் பல தவறாது தொண்டாற்றி வருவதை யாழ்ப்பாணத்திற்கு சென்ற சமயம் காணக்கூடியதாக இருந்தது.

இந்த மாற்றத்திற்கு தமிழ் மக்கள் முகங்கொடுத்த பாரிய இழப்புகளும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் தரும சிந்தனையும் காரணமாக இருக்கலாம். இத்தரும ஸ்தாபனங்கள் ஆற்றும் தொண்டுகளை நேரினில் பார்த்தபோது ஔவையாரின் 'அறஞ்செய்ய விரும்பு' என்று மாணவப் பிராயத்திலே படித்து மனனஞ் செய்த வரிகள் தான் ஞாபகத்திற்கு வந்தது. இத்தரும ஸ்தாபனங்கள் செய்யும் தொண்டுகள் நீடிக்கவும் நலிவுற்ற ஈழத்து தமிழ் மக்கள் புனர்வாழ்வு செலவும், ஈழத்தில் பிறந்த ஒவ்வொரு தமிழனும், தமிழிச்சியும் அறஞ்செய்ய விரும்புவது இன்றைய கால கட்டத்தின் தேவையாகும்.

# முடியளவு என்டொஸ்கோப்

நவீன சிகிச்சை முறையில், என்டொஸ்கோப் (Endoscope) பிரதான பங்கை வகிப்பது சகலரும் அறிந்ததே. கண்களால் காண முடியாத உடலின் உள்உறுப்புகளை வாய்வழியாகச் செலுத்தப்படும் என்டோஸ்கோப், உடலுக்குள்ளே சென்று அதனுடன் பொருத்தப்பட்டுள்ள ஒரு கமராவும், வெளிச்சமும் உடலுக்குள் உண்டாகும் பிரச்சினைகளை வெளியில் திரையில் தோன்றும், காட்சிகள் மூலம் அறிவதால் தகுந்த சிகிச்சையை அளிக்க வைத்தியர்களுக்கு அனுசரணையாக இருந்து வருகிறது. எனினும், சில குறுகிய இடங்களுக்கு செல்ல முடியாத ஒரு சிக்கல் இருப்பதனால் இந்த என்டோஸ்கோப்பின் அளவைக் குறைக்க முடியாதா என்ற ஆராய்ச்சிகள் முடக்கிவிடப்பட்டுள்ளன.

கலிபோர்னிய மாநிலத்தை தளமாகக் கொண்டு இயங்கும் ஸ்ரான்போர்ட் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த யோசப் கான் என்பவரும் அவரது சகாக்களும் தொடர்ந்த ஆராய்ச்சிகளின் பலனாக ஒரு மயிரளவே அகலம் கொண்ட ஒழியியல் நாரை (optical fibre) உருவாக்கியுள்ளனர். பல அடுக்குகள் கொண்ட நார்களை உள்ளடுக்கும் என்டொஸ்கோப் அல்லாது, தனியொரு நாரைக் கொண்டே ஒழியில் சிதறல்களின்றி, உண்மையான உருவத்தின் காட்சியை திரைக்கு கொண்டு வர இப்புதிய பொறிமுறை வழிவகுத்துள்ளது. 2.5 மைக்ரோ மீற்றர் குறுக்களவைக் கொண்ட உறுப்புகளை ஆராயக்கூடிய இப்புதிய என் டொஸ்கோப் 4 மடங்கு அதிக சக்தி வாய்ந்ததாகவும், புற்றுநோய் அணுக்களையும், மூளையின் செயல்களை நுட்பமாக ஆராயவும் இதை உபயோகிக்க முடியுமென ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள்.

இதன் பதிவு செய்யும் திறமையை 3.0 மைக்ரோ மீற்றர் அளவுக்கு அதிகரிக்க முடியுமென நம்பும் ஆராய்ச்சியாளர்கள், மருத்துவத் துறையில் இது ஒரு புதிய பொறிமுறை என இல்நோய்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்நத ஸ்ரீபன் போபர்ட் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறார்.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

# தொழு நோய் ஒழியட்டும்

தொழு நோயால் (LEPPROSY) பீடிக்கப்பட்டவர்களை, நாளாந்த நடமாட்டத்தில் கண்பது அரிது. ஆனால், இந்தக் கொடிய நோயால் பீடிக்கப்பட்டவர்களின் தொகையை உலகளவில் கணக்கெடுத்தால், வருடமொன்றுக்கு 250,000 நோயாளர்கள் புதிது புதிதாகக் கண்டுபிடிக்கப்படுவதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது. இந்தப் புள்ளி விபரத்திற்கு மேலாக 6 மடங்கு அதிகமான நோயாளர்களை கண்டு பிடிக்கப்படவில்லையென்பதும் புதிய தகவலாக உள்ளது. 1980ஆம் ஆண்டளவில் சேகரிக்கப்பட்ட புள்ளி விபரங்களின்படி உலகளவில் 12 மில்லியன் நோயாளர்கள் இருந்ததாகவும், உலக சுகாதார நிறுவனம் எடுத்த சில நடவடிக்கைகள் மூலம் 2000 எண்ணிக்கை குறைந்ததாகவும் அறிகிறோம்.

தொழுநோய் பற்றிய ஆராய்ச்சியில் மிக ஆர்வமாக ஈடுபட்ட மல்கொம் டூசி கண்டுபிடித்த புதிய முறையிலான இரத்த பரிசோதனை மூலமும், அதற்கான தடுப்பூசியும் வெகுவிரைவில் நடைமுறைக்கு வருவதற்கான அறிகுறிகள், இவர்கள் நடாத்திய பரிசோதனைகள் தெளிவு செய்கின்றன.

ஆராய்ச்சியாளர்களின் அறிவுரையின் பிரகாரம், தொழுநோய் தொற்று நோயாளியின் அறிகுறிகளை முன்கூட்டியே அறிந்து கொள்ள முடியுமானால் இந்நோயைத் தடுக்கும் ஊசிகளை போதிய கால இடைவெளியில் பாவித்து இந்நோயைத் தடுக்க முடியுமென்பதே இவர்களுடைய சிகிச்சையின் இரகசியமாகும். இவர்கள் கண்டுபிடித்த இரத்த பரிசோதனை உபகரணம், சாதாரண தாய்மை அடைந்த நிலையை (Prefnancey Test) வீட்டிலேயே அறிந்து கொள்ளக் கூடியது போன்று, மிகவும் இலகுவாகக் கண்டு கொள்ள முடியுமென்றும், நோயின் அறிகுறிகளை 9 தொடக்கம் 12 மாதங்களுக்கு முன்னரே தெரிந்து கொள்ள முடியுமென நிரூபிக்கப்பட்டுள்ளது.

தொழுநோயைத் தடுக்கும் ஊசி ஏற்கனவே பரீட்சார்த்தமாக பரிசோதனை செய்யப்பட்டு விட்டதாகவும், இந்த வருட முடிவிலோ அல்லது அடுத்த வருட ஆரம்பத்திலோ, சிகிச்சைகளின் பெறுபேறுகள் கிடைக்கப் பெறுமென ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும், தடுப்பூசியின் பாவனை நடைமுறைக்கு வர சில வருடங்கள் எடுக்கக் கூடுமென நம்பிக்கை தெரிவிக்கும் உலக சுகாதார நிறுவனம் தொழுநோயை முற்றாக ஒழிப்பது நிச்சயம் என தெரிவித்துள்ளது. தொழுநோயைப் பொறுத்தளவில், இதன் ஆரம்ப அறிகுறிகளை முன்கூட்டியே தெரிந்து கொள்வது தான் இவ்வாராய்ச்சியாளர்களின் இலக்காக உள்ளது. தாமதமான தகவல்களால் பயன் கிடைப்பது நம்பிக்கையில்லை என்பதால், மக்களின் ஒத்துழைப்பு மிக மிக அவசியம் என்கிறார்கள்.

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.




Bringing
Great
food
to Life
NO 1 Brand
Niru BRAND®
Quality you can taste
Niru Europe Ltd, Unit11, Mitcham Industrial Estate, 85 Streatham Road, Mitcham, Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk

# மாணவர்களுக்கு வேண்டும் அரசியல்!

மாணவர்கள் தமிழீழத்திற்காக வீதியில் இறங்கி களங்காணும் கண்கொள்ளாக் காட்சிகளை நாம் கண்டோம். இந்தி எதிர்ப்பு போராட்டத்திற்குப் பிறகு நமது காலத்தில் நாம் கண்ட மாணவர் பேரெழுச்சி இது. லயோலா மாணவர்கள் பட்டினிப்போராட்டம் தொடங்கினார்கள். வற்றிச் சுருங்கிய பட்டினி வயிறுகள் போராட்டப் பெருந்தீயை ஊட்டி வளர்த்தன. இந்திய அரசின் பச்சை துரோகத்தை ஆர்ப்பாட்டங்களால் அம்பலப்படுத்தினர். தமிழின துரோகம் முற்றுகையிடப்பட்டது. தமிழீழ மக்களின் படு கொலைக்கு விண்ணதிர நீதிகேட்டனர். ராஜபக்சே வீதிகளில் விசாரிக்கப்பட்டான். காங்கிரஸ் கட்சியின் அடையாளங்கள் தமிழகத்திலிருந்து பெயர்த்தெறியப்பட்டன. மாணவர் போராட்டம் எங்கும் மாணவர் போராட்டம். மாணர்களுக்கு நமது வீரவணக்கங்கள். இந்தப் போராட்டம் வலுப்பெற வேண்டும். தமிழீழத்திற்கு தொடர்ந்து குரல்கொடுத்துவரும் பல்வேறு இயக்கங்களுடன் பாடுபட்டோம் தங்களால் இயன்ற அளவுக்கு இப்போராட்டங்களோடு துணை நின்றோம். அதில் காலத்தாற் சிறந்த பணி சரியான அரசியல் கோரிக்கைகளை மாணவர் போராட்டத்தோடு இணைத்தது தான். அதன்வெற்றியாக சுதந்திரமான பன்னாட்டுவிசாரணை, இனப்படுகொலை, பொதுவாக்கெடுப்பு போன்ற திருத்தங்களைக் கோரி அமெரிக்கத் தீர்மானத்தை அம்பலப்படுத்தல், அமெரிக்கத் தீர்மானத்தைப் புறக்கணித்தல், இந்திய அரசிற்கு எதிராக போராட்டத்தை ஒன்றுகுவித்தல் என அடுத்தடுத்துமிகச்சரியான திசையில் அது பயணப்படடது. தி.மு.க.வை பதவி விலக வைத்து, தமிழக சட்டசபையின் தீர்மானமாக அதை மாற்றியது. இந்திய நாடாளுமன்றத்தைப் பணிய வைக்கும் போராட்டமாக தெளிவாக முன்னேறி வருகிறது. இந்த அரசியல் திசை வழியில் மாணவர்கள் சரியாக பயணப்படுவதற்கு மிக அடிப்படையான காரணம், தமிழீழ ஆதரவில் உறுதியாகக் களமாடிவரும் பல்வேறு கட்சிகளும் இயக்கங்களும் தனிப்பட்ட முறையில் சில உணர்வாளர்களும் போருக்கு முன்பும் பின்பும் ஆற்றிவரும் அரசியல் பணிகளே ஆகும்.

### மாணவர்களும் அரசியலும்

இந்நிலையில் மாணவர்கள் போராட்டம் வலுப் பெற்றவுடன் மாணவர்கள் போராட்டத்தில் 'அரசியல் வேண்டாம் ! அரசியல் கட்சிகள் - இயக்கங்கள் வேண்டாம்' என்ற கருத்து இயல்பாகவே மாணவர்களிடமிருந்து மேலோங்கியது. ஏனெனில் கொள்கையற்ற பிழைப்புவாத - சந்தர்ப்பவாத, தனிநபர் துதிபாடி அரசியல் கட்சிகளின் மீது அவர்களுக்குள்ள இயல்பான வெறுப்பின் காரணமாக அவற்றை அவர்கள் முன்வைக்கின்றனர். அவர்களின் நம்பிக்கையை பெறும் அளவில் எந்தக்கட்சியும் மாற்றாக வளராத நிலையில் அவர்களுக்கு அரசியல் என்பதே கெட்ட வார்த்தையாகப் படுவது என்பதும் இயல்புதான். இதில் அவர்களைக் குற்றம் சொல்ல ஒன்றும் இல்லை. ஆனால் மாணவர்களின் ஒவ்வொரு கோரிக்கையும் அரசியல் கோரிக்கைகள். அவர்களின் இந்தப் போராட்டம் முழுக்க தமிழ் தேசத்தை எழுச்சி கொள்ள வைத்த அரசியல் பணியாக முன்னேறியது. அவர்கள் காங்கிரஸ் - தி.மு.க போன்ற அரசியல் கட்சிகளை அம்பலப்படுத்தினார்கள். இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கைக்கெதிராக வீதிப்போரை பிரகடனப்படுத்தினார்கள். தமிழீழத்தில் நடந்தது இனப்படுகொலை என்று உலக உதாரணங்களைக் காட்டி அரசியல் பேசினார்கள். ஆயுதந்தாங்கிய அரசியல் இயக்கமான விடுதலைப் புலிகளை ஆதரித்தார்கள். இதில் எங்கு அரசியல் இல்லை. எல்லாம் அரசியல் தான். அரசியலை கடுமையாக வெறுக்கும் மாணவர் மனம் எப்படி இதை ஏற்றது? இந்த பிரச்சனைகளின் மீது பொதிந்துள்ள நீதியும் இது ஒரு நீதியான அரசியல் போர் என்பதை மனதளவில் அவர்கள் ஏற்றதுதான் காரணம். ஆக மாணவர்களின் விருப்பம் நீதிக்கான அரசியல். அரசியலின் பேரால் நடக்கும் சுயநலவேட்டையையும் பிழைப்பையும் மோசடிகளையும் ஒழித்து, ஒரு நேர்மையான கொள்கைப் பற்று கொண்ட அரசியல் வேண்டும் என்பதே மாணவர் விரும்பும் அரசியல். ஆக மாணவர் வெறுப்பது அரசியலையல்ல அரசியலின் பேரால் நடத்தப்படும் வியாபாரத்தையும் லாப வேட்டையையும் தான்.

மாணவர்கள் சமூகப் பொறுப்பற்ற உதிரிக்கூட்டமாக இருந்ததையே அனைவரும் பார்த்து வந்தோம். இதை உருவாக்கியவர்கள் ஆட்சியாளர்கள் தான். மோசமான கல்விமுறை மற்றும் வியாபாரக் கல்வியின் உற்பத்தியாகவே அவர்கள் இருந்தனர். அதே மாணவர்கள் தான் பாலச்சந்திரனின் படுகொலையைக் கண்டு வெகுண்டெழுந்து மழுங்கடிக்கப்பட்ட உணர்வுகளை மீட்டுள்ளனர். இனி தமிழக மாணவர்கள் ஒரு அரசியல் சக்தி. அவர்கள் சரியான அரசியலை நோக்கி பயணப்பட வேண்டும். ஒரு மெய்யான ஜனநாயக அரசியலை நோக்கியும் விடுதலை அரசியலை நோக்கியும் பயணப்பட வேண்டும். அவர்களின் சரியான பயணம் சரியான அரசியலை நோக்கிய தேடலில் தான் இருக்கிறது. மாணவர்கள் அரசியலைத் தேடுவது மட்டுமின்றி ஒரே கொள்கையும் லட்சியமும் கொண்ட அமைப்பாகத் திரள வேண்டும். இப்போராட்டத்தில் அறிவிக்கப்படாத ஒரு அமைப்பாக திரண்டதன் விளைவுதான் மாணவர் சக்தியாக உருப்பெற்றது. ஆனாலும் பல இடங்களில் மாணவர்கள் வகுப்புகளைக் களைத்துவிட்டு வழிகாட்டுதல் இல்லாமல் குழம்பி நிற்கக்கூடிய நிகழ்வுகளும் நேரத்தான் செய்தன. எனவே அப்படிப்பட்ட பலவீனங்களை அடுத்தகட்டப் போராட்டத்தில் களைய வேண்டுமானால் அமைப்பாதல் அவசியம். தேடுவதும், உரையாடுவதும், சரியான அரசியல் என்று அடையாளம் தெரிந்தால் அதில் இணைவதும் தான் முன்னேற்றத்தை நோக்கிய பயணமாக இருக்கும். சரியான அரசியலின் கீழ் சரியான கட்சி அல்லது அமைப்பாக அமைப்பாகும் வரை அந்தத் தேடல் நிற்கக் கூடாது. ஏனெனில் நமக்காக எந்த அதிகார அமைப்பும் துணைநிற்கப்போவதில்லை நமக்கான பலம் நமது கருத்தொற்றுமை. நமக்கா பலம் நமது செயல் ஒற்றுமை. நமக்கான பலம் நாம் ஒற்றை அமைப்பாக ஒரே முடிவும் ஒரே செயலும் கொண்ட அமைப்பாக மாறுவது தான். எவராவது அமைப்பாகாதே என்று சொன்னால் அது உங்களைக் களைப்பதற்கான சதி. எவராவது அரசியல் சாக்கடை ஒதுங்கிவிடு என்று சொன்னால் அது நம்மை அரசியல் அரங்கிலிருந்து அகற்றிவிட்டு மீண்டும் சமூகப் பொறுப்பை கொடிய சக்திகளிடம் ஒப்படைக்கச் சொல்லும் சூழ்ச்சி. ஆகவே நாம் அரசியலை முன்னெடுக்க வேண்டும். ஒரே அமைப்பாக அணிதிரள வேண்டும்.

### மாணவர் போராட்டமும் சில குயுக்தி அரசியலும்

இந்தப் போராட்டத்தில், தமக்கான அரசியல் கருத்துக்களுடன் இயக்கம் நடத்தி வருபவர்கள், மாணவர்களுடன் தனிப்பட்ட முறையிலான நெருக்கத்தை பயன்படுத்திக் கொண்டு, மாணவர் போராட்டத்தில் 'அரசியல் வேண்டாம்' என்று கிளப்பிவிட்டனர். பொதுவாக அரசியலுக்கு எதிராக வெறுப்பைக் கிளப்பிவிட்டு, தாம் மட்டும் மாணவர்களுடன் நின்று அரசியல் செய்வது என்பதே அதன் உள் நோக்கம். இந்த வேலை, ஒட்டு மொத்தமாக தமிழீழத்திற்காகப் பாடுபடும் இயக்கங்களையும் சேர்த்து ஒதுக்கும் இடத்திற்கு மாணவர்களைத் தள்ளியது மாணவர்களுக்கு அரசியல் கோரிக்கைகளையும் போராட்ட உத்திகளையும் சொல்லிக்கொடுத்தவர்களையே மாணவர்கள் வெறுத்து ஒதுக்கும் நிலைக்கு அவர்கள் காரணமாயினர்.

ஆகவே மாணவர்களை நேர்மையாக வழிநடத்தவும் முன்பின் முரணற்ற அணுகுமுறைகளையும் மேற்கொள்ள வேண்டியது பொறுப்புணர்வுள்ள ஈழ ஆதரவு இயக்கங்களின் கடமையாகும். முரணற்ற வகையில் மாணவர் ஒற்றுமைக்கும் மாணவர் போராட்டத்தை வலுப்படுத்துவதற்கும் எப்போதும் போல் சுயநலமின்றி துணை நிற்போம்.

*தங்கப்பாண்டியன் (நன்றி:கீற்று)*

காசி ஆனந்தன் நறுக்குகள்!

- விடுதலை -

சாகடிக்கப்
படலாம்...
நாங்கள் -
தோற்கடிக்கப்
படமாட்டோம்.



# தமிழக மாணவர்...

*(18ம் பக்கத் தொடர்ச்சி)*

தற்போதைய அரசியற் சூழ்நிலையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். தெய்வ அருளால் இந்த நிலைநீடிக்க வேண்டுமென்று பிரார்த்திப்போம். எமையாளும் ஈசன்செயலால் நாம் நினையாத ஒன்று எமக்காக நடைபெறுகிறது. திருவருளால் தொடக்கப்பட்டது எளிதில் அடங்கிப்போக வாய்ப்பில்லை.

மாணவர்களை யாரும் எளிதில் தம் கைவசப்படுத்திவிட முடியாது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசியலில் ஆதாயம் தேடமுயற்சிக்கும் எந்தத் தனிமனிதரும் அல்லது கட்சியும், தமது சுயநல நோக்கங்கள் நிறைவேறியதும் எளிதில் ஒளிந்துகொள்ளவோ அல்லது ஓடிவிடவோ முடியாதபடி மாணவர்களின் போராட்டங்கள் தக்க தலைமையின்கீழ் வழிப்படுத்தப்படவேண்டும். அப்போதுதான் தமிழகத்தில் முற்றுமுழுதாக அரசியலுக்கு அப்பாற்பட்ட வெகுஜனப் போராட்டமாக ஈழத்தமிழர் நலன்குறித்த போராட்டங்கள் வடிவெடுக்கும்.

நாம் நினையாமலேயே எமக்கான ஆதரவையும் எழுச்சியையும் ஆரம்பித்து வைத்த இறைவன் அதனை சோர்ந்து போகவிடாது தர்மத்தின் வெற்றி உறுதிப்படும்வரை கொண்டுசெல்வார் என நம்புவோம். தர்மம் இடைவிடாது போராடி அதர்மத்தைத் தின்றுகொண்டேயிருக்கும். அதன் வேலை அதுதான். அதற்காக உலகை உலுக்கி உலுக்கி எமக்கு நேர்ந்த அநீதிகளுக்கான நியாயத்தைப் பெறும்வரை, தமிழினத்திற்கு நிரந்தர விடிவுஏற்படும்வரை, மண்ணில் புதையுண்டுபோன எமது உறவுகளின் ஆத்மா எம்மினத்தைச் சோரவிடாமல் தூண்டிக்கொண்டேயிருக்கும்.

அந்த அமானுஷ்யத் தூண்டலின் விளைவாகவே நாம் எமது தொப்பூழ்க் கொடியுறவுகளின் ஆதரவுப் போராட்டங்களை நோக்க வேண்டும்.

அதனால்...

*உண்ணாத நோன்பிருந்து உலகில் தமிழீழ*
*மண்ணை அமைப்பதற்காய் வருந்தும் உறவுகளே!*
*பேரணிகள் செய்தெம் பிரச்சனைக்குத் தீர்வுவர*
*ஓரணியில் நிற்கும் உலகத் தமிழினமே!*
*ஒன்றுபடக் கூடி உரிமைக்காய் போராடி*
*வென்றெமது தாயகத்தை மீட்கத் துடிக்கின்றீர்!*
*தர்மம் தலைதிருப்பித் தமிழனுக்கு வஞ்சகர்கள்*
*கர்மம் புரிந்ததனைக் கண்கலங்கப் பார்க்கிறது.*
*இந்த நிலையெமக்கு இறையருளால் வந்ததென்று*
*சிந்தைகொள்வோம் மூண்ட தீயை வளர்த்தெடுப்போம்*
*இந்தியத்து வல்லாண்மை எம்மை ஒடுக்கிவிட*
*வந்தாலும் எங்கள் வலிமை குறையாது.*
*சொந்தங்கள் ஒன்றாவோம் தொடர்வோம் எப்பாடுபட்டும்*
*தாயகத்தை மீட்போம். தமிழனது நாட்டினிற்தான்*
*போயகலும் பொல்லாப் பொழுது.*

*தொடருவம்.....*

பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312
உங்கள் வாழ்க்கைத் துணையை
தேர்ந்தெடுக்க வேண்டுமா?
TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா



# கோயில்கள், பயன்கள், குழப்பங்கள்..



பாரிஸ் மாணிக்கப்பிள்ளையார் கோவில் தர்மகர்த்தா சந்திரன் என்ற சந்திரசேகரர் காலமாகிவிட்டார் என்பது அண்மைய செய்தி. பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் ஒவ்வொரு கோடை உற்சவ நிறைவிலும் பிரதான வீதிகளில் தேரில் விநாயகர் ஊர்வலம் வருகின்ற நிகழ்வின் நிர்வாகி இவர். சுமார் 2 லட்சம் மக்கள் இன,மத பேதமின்றி கலந்து கொள்ளும் தேர் உற்சவ நிகழ்வு இது.

அளவெட்டியை பிறப்பிடமாகக் கொண்டவர் சந்திரன். கட்டைப் பிரமச்சாரி. சென்ற 17 ஆண்டுகளுக்கு மேலாக பாரிஸில் இந்த ஆலயத்தை அமைத்து நடாத்தி வருபவர். பேசப்படும் விமர்சனங்களுக்கு மத்தியிலும் தமிழர் கலா சாரம். ஐரோப்பிய நாடு ஒன்றின் தலைநகரில் அடையாளப் படுத்தப்படுவதற்கு காரணமாக இருந்தவர் என்ற நிலையில் அவர் ஒரு தலைத்துவம் மிக்க தமிழர் ஆவார். புலம்பெயர் நாடுகளில் தமிழர் அன்றாடம் அல்லது வாராந்தம் ஒன்று கூடும் தளங்களாக திகழ்வது ஆலயங்கள், தமிழ்ப் பள்ளிகள், மூத்தோர் சந்திப்பு நிலையங்கள் என்பனவே.

சைவ ஆலயங்கள் மட்டுமல்ல கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களும் கூட பிரபல தேவாலயங்களில் தமிழில் ஆராதனை செய்வதில் முனைப்புக் காட்டி வருகின்றார்கள். ஆங்கில தேவாலயங்களோடு நேரத்தைப் பகிர்ந்து கொண்டு அல்லது பிரத்தியேகமாக ஆலயங்களை வாடகைக்கு அமைத்துக் கொண்டு இவ்வாறாக செயற்படுகிறார்கள். தெற்கு லண்டன் பகுதியில் ரூற்றிங், வொலிங்டன் நகரங்கள் உட்பட பல திசைகளிலும் தேவாலயங்கள் தமிழில் பிராத்தனைகள் ஒலிக்கின்றன. தமிழர் ஒன்று கூட தம் சந்ததியினருக்கு பாரம்பரிய கலாசார பழக்கவழக்கத்தை அவற்றுடன் கூடிய ஒழுக்கத்தை நெறிப்படுத்த ஆலயங்களின் பங்களிப்பு முக்கியமானது என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்து.

ஆலயங்கள் நடத்தும் நிர்வாகிகள் குறித்து அதிப்தியும், விமர்சனங்களும் புலம்பெயர் நாடுகளிலும் அதிகம் எழுகின்றன. தனிப்பட ஆலயங்கள் நடத்தும் தர்மகர்த்தாக்கள் பற்றி விமர்சிக்க வாய்ப்பில்லை. விரும்பினால் வாருங்கள், கும்பிடுங்கள். விரும்பினால் உண்டியலில் காசைப் போட்டு அர்ச்சனை செய்யுங்கள். விசேட உபயம் வேண்டுமா? இது தான் கட்டணம். உங்கள் பெயர் குறித்த என்வலப்பிற்குள் பணத்தை வைத்து உண்டியலில் இடுங்கள் என்று கூறுகின்றது அந்த தனியார் நிர்வாகக் கூலிகள். உயர் பதவிகளிலுள்ள கல்விமான்கள் உட்பட பலரும் தொண்டர்களாக நித்திய பக்தர்களாக, உபயகாரர்களாக இந்த ஆலயங்களிலும் காணப்படுகின்றார்கள். கேள்வி கேட்க இடம்வைக்காத கோவில்கள் இவைகள். தாயகத்தில் கூட தொன்மை வாய்ந்த நல்லைக் கந்தன் ஆலயம், மாவை முருகன் ஆலயம், நகுலேஸ்வரம் என்பன பரம்பரை பூசகர்களை அல்லது சைவர்களை முகாமையாளர்களாகக் கொண்டு காலாகாலமாக இயங்கி வருகின்றன.

புலம்பெயர் நாடுகளில் தம்மை அறக்கட்டளைகளாகப் பதிவு செய்து கொண்டு யாப்பு விதிகளைக் கொண்டு இயங்குகின்ற அங்கத்தவர்களால் பதிவிலியாகிய நிர்வாகிகளை வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்கின்ற கோவில்கள் அதிக பிடுங்குப்பாட்டுக்கு உள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. ஐரோப்பிய நாட்டு அரசாங்கங்களின் கீழ் இயங்கும் அறக்கட்டளை ஆணையத்தின் கண்காணிப்பில் இந்த அறக்கட்டளை ஆலயங்கள் இயங்குகின்றன. அந்த அந்நியர்கள் இவர்கள் இப்படியா என்று வியக்கும் வகையிலே முறைப்பாடுகள் விசாரணைகள் குவிகின்றன. குடாக்கண்டன், விடாக்கண்டன் கதை தான். தமிழர்களிடையே புது இயல்பாகி விட்ட அதிகாரப் போட்டி இந்த அந்நிய நாடுகளிலும் ஆலயங்களில் பிரதிபலிக்கின்றன. ஆன்மா லயப்படும் இடம் ஆலயம் என்கின்றது சைவ தத்துவம். ஆனால் ஆணவம் லயப்படும் இடமாகத் தான் பல சந்தர்ப்பங்களில் அறக்கட்டளை ஆலயச் சந்ததிகள் அமைந்து விடுகின்றன. மிக பலம்வாய்ந்த சமய, சைவ சங்கங்கள் இங்கு இயங்குகின்றது. பழமை வாய்ந்த சமயம், சைவ சமயம் என்கின்றோம். ஆனால் ஒரு கட்டுக்கோப்பு இல்லாத நிலைப்பாடு. எந்த தலைமையில் வழிகாட்டலில் திதி, நட்சத்திரக் கணிப்பை ஏற்றுக் கொள்வதில் முரண்பாடு. முக்கிய விரத தினங்கள் மாறி மாறி ஆலயங்கள் தோறும் அனுட்டிக்கப்படுகின்ற நிலைப்பாடு, இவர்களை அங்கும் இங்கும் எங்கும் காண்கின்றோம். குறிப்பாக புலம்பெயர் நாட்டில் அதிகம்.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

பிரித்தானிய ஆலய ஒன்றியம் உருவாக்கப்பட்டு வருடாவருடம் மாநாடு நடத்தப்படுகிறது. பல ஆலயங்கள் முக்கியமான முரண்பாடுகளுக்குத் தீர்வு காண இதன் முயற்சிகள் கூட வெற்றியளித்திருக்கின்றது. ஆயினும் முக்கிய பல முரண்பாடுகள் இன்னமும் முரண்பாடுகளாகவே இருக்கின்றன. ஒன்றியத்தால் கூட அவற்றைத் தீர்த்து வைக்க முடியவில்லை. ஆயினும் பல விடயங்களில் ஆலயத்தின் கருத்துக்கள் ஒன்றுபட்டு செயற்பட ஒன்றியம் பயன்படுவது பாராட்டப்பட வேண்டியது தான்.

அருள்மிக்க தெய்வங்களாக தங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக தெய்வங்கள் வீற்றிருக்கின்ற ஆலயங்களில் பக்தர்கள் நம்பிக்கையை இழப்பதில்லை. நிர்வாகிகளின் நடவடிக்கையில் அதிருப்தி கொண்டாலும், தாம் வருடாவருடம் செய்து வரும் திருவிழாக்களை அல்லது விரத கால அபிஷேகங்களை அவர்கள் தொடர்கிறார்கள். சமய நீதி நெறி அழியாது என்பதற்கு இது ஒரு நல்ல அறிகுறி. இவற்றின் பலத்தோடு சைவ சமயத்தில் அக்கறை உள்ள ஸ்தாபனங்கள் முரண்பாடுகளைக் களைய ஏற்ற வழிகளைக் காண முன்வர, முயல வேண்டும். பயன்பெற பக்தர்கள் இருப்பார்களேயானால் ஆலயங்கள் புதிதாக அமையவும் குறைபாடாகாது. நெறிப்படும் சமய நீதிக்கு அமைய ஆலயங்கள் இயங்குவது முக்கியம். இந்த பகையாக முரண்பாடுகள் தொடருமேயானால் சமயத்திலும் எங்களுடைய சந்ததிகள் நம்பிக்கை இழந்துவிடுவார்கள் அது கலாசார அழிவுக்கு வழிகோலி விடும். ஆகவே, அவசியம் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாக இது அமைகின்றது.

# கோர்த்து விடும் செய்திகள்

## ■ ஜெனீவாத் தீர்மானங்களால் பயனில்லை

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்கழகத்தில் எடுக்கும் தீர்மானங்களால் தமிழர்களுக்கு எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் கூட்டத்தில் காடையர்கள் சிங்கக் கொடியுடன் சென்று தாக்கியதும் உதயன் பத்திரிகை மீதான தாக்குதலும் நிரூபிக்கின்றன. நிலப்பறிப்பு சிங்களக் குடியேற்றம் போன்றவைத் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் சம்பந்தன் ஐயா ஜெனீவாத் தீர்மானங்களை வரவேற்றார். கட்டத்துரை சொல்லச் சொன்னதைச் சொல்லுமாம் கைப்பிளை.

## ■ கருணாநிதியின் கடிதத்திற்கு உடன் நடவடிக்கை

கருணாநிதி இந்தியத் தலைமை அமைச்சருக்கு எத்தனையோ கடிதங்கள் எழுதினார். அதற்கெல்லாம் உடன் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. கருணாநிதிக்கு எழுதும் போதே தெரியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டது என்று. ஆனால் கருணாநிதியின் ஒரே ஒரு கடிதத்திற்கு மட்டும் இந்திய நடுவண் அரசு உடன் நடவடிக்கை எடுத்தது. எழுதிய கடிதம்: கூட்டணி அரசில் இருந்து விலகும் பதவி விலகல் கடிதம். எடுத்த நடவடிக்கை: மத்திய புலனாய்வித்துறை கருணாநிதியின் மகன் வீட்டில் திடீர் சோதனை.

## ■ இலங்கையில் இன்னும் ஒரு இனக்கலவரம்

அக்கரை நாட்டில் தேர்தல் வரும் வேளை மாணவர்கள் கிளர்ந்து எழுவது ஆளும் கட்சிக்கு உகந்தது அல்ல. அவர்கள் மேல் அடக்கு முறை பிரயோகிக்கப்பட்டால் அது நிலைமையை மேலும் மோசமாக்கும். இதற்கு மத்திய தார் பாரின் தென்மண்டலத்தில் இருக்கும் மலையாளும் பூனூல்கள் வேறு ஒரு பயங்கரத் திட்டம் தீட்டியிருக்கிறார்களாம். அதன் படி மாணவர் கிளர்ச்சியால் கொதிப்படைந்த சிங்களப் பேரினவாதிகள் தமிழர்களைப் பரந்த அளவில் தாக்குதல் நடத்த அதை அக்கரை பூமியின் ஆட்சியாளர் தடுத்து நிறுதுவர். உடனே மாணவர்களின் முட்டாள்தனமான எழுச்சியால் இலங்கையில் தமிழர்களை முற்றாக அழிக்கப்பார்த்தார்கள் நாம் தலையிட்டு தமிழர்களைக் காப்பாற்றிவிட்டோம். இதனால் தமிழர்களுக்கு தாம் எதிரிகளல்ல காப்பாற்றிக் கொண்டிருப்பவர்கள் என்று வாக்காளர்களை நம்ப வைக்கலாம். அத்துடன் மாணவர்களின் போராட்டத்தையும் கொச்சைப்படுத்தலாம்.

## ■ அடுத்தது சிங்கள கிருத்தவர்களா?

சிலர் இறப்பதற்கு முன்னர் சொல்லும் வாக்குகள் நடக்கும் என்று சொல்லுவார்கள். சிங்கள ஊடகவியலாளர் லசந்த விக்கிரமசிங்க கொல்லப்படுவதற்கு முதல் நாஜுப்படையினர் யூதர்களை இனப்படுகொலை செய்தமை தொடர்பான கவிதையான

*When the Nazis came for the communists, I remained silent; I was not a communist. When they locked up the social democrats, I remained silent;*

*I was not a social democrat. When they came for the trade unionists, I did not speak out; I was not a trade unionist. When they came for the Jews, I remained silent; I wasn't a Jew. When they came for me, there was no one left to speak out.*

என்பதை எழுதியிருந்தார். இப்போது இலங்கையில் இசுலாமியர்கள் மீது அடக்கு முறை கட்டவிழ்த்து விடப்படுகிறது. அடுத்தது சிங்கள கிருத்தவர்களா? பாதிரியார்களும் பிக்குகள் போல் காவியுடை அணிய வேண்டும் என்பார்களா?

## ■ சீறும் சின்ஹா

பாரதிய ஜனாதாக் கட்சியின் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் யஷ்வந்த் சிங்ஹா சென்னையில் நடந்த கூட்டத்தில் இலங்கையில் அடக்கு முறை தொடர்ந்தால் தனியீழம் அமைப்பது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும் என்றார். இதை சிலர் பாரதிய ஜனதாக் கட்சியின் கொள்கை மாற்றம் என்கிறார்கள். ஆனால் சில தினங்களுக்கு முன்னர் வட இந்திய ஊடகம் ஒன்றில் நடந்த கலந்துரையாடலில் அவரது கருத்து வேறு விதமாக இருந்தது. பாரதிய ஜனதாக் கட்சியின் இலங்கை தொடர்பான வெளியுறவுக் கொள்கை ஏற்கனவே சுஷ்மா சுவராஜ் கொழும்பு சென்ற போது வைர அட்டிகை மூலமாகத் தீர்மானிக்கப்பட்டு விட்டது.

-ஊருளவாரி

அனைவருக்கும் எமது இனிய சித்திரைப் புதுவருட நல்வாழ்த்துக்கள்
மிகக் குறைந்த செலவில் உங்களுக்கு சேவை செய்யக் காத்திருக்கிறோம்....
இலங்கையில் எந்தப் பாகத்திற்கும் வீட்டுக்கு வீடு சேவை
• VEHICLE SHIPPING
• FURNITURE SHIPPING
• EXPRESS LETTER SERVICE
• PACKING SERVICE
• RELOCATION SERVICE
• MAN AND VAN SERVICE
• PACKING MATERIALS
• EUROPEAN PARCEL SERVICE
பொருட்கள் பெற்றுக் கொள்ளும் இடங்கள்
GREENFORD WIMBLEDON VAUXHALL
BIRMINGHAM LEWISHAM
SOUTH HARROW STOKE-ON-TRENT
A-LANKA TRAVELS LTD, TOOTING
Door to Door Delivery
DUNN SHIPPING LTD.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
T : 020 8842 2020
M : 07949 361 434
M : 07949 361 313
இலங்கை மற்றும் இந்தியாவிற்கு விசேட விலையில் விமான மார்க்கமாகவும் பொதிகள் அனுப்பப்படும்
இலங்கையில் சகல இடங்களுக்கும் வீட்டிற்கு நேரடியாக விநியோகம்
இரண்டு நாட்களில் கொழும்பிற்கான துரித தபால் சேவையும் உண்டு

info@dunnshipping.co.uk
www.dunnshipping.co.uk
67, Gap Road, SW19 8JA, Wimbledon, London

# தமிழர்களை…

(19ம் பக்கத் தொடர்ச்சி)

..கல்வியில் முன்னேறினால் தோட்டத்தில் வேலை செய்ய ஆட்கள் இல்லாமல் போய்விடுவார்கள். இதான ால் தோட்ட முதலாளிகள் திட்டட்டு மலையகத் தமி ழர்களைக் கல்வியில் பின் தங்கியவர்களாக்கினார்கள். இதை இருவருமே மறைத்து இலங்கைத் தமிழர்கள்தான் மலையகத் தமிழர்களின் கல்வியில் பின் தங்கிய நிலைக்குக் காரணம் என்று சொல்லிவிட்டார்கள்.

மலையகத் தமிழர்களிற்கு கண்டி நகரத்தில் வசிக்கும் இந்திய வம்சாவழித் தமிழர்களோ அல்லது கொழும்பில் வாழும் பிரபல வர்த்தகர்களாகத் திகழும் இந்திய வம்சா வளித் தமிழர்களோ உதவி செய்வதில்லை. கொழும்பில் இருந்த ஒரு முக்கிய செல்வந்தரான ஒரு இந்திய வம் சாவழித் தமிழர் யாழ்ப்பாணத் தமிழர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதில்லை. இவர்கள் எல்லாரையும் விட இன்னும் ஒரு முக்கிய தரப்பு மலையகத் தமிழர்களுக்கு உதவி செய்ய வேண்டிய முக்கிய கடமையும் தகமையும் கொண்டிருக்கிறது அந்தத் தரப்பு பற்றி திரேசம்மாவும் குறிப்பிடவில்லை தயானந்தாவும் கேட்கவில்லை.

### ◆ யார் அந்த இன்னொரு தரப்பு?

மலையகத் தமிழர்களுக்கு நேரு கொத்தலாவல ஒப் பந்தம், சிறிமா சாஸ்த்திரி ஒப்பந்தம் செய்த அநியாயங் களைப் பற்றி திரேசம்மாவோ அல்லது தயானந்தாவோ எதுவும் கூறவில்லை. இன்று பிராந்திய வல்லரசு, அணுக் குண்டுகளைக் கொண்ட நாடு, உலகத்திலேயே கடந்த மூன்று ஆண்டுகளாக உலகச் சந்தையில் அதிக அளவு படைக்கலன்களை வாங்கும் நாடு, விண்வெளி ஆராய்ச்சியில் உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றான நாடு, வேகமாக வளரும் பொருளாதரத்தைக் கொண்ட நாடு உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட மக் களாட்சி நாடு இப்படிப் பல பெருமைகளைக் கொண்ட இந்தியா மலையகத் தமிழர்களுக்கு என்ன செய்தது? ஏன் அவர்களுக்கு அள்ளி வைத்தது? ஏன் இந்தியா மலையக மக்களின் மேம்பாட்டிற்கு உதவவில்லை என்ற கேள்விகளை திரேசம்மாவோ அல்லது தயானந்தாவோ முன் வைக்கவில்லை? குறித்த பேசாப் பொருளின் நிகழ்ச்சியின்நோக்கம் மலையக மக்களுக்கு உதவுவதாக இல்லாமல் சிண்டு முடியும் நோக்கத்தைக் கொண்டதா?

இலங்கையின் காடுகளைப் பெருந்தோட்டமாக மாற்றி 1844 ஆண்டிலிருந்து தம் வியர்வை சிந்தி உலகி லேயே மோசமான நிலையில் உழைத்து வரும் மலையகத் தமிழர்களுக்கு சிங்கள ஆட்சியாளர்கள் செய்யும் அட்டூழியங்கள் மற்றும் பாராபட்ச நடவடிக் கைகளைப் பற்றி திரேசம்மாவோ அல்லது எதுவும் கூற வில்லை. பேட்டி கண்டதன் நோக்கமே மலையக மக்களின் நிலை பற்றி முழுமையாக எடுத்துச் சொல் லாமல் இலங்கைத் தமிழர்களையும் மலையகத் தமிழர் களையும் பிளவு படுத்தும் நோக்கம் கொண்டதா?

பேட்டியைப் பார்த்த ஒரு சமூக சேவை செய்யும் ஒரு நண்பர் தான் திரேசம்மா தனது அமைப்பின் தொலை பேசி இலக்கத்தையோ அல்லது உதவி செய்வதற் கான வழிவகைகளையோ சொல்லுவார் எனக் காத்துக் கொண்டிருந்தாராம். தன்னால் இலண்டனில் உள்ள சிவாலயங்களுடன் தொடர்பு கொண்டு மலையக மக் களுக்கும் ஆலயங்களின் வருமானத்தில் ஒரு பகுதியை அனுப்ப ஏதாவது செய்யலாம் என்று காத்துக் கொண்டிருந் தாராம். ஆனால் திரேசம்மா வெறுமனவே இலங்கைத் தமிழர்களே மலையக மக்களுக்கு உதவி செய்யுங்கள் என்ற ஒரு வெறும் வேண்டுதலுடன் மட்டும் பேட்டியை முடித்ததால் தான் ஏமாற்றம் அடைந்தாராம். திரேசம்மா வின் நோக்கம் அது இல்லையா?

# ஐ.பி.எல்…

(12ம் பக்கத் தொடர்ச்சி)

பன்னாட்டுச் சட்டத்தின் படி இனக்கொலைக்கான வரை விலக்கணம் என்ன எனபதை இவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். இனக்கொலைக்கான வரைவிலக்கணம்: ஒரு இனத்தை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ , மனித இனம் சார்ந்த, இன ஒதுக்கல், மதவேற்றுமை அல்லது தேசிய இன வேற்றுமை போன்ற காரணங் களால் கொல்ல நினைப்பது அல்லது அழிப்பது இவைகள் இனக்கொலைகளாகக் கருதப்படும்.

*7. ராஜபக்சவைப் போர்க்குற்றவாளியாக அறிவிக்க முடியாது.*

ராஜபக்சவைப் போர்க்குற்றவாளியாக அறிவிக்க முடியாது என இந்தியாவில் பலரும் சொல்கின்றனர். ஆனால் ஐக் கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் பான் கீ மூன் நியமித்த நிபுணர்கள் குழு இலங்கையில் போர்க்குற்றம் மட்டுமல்ல மாநிடத்திற்கு எதிரான குற்றமும் இழைக்கப் பட்டமைக்கான நம்பகரமான ஆதாரங்கள் இருப்பதாகச் அறிக்கை வெளியிட்டது.

சனல்-4 வெளியிட்ட காணொளிகளைப்பார்த்த பன்னாட் டுச் சட்ட அறிஞர்கள் சனல் - 4இன் காணொளிகளும் காட் சிப்படங்களும் போர்க்குற்றத்திற்கான போதுமான ஆதாரங்கள் என்றனர்.

*8. இலங்கை மனித உரிமைப் பிரச்சனையை இந்தியா தூக்கிப் பிடித்தால். காஷ்மீர் மனித உரிமைப்பிரச்சனை தூக்கிப் பிடிக்கப்படும்.*

இந்த விவாதத்தை முன்வைப்பவர்கள் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைக ளுக்கு இந்தியா காஷ்மீரில் செய்யும் கொடுமைகளை ஒப் பிடுகிறார்கள். இந்தியாவின் மனித உரிமை மீறல்கள் அத் துணை கொடியது என்றால் அதுவும் தண்டிக்கப்பட வேண்டியதே.

### ◆ இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு என்ன காரணம்?

இந்தியா இலங்கைக்கு தொடர்ந்த் உதவி செய்வோம் என அடம் பிடித்துக் கொண்டிருக்கிறது. அதில் ஆளும் கட்சி எதிர்க்கட்சி உதிரிக்கட்சி என்ற வேறுபாடு இல்லை. இவற்றிற்கு சில காரணங்கள் இருக்கின்றன.

*1. தமிழர்கள் தலை நிமிரக்கூடாது.*

இலங்கையில் தமிழர்கள் தலை நிமிர்ந்தால் அதைத் தொடர்ந்து இந்தியாவில் வாழும் தமிழர்களும் தலை நிமிர்ந்து நிற்பார்கள். இதை தமிழரல்லாத இந்தியர்கள் விரும்பவில்லை. இந்தியாவில் இருக்கும் அதிகாரப்பரவ லாக்கத்திற்கு அதிகமான பரவலாக்கம் இலங்கையில் வரக்கூடாது எனப் பல இந்தியர்கள் கருதுகின்றனர்.

இது அப்பட்டமான பேரிவாதம். மாணவர்களின் எழுச்சி இதற்கான பதிலடியைக் கொடுக்க வேண்டும்.

*2. இலங்கைப்போர்க்குற்றத்தில் இந்தியாவிற்கும் பங்குண்டு.*

இலங்கையில் போர்க்குற்றம் தொடர்பான ஒரு பன் னாட்டு விசாரணை வந்தால் அந்த விசாரணை புது டில்லியில் போய் முடியும் எனச் சில அரசியல் விமர் சகர்கள் பகிரங்கமாக எழுதத் தொடங்கிவிட்டனர்.

வட இந்தியர்கள் இலங்கையை ஏதோ தென் இந்தியா போல் பேசுகிறார்கள். இலங்கை தென் இந்தியா என் றால் தமிழ்நாடு தமிழர் நாடு ஆகலாம்.

# புதிய நிர்வாகக்குழு உறுப்பினர்கள்



அருள்மிகு ஈலிங் கனகதுாக்கை அம்மன் ஆலயத்தின் புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அண்மையில் தெரிவுசெய்யப்பட்டனர்.

## தர்மம் மீண்டும்…

வந்தோரை வாழவைத்து
வீட்டிலே தூங்கவைத்து
வாசலில் படுத்தறங்கும்
இனம் எம்மினம்

சண்டை என்று வந்தாலும்
சமாதானம் என்று
சொன்னாலும்
சமனாக மதிப்பளித்து
இன்று போய்
நாளை வா என
இன மானம் காத்த இனம்

உலக வரைபடத்தில்
யேசு கேட்டதை
காந்தி கனாக்கண்டதை
வள்ளுவன் சொன்னதை
அரங்கேற்றி அரசமைத்த
இனம்..

நரிக்குண நாட்டவனின்
நடிப்பில் மயங்கி
சுற்றி வந்த
வர்த்தகஅரக்கர்களின்
பிடிக்குள் சிக்காது
செய் அல்லது
செத்துமடியென
செய்து காட்டிய இனம்

முள்ளிவாய்க்காலில்
தன்னை தானே
பெட்டியடித்து
சர்வதேசத்துக்கு குறிவைத்த
தலைவன்
சொல்லிய செய்தி
கொன்றால் விடுதலை
விட்டாலும் அது தான்..

தீர்க்க தரிசனம்
அவனது ஆயுதம்
இனி போராட்டம்
உங்கள் கையில்
அவன் கை காட்டியது வெளியில்

எல்லாம் முடிந்தது
முட்டாள் என புலம்பித்திரிந்தவர்
உளர் – நெஞ்சுக்குள் தீ

இனத்தை, மானத்தை, காப்பை
இழந்து நின்றது எம்மினம்

சீமான் எனும் ஒரு தம்பி மட்டும்
ஊருராய் அழுது திரிந்தான்
ஒன்றாக பத்தாக
நாம் தமிழராக மெல்ல
வளர்ந்தான் ஒரு ஒளி வீச்சு
கண்ணில் கண்டது எம்மினம்

ஒரு பொறி வெடித்ததுபோல்
மாணவர் வந்தார் எமைக்காக்க
தமிழகமே புயலாக ஓங்கி அடித்தது
அடித்த புயலில் காங்கிரசு அழிய
அத்தனை கட்சிகளும் கண் திறக்க
அம்மா கொண்டு வந்தார்
தமிழீழ வாக்கெடுப்பு எனும்
எமது தாகத்துக்கான
திறவு கோலை இதற்காகத்தானே
இத்தனை வருடம் தவம்
கிடந்தோம்

தமிழீழம் பிறக்கும்
அம்மாவையும்
தமிழகத்தையும்
போற்றும் வாழ்த்தும்
தமிழன் நிம்மதியாக தூங்கும்
காலம் வெகுதூரமில்லை
தர்மம் வெல்லும்
அதில் மாவீரர் கனவு பலிக்கும்
நெஞ்சை நிமிர்த்தி எம் மாவீரர்
மகிழும் காலம்
விரைவில் வரும்..

- விசுகு(யாழில்)




✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Company Formation
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக **ஒரு பேப்பர்** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: **info@orumanam.com**



## மணமகள் தேவை

1. 30வயது, 5'11" Hsmp visa working as a IT consultant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4533
2. 37 வயது, 5'6" Post graduation visa doctor தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4532
3. 45 வயது, 5'11" British citizen divorced Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4530
4. 31 வயது, 5'11" PR in uk Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3624
5. 40 வயது, 5'10" British Citizen, Graduate working as a Car Technician தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4520
6. 41 வயது, 5'9" Working as a IT Consultant, British Citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4522
7. 27 வயது, 5'6" Travel Document, Graduate, working in a store தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4528
8. 34வயது, 5'9" British citizen working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4514
9. 23 வயது, 6'2" Permanent residence in Uk working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4512
10. 33 வயது, 6'2" British citizen graduate working in company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4510
11. 48 வயது, 5'8" work permit visa graduate working in company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4509
12. 29 வயது, 6'2" Asylum seeker living in uk for the past 8 years தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4506
13. 32வயது, 5'8" Permanent residence in uk working as a software engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4503
14. 35 வயது, 5'8" work permit visa living in france working in a restaurant தகுந்தமணமகளை தேடுகின்றனர் Ref: 3840
15. 34 வயது, 5'6" work permit visa graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3676
16. 30 வயது, 5'6" British citizen driver working in NHS தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3272
17. 36வயது, 5'11" born and brough up in uk doctor தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 1006
18. 37 வயது, 5'2" British citizen Engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4498
19. 31 வயது, 5'8" student visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4497
20. 37 வயது, 5'10" British citizen Engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4495
21. 35வயது, 5'10" Asylum seeker in Uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4492
22. 40 வயது, 5'6" British citizen manager in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4490
23. 31 வயது, 5'9" PR in Uk Engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3948
24. 28 வயது, 6'2" Canadian citizen finished diploma and working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4482
25. 43 வயது, 5'5" British citizen divorced self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4470
26. 36 வயது, 5'7" Canadian citizen graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4461
27. 47 வயது, 5'8" PR in UK, Divorced working as an Accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3422
28. 30 வயது, 5'9" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4456
29. 22 வயது, 5'3" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4450
30. 31 வயது, 5'6" Student visa in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4446
31. 36வயது, 5'10" British citizen working as a building contractor தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4043
32. 33 வயது, 5'9'' British citizen working in a Super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3574
33. 36 வயது, 5'10'' British citizen lawyer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4445
34. 37 வயது, 5'5" graduate, student visa, working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4524
35. 28 வயது, 5'10" work permit visa graduate working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4444
36. 37 வயது, 5'5" British citizen divorced working as a system engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4441
37. 38 வயது, 5'3" British citizen working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4435
38. 37வயது, 5'5" British citizen working as a carpenter தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4431
39. 32வயது, 5'8" Permanent residence in Uk working as a cashier தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4430
40. 32வயது, 5'8" Permanenet residence in Swiss ,Graduate working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4424
41. 40 வயது, 5'7" British citizen self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4423
42. 32வயது, 5'8" British citizen graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4419
43. 37 வயது, 5'9" work permit visa working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4412
44. 29 வயது, 5'9" British citizen self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4410
45. 34 வயது, 5'4" Asylum seeker in Uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4408
46. 29 வயது, 5'8" Asylum seeker in Uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4404
47. 44 வயது, 5'6" work permit visa working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4382
48. 38 வயது, 5'5" British citizen self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4312
49. 47 வயது, 5'8" Accountant permanent residence in uk divorced looking for a suitable bride Ref: 3422
50. 29 வயது, 5'9" student visa working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4395
51. 30வயது, 5'5" graduate work permit visa in UK தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4394
52. 29வயது, 5'9" PSW visa working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4392
53. 29 வயது, 5'6" PSW visa Engineer

## மணமகன் தேவை

1. 30 வயது, 5'2" Teacher in srilankan தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4009
2. 29 வயது, 5'5" Residing in Srilanka, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4519
3. 31 வயது, 5'4" Canadian, Residing in Canadian தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4527
4. 33 வயது, 5'2" born and brought up in Uk graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4513
5. 39 வயது, 5'3" widowed living with children in netherland wishes to move to uk accountant working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4511
6. 28 வயது, 5'7" born and broughtup graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4496
7. 22 வயது, 5'3" British citizen accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4491
8. 34 வயது, 5'4" PR in Uk divorced working in a factoryதகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4489
9. 21 வயது, 5'8" PR in Uk student graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4488
10. 26 வயது, 5'0" PR in Uk graduate working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4487
11. 27வயது, 5'2" British citizen Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4485
12. 25 வயது, 5'6" PR in Uk working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4484
13. 29 வயது, 5'7" born and brought up in Uk graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4483
14. 34 வயது, 5'5'' British citizen working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4473
15. 24 வயது, 5'7" born and broughtup graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4481
16. 27 வயது, 5'2'' British citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4477
17. 23 வயது, 5'2" British citizen graduate student தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4471
18. 37 வயது, 5'5" Accountant working in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4465
19. 40 வயது, 5'4" Doctor work permit visa in Uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4455
20. 27 வயது, 5'4" srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4414
21. 32 வயது, 5'0" working in pharmacy US citizen living in US தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4398
22. 29 வயது, 5'2" British citizen graduate working in NHS தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4388
23. 35 வயது, 5'4" British citizen divorced living with the child working in a super market தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4383
24. 33 வயது, 5'8" British citizen divorced working as a Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3508
25. 28 வயது, 5'8" British citizen working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359
26. 30 வயது, 5'5" Born and Brought up in Uk Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3316
27. 33 வயது, 5'2" British citizen divorced working as a IT manager தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4373
28. 23வயது, 4'10" Permanent residence in uk student தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4362
29. 30 வயது, 5'7" British citizen working in NHS as a Personal assistant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4357
30. 31 வயது, 5'5" Graduate working in a supermarket in a work permit visa தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4102
31. 34 வயது, 5'5" British citizen, Separated தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4331
32. 28 வயது, 5'3" British citizen, working in an IT field தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4338
33. 26 வயது, 5'3" British Citizen, Doctor in USA தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4348
34. 32 வயது, 5'3" British citizen, working as a Tutor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4322
35. 29 வயது, 5'5" Doctor, working in Ireland தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4321
36. 33 வயது, 5'2" working in a factory in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4310
37. 26 வயது, 5'3" living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4304
38. 32 வயது, 5'3" British Citizen, Working in an IT consultant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4303
39. 33 வயது, 5'0" Graduate Divorced living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4302
40. 32 வயது, 5'2" Graduate, living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4291
41. 29வயது, 5'2" Graduate working as a Teacher in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4281
42. 31 வயது, 5'4" Graduate, Canadian citizen living in canada தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4265
43. 30 வயது, 5'5" working in a supermarket in a workpermit visa in Uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4102
44. 29 வயது, 5'5" graduate PSW visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4287
45. 29 வயது, 5'5" Asylum seeker divorced தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4278
46. 31 வயது, 5'4" Doctor in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4277
47. 30 வயது, 6'0" British citizen working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4267
48. 30 வயது, 5'5" born and brought up in uk Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3316
49. 25 வயது, 5'7" Graduate student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4270
50. 31 வயது, 5'7" Graduate student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4266
51. 26 வயது, 5'3" graduate Permanent visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1243
52. 35 வயது, 5'6" Accountant in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 826
53. 33 வயது, 5'3" Doctor British citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4248
54. 28 வயது, 5'2" British citizen working as an accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4247
55. 37 வயது, 5'7" Working as an Accountant Permanent residence in UK தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4242
56. 33 வயது, 5'4" divorced Permanent residence in sweden தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4234
57. 29 வயது, 5'4" Graduate living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4228
58. 31 வயது, 5'3" living in Switzerland as an asylum seeer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4189
59. 22 வயது, 5'4" Permanent residence in uk graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4183
60. 27 வயது, 5'4" student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4182
61. 23 வயது, 5'3" France citizen graduate working in uk in bank தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4161
62. 36 வயது, 5'4" British citizen working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4150
63. 21 வயது, 5'0" British citizen graduate தகுந்தமணமகனைதேடுகின்றனர் Ref: 4142

**இணையத்தில் மேலதிக விபரங்கள்**
**www.orumanam.com**

# மைற்ரோகொன்றியன் (Mitochondrion)




மனித உயிரணுக் கலம்

## மாசிலாமணி

*(ஒரு பேப்பருக்காக)*

நாம் எந்தப் பணியைச் செய்ய வேண்டும் என்றாலும் எமக்கு ஆற்றல் (சக்தி) வேண்டும். ஆற்றல் வேண்டும் என்பதற்காகத்தானே நாம் உணவு உண்கின்றோம். நாம் உண்ணும் உணவு எமது குடலுள் செரிக்கின்றது. செரித்த உணவு குடலில் இருந்து உறிஞ்சப் பட்டு குருதியுடன் கலக்கின்ற நிலையில்கூட எவ்வித ஆற்றலையும் வெளியிடுவதில்லை. அப்போ எங்கு அந்த ஆற்றல் உற்பத்திச் சாலை உள்ளது என்பது பற்றிய குறிப்புகள்தான் இக்கட்டுரை.

நாம் உண்ணும் உணவு 22 அடி வரை நீளமான சிறுகுடலைக் கடக்கும்வரை செரித்தலுக்கு உள்ளாகிறது. செரித்தலால் உறிஞ்சு நிலைக்கு ஏற்றவையாக, எளிய நிலைக்கு அது மாற்றப் படுகின்றது. மாச்சத்து எளிய நிலை சர்க்கரையாகவும், கொழுப்புச் சத்து கொழுப்பு அமிலமாகவும், புரதம் எளிய அமிலோ அமிலங்களாகவும் மாற்றப்பட்டு குருதியுடன் கலக்கின்றன. நார், மற்றும் செரிக்காத பொருட்கள் பெருங்குடலுக்கு செல்கின்றது. பெருங் குடலிலும் உப்புக்கள், கொழுப்பு அமிலங்கள், உயிர் B, K ஆகியவற்றுடன் நீரும் உறிஞ்சப் பட்டபின் மிகுதிப் பொருட்கள் மலமாக வெளியேறுகிறது. **உடலின் மொத்த உயிரணுக்கள் நூறு இலட்சம் கோடி அதாவது கோடி தரம் கோடி.குருதிச்சுற்ரோட்டம்நடக்கும்குருதிக்குழாய்களின் நீளம் நுண் குழாய்கள் உட்பட 60,000 மைல்கள்.** இவ்வளவுநீளம்கொண்ட குழாய்கள் என்பதால் உறிஞ்சப்பட்ட ஊட்டச் சத்தையும் சுரப்பிகளின் இயக்கு நீர் போன்ற வற்றையும், முக்கியமாக போதுமான அளவு உயிர்வளியையும், ஒரு இலட்சம் கோடி உயிரணுக்களுக்கும் எடுத்துச் செல்ல முடிகிறது. குருதி அணுக்கள் உருவாகுதல் தசைகள் உருவாகுதல் குருதியோட்டம் சீராக்கப் படுதல், உடல் வெப்பம் சீராக்கப்படல் ஆகிய வற்றுடன் ஆற்றலை வெளியேற்றத் தேவையான உயிர்வளி ஏற்றம் அல்லது பிராண வாயு எற்றம் நடைபெறல் கழிவுகளை அகற்றல் ஆகிய மொத்த நிகழ்வுகளையும் சேர்த்து வளர்சிதை வினை மாற்றம் (Metabolism என்பார்கள்.

ஒவ்வொரு உயிரணுவுக்குள்ளும் உயிரணுக் கரு உட்பட பல நுண்மங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் இரட்டை சவ்வினுள் அடைபட்டு உயிரணுவுள் இருப்பவை. ஒவ்வொன்றும் அவையவைக்குரிய செயலை தனித்தனியாக செய்யக் கூடியவை. இவை ஒவ்வொன்றின் விட்டமும் அரை மைக்ரோவிலிருந்து ஒரு மைக்ரோ மீற்ரருக்கு விஞ்சாதவை. இப்படியான நுண்மங்களில் உருண்டையான கோல் வடிவில் உள்ள பொருள்தான் மேலே தலைப்பில் போடப்பட்டுள்ள மைற்ரோகொன்றியன்.

எமது உடலில் உள்ள ஒரு இலட்சம் கோடி உயிரணுக்களுக்கும் தேவையான உயிர் வளியை, அவை சுவாசிக்க ஏற்ற முறையில் குருதி கொண்டு செல்கிறது. உயிர் வளியைப் பயன் படுத்தி ஒவ்வொரு உயிரணுவும் சுவாசிக்கின்றது. உயிரணுக்களின் நுண்மங்களில் ஒன்றான மைற்ரோகொன்றியன் மட்டும்தான் உயிர் வளியைப் பயன்படுத்தி ஏ.ரி.பி (adenosine triphosphate) என்னும் பொருளை உற்பத்தி செய்கிறது. உயிரணுக்களால் இராசயன ஆற்றலாகப் பயன் படுத்தக் கூடிய ஒரு பொருள் இது. இதனால் மைற்ரோகொன்றியனை உயிரணு ஆற்றல் உற்பத்தி கூடம் என்றும் அழைப்பார்கள். எமது உடலின் கோடானுகோடி உயிரணுக்கள் ஒவ்வொன்றின் உள்ளும் ஒன்றிலிருந்து நூற்றுக் கணக்கான வரையான மைற்ரோகொன்றியன்கள் உள்ளன. அப்படிப் பார்த்தால் எண்ணிலடங்கா நுண் ஆற்றல் உற்பத்தி கூடங்கள் எம் உடலுள் உள்ளன. மதிப்பீட்டின்படி 5 கோடா கோடி உயிரணு ஆற்றல் உற்பத்தி கூடங்கள் எம் உடலில் உள்ளன..

மைற்ரோகொன்றியனின் செயற்பாடுகளில் அடுத்ததாக எம் கவனத்தை ஈர்ப்பது, தரம் குன்றாத நிலையில் இருக்கும்போது அதற்குள்ள நோய் எதிர்ப்புத் தன்மையும், வாழ்வை நீடிக்கும் தன்மையும். அதைப் பாதுகாக்கத் தேவையான கவனம் செலுத்துவது எமது கடமை.

ஊயிர்வளி ஏற்றத்தை இவை தொடர்ந்து செய்வதால் அங்கு தேவைக்கதிகமான உயிர் வளி ஏற்றத்திற்கான (oxidation) சாத்தியம் உண்டு. அதன் விளைவாய் மைற்ரோகொன்றியனின் செயற்தரம் குறைகிறது. கடந்த நான்கு தசாப்த ஆய்வுகளின் படி அதன் தரம் குன்றல்தான் நோய் உருவாகும் நிலையின் அடிப்படைக் காரணியாக அமைந்துள்ளது என்று அறிய வந்துள்ளது. சிறு நீரகத்திலிருந்து தொடங்கி பல தாக்கங்களுக்கு அடிப்படைக் காரணியாக அது அமைவது கண்டறியப் பட்டுள்ளது.

இதற்கு கூறப்படும் முதல் விதி, தரமான சாப்பாடு சாப்பிட வேண்டும், அதை குறைத்துச் சாப்பிட வேண்டும். ஒரு பொறி அல்லது இயந்திரம் எப்படிக் கூடுதல் வேலை செய்வதால் தன் செயல் திறன் குன்றுகிறதோ அதே போல்தான் மைற்ரோகொன்றியனின் கூடுதல் செயற்பாடும் விளைவைத் தருகிறது. இதனால் நாம் உணணும் உணவு ஊட்டச் சத்து கூடியதாக அளவில் குறைந்ததாக இருக்க வேண்டும். மரக்கறி வகை, பழங்கள், கோழி இறைச்சி, மீன் போன்ற வற்றை சிபார்சு செய்கிறார்கள். நீர் சம்பந்தமாக, போதியளவு சுத்தமான நீர், பச்சை தேநீர், மரக்கறி சாறு ஆகியவற்றைச் சிபார்சு செய்கிறார்கள். சோடா, மதுபானம் போன்ற வற்றைத் தவிர்க்கச் சொல்லுகிறார்கள். சாப்பாடு நன்றாகச் சப்பிச் சாப்பிடப் பட வேண்டும். இதனால் வயிறு கூடுதலாக நிரம்பி தேவைக் கதிகமாகச் சாப்பிட மாட்டோம். செரித்தல் எளிதாகிறது. ஊடலில் உற்பத்தியாகும் ஆற்றல் அளவு குறைவதால் மைற்ரோகொன்றியன் உற்பத்தி கூடுவதையும் அவதானித்துள்ளார்கள்.

காற்றோட்ட சூழலில் ஒழுங்காகச் செய்யப்படும் அப்பியாசங்களும் மைற்ரோகொன்றியனின் நலனுக்குத் தேவைப்படுகிறது. இதில் உறங்குவதற்கு குறைந்தது மூன்று மணி நேரத்திற்கு முன்பு உணவு உண்பதும் ஒரு வழியாகச் சொல்லப்படுகிறது. இடையிடையே ஒரு வேளை உணவைத் தவிாத்து விரதமிருப்பதும் பயன் தருகிதாம்.

மனித மரபியலிலும் மைற்ரோகொன்றியன் பாரிய பங்கை வகிக்கின்றது. ஏறக்குறைய இரண்டு இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு பெண்ணை மைற்ரோகொன்றியன் பதிவின் அடிப்படையில் ஏவாளாக இனம் கண்டு, மாறாத அவள் மைற்ரோகொன்றியன் பண்புக் காரணியையும் தகப்பன் வழியாக தொடரும் வை என்னும் பண்புக் காரணியையும் வைத்து ஆபிரிக்காவிலிருந்து மனித இனம் இடம் பெயர்ந்ததற்கான தடயங்கள் பற்றி ஆய்வு செய்வோர் நேரடி வர்ணனைபோல் இடம் பெயர்வு பற்றிய தகவல்களை துல்லியமாகத் தருகிறார்கள். இது மாறாத பண்புக் காரணிகளின் பண்பால்தான் சாத்தியப் படுகிறது.


யா/இராமநாதன் கல்லூரி
நூற்றாண்டு விழா
மருதனார் மடம், சுன்னாகம் +94–21–224 1762
www.ramanaathan.sch.lk | chu.ramanathancentenary@gmail.com

அன்புடையீர் வணக்கம்.
கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை

இலங்கையிலுள்ள சைவத் தமிழ் மகளிர் கல்வி கற்பதற்காக சேர். பொன் இராமநாதன் அவர்கள் நூறு வருடங்கட்கு முன்பாக இராமநாதன் மகளிர் கல்லூரியை நிறுவினார்.

இக்கல்லூரியினது வைர விழா - 100வது ஆண்டு விழாவினை நாம் கொண்டாட இருக்கின்றோம். அதையிட்டு மாணவிகள், ஆசிரியர்கள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம்.

கடந்த முப்பது வருட கால அசாதரண சூழ்நிலையில் நமது கல்லூரியும் பல பின்னடைவுகளைச் சந்தித்திருக்கின்றது. இந்நிலையில் மாணவர்களுடைய கல்வி முன்னேற்றம் பல நிலையிலும் பாதிப்பு அடைந்திருக்கின்றது.

இந்நிலையிலும் எமது கல்லூரி பல இடம்பெயர்ந்த மாணவர்களுடைய கல்வி பாதிக்கப்படாத வகையில் நடைபெற எமது பகுதியிலுள்ள சில கல்லூரிகளுக்கு இராமநாதன் கல்லூரியில் வசதிகள் அளித்திருந்தது. இது அனைவரும் அறிந்த விடயம்.

இராமநாத வள்ளல் அவர்கள் பெரிய அளவிலான பரந்த காணியில் பல கட்டிடங்களை இக்கல்லூரிக்கு நிறுவியிருந்த படியினால் இதனை எம்மால் செய்ய முடிந்தது.

தற்பொழுது ஆயிரம் மாணவிகள் வரையில் கல்வி கற்கிறார்கள். ஐம்பது ஆசிரியர்கள் வரையில் கல்வி புகட்டி வருகின்றார்கள்.தற்சமயம் இந்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வாழ்கின்ற பழைய மாணவிகள், ஆசிரியைகள் ஆகியோரது விபரங்கள் எம்மிடத்தில் இல்லை.

நூறு வடங்களுக்கு முன்பு போக்குவரத்து வசதிகள், தொடர்பு சாதனங்கள் உட்பட மற்றும் பல வசதிகள் இல்லாத காலத்தில் எமது சைவத் தமிழ் மாணவிகளுடைய முன்னேற்ற நலன் கருதி அவர்கள் கல்வி கற்கும் வகையில் இக்கல்லூரியை சேர். பொன் இராமநாதன் அவர்கள் நிறுவினார்கள்.

இக்கல்லூரி இன்னும் பல நூறு வருடங்களுக்கு மகளிருக்கு கல்வி புகட்டும் வகையில் கல்லூரியின் வசதிகளை முன்னெடுப்பது சகல தமிழரது கடமையுமாகும். தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கத்திடமிருந்து அனைத்துத் தேவைகளையும் எதிர்பார்க்க முடியாது.

கல்லூரிக்கு மிகவும் அத்தியாவசியமான தேவைகளைக் கீழே குறிப்பிட்டுள்ளேன்.

- வகுப்பறைகள் போதாமையினை நிவர்த்திசெய்யும் பொருட்டு பத்து வகுப்பறைகள் கொண்ட இருமாடிக் கட.டிடங்கள் கட்டவேண்டிய தேவை உள்ளது.
- வன்னிப்பகுதியில் கல்விகற்கும் வசதி இல்லாத அனாதை மாணவிகள் எமது கல்லூரியில் கல்வி கற்பதற்கு ஒரு விடுதி அமைப்பது காலத்தின் கட்டாயமாகும்.
- கல்லூரி மாணவிகளுக்கும் விடுதி மாணவிகளுக்கும் உணவு வழங்குவதற்கு வேண்டிய காய்கறிகளை கல்லூரிக்குச் சொந்தமான நிலத்தில் பயிரிடுவதற்கு வேண்டிய வசதிகள் செய்யப்படவேண்டும்
- வன்னிப்பகுதியில் தொழிலற்று இருக்கும் விதவைகளிற்கு கல்லூரியிலும் தோட்டத்திலும் சமையல் அறையிலும் பணிகள் செய்வதற்கு வாய்ப்புக் கொடுத்து அவர்களிற்கும் விடுதி அமைக்க வேண்டும்.
- ஏழை மாணவிகள் கல்விகற்பதற்கு நிரந்தர கல்வி நிதியம் அமைக்கப்பட வேண்டும்.

1913இல் இருந்து இங்கு கல்வி கற்ற மாணவிகள் பாடசாலை ஆசிரியர்களாகவும் மற்றும் பல துறைகளிலும் கடமையாற்றியுள்ளார்கள். அதனைத் தொடர்ந்து அவர்களின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் நம் நாட்டிலும் உலகின் பல பாகங்களிலும் குடியேறி நல்ல நிலையில் உள்ளார்கள். இவர்கள் எல்லோரும் இக்கல்லூரியில் தற்போது கல்விபயிலும் மாணவிகளுக்கு உதவவேண்டிய நேரம் வந்துவிட்டது. ஆகவே நிலமையை உணர்ந்து தங்களால் முடிந்த அளவிற்கு உதவும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

அதே சமயம் தங்களது குடும்பத்தவர்கள், சினேகிதர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள், பழைய ஆசிரியர்கள் அனைவ ருக்கும் இக்கல்லூரியின் தேவைகளையும், முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறும்படியும், கல்லூரிக்கு அவர்களை உதவுமாறும் கூறும் படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.•

நன்றி

திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை

ஸ்ரீமதி சாருலதா மணியின் இன்னிசைக் கச்சேரி

Ramanathan Girls College
Maruthanarmadam, Chunnakam, Sri Lanka

Centenary Appeal & Fundraising Programme



Carnatic Vocal & Light Music :
Srimathi Charulatha Mani

On Sunday, 26th May 2013
at 6.30 PM
(Doors open at 6.00pm)

At Sivan Centre
12 a, Lee High Road, Lewisham SE13 5ES

Donation / Admission
£50.00, £25.00, £15.00

நூற்றாண்டு விழா
நிதி சேகரிப்பு, இசைக் கச்சேரி
ஆகியவற்றிற்கு ஆதரவு தர விரும்புவோர்
தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.
பழைய மாணவிகள் நலன் விரும்பிகள்

Donation / Admission

| | |
|---|---|
| Mrs. Sarojini Thurairajah | 0208 427 2352 |
| Mrs. Savithri Navaratnam | 01923 859 054 |
| Mrs. Saratha Kanesarasah | 0208 561 0394 |
| Dr. S. Navaratnam | 01277 223 981 |
| Mr.N. Satchithananthan | 0778 819 6426 |
| Mr. A. Ravindran | 07702404531 |
| Mr. V. R. Ramanathan | 01268 766 624 |
| Mr. S.Thambu | 07861393295 |
| Mr. Pon Balasundaram | 0208 773 0047 |

# அக்கினிக் குஞ்சொன்று..



**தமிழ் விழி**

*(ஒரு பேப்பருக்காக)*

எல்லாரும் ஊருக்குப் போகிறார்கள்? போய் வந்தவர்களெல்லாம் ஆஹா! ஓஹோ! அற்புதம்! யானையில் ஏறினோம், கண்டிக்குப் போனோம், யானையில் ஏறினோம், ரம்புட்டான் சாப்பிட்டோம். ஒரு பிரச்சனையும் இல்லை, அந்த மாதிரி வீதிகளும் டெவலெப்மென்ரும் என்று சொல்லுவதைக் கேட்க ஆசையாக இருக்கிறது போய் வந்தால்தான் என்ன என்று. நேசனுக்கும் குடும்பத்தோடு ஊருக்குப் போக வேண்டும் என்று நீண்ட கால ஆசை. ஆனால் காலம் இப்போதுதான் இடம் கொடுத்திருக்கிறது. அதுக்கு ஒரு அருமையான காரணமும் கிடைத்திருந்தது. மகள் வனிதா நவம்பர் மாதத்தில் பெரிய பிள்ளையாகி விட்டிருந்தாள். மகளின் சாமத்தியச் சடங்கை கோலாகலமாக ஊர் கூடியிருக்க நாட்டிலே கொண்டாட வேண்டும் என்று அவர்களுக்கு ஆசை வந்து விட்டது. ஆசை வந்து விட்டால் அதை எப்படியாவது நிறைவேற்ற முயற்சிப்பதுதானே மனித மனம். கடைசியில் எடுக்க இருந்த சீட்டை இடையிலேயே எடுத்து, தை மாதமே பயணச் சீட்டுக்கள் வாங்கியாகி விட்டது.

ஊருக்குப் பயணம் என்றால் சும்மாவா? அழைப்பிதழ்கள் இந்தியாவில் இருந்து வந்தன. இணையத்தில் மகளுக்குத் தேவையான புதிய வரவு ஆடைகள் தேடித் தேடி வாங்கியும் கொண்டாயிற்று. ( வேற ஒருத்தரும் போடாத உடுப்புக்கள் தங்களுடைய மகள் போட வேணுமாம்) மகள் வனிதா சிணுங்கினாள் "நான் சாரி கட்ட மாட்டன்" என்று. தாய் விளங்கப் படுத்தினாள். முதல் சாரி, பிறகு பாவாடை தாவணி, பிறகு சுடிதார் என்று. மகள் கத்தினாள் "எனக்கு இது ஒண்டும் பிடிக்கேல்லை".

"உனக்குப் பிடிக்காட்டிப் பரவாயில்லை, இது நாங்கள் எங்கடை ஊராக்களோடை சேந்து செய்யப் போற கொண்டாட்டம்? எவ்வளவு காலத்துக்குப் பிறகு போகப் போறம்? அவையளும் எவ்வளவு காலத்துக்குப் பிறகு எங்களைப் பாக்க ஆசையாக இருப்பினம். நாங்கள் உடுத்தி விடுறம் நீ சும்மா நிண்டால் காணும்' அம்மா தன்னுடைய ஆதங்கங்களைக் கொட்டினாள்.

அம்மா மகளுடைய வாக்குவாதத்தில் காற்பந்து விளையாடி விட்டுத் திரும்பிய மூத்தவன் சாரங்கன் இடையிலே புகுந்து கொண்டான்.

" அவளை ஏனம்மா கரைச்சல் படுத்திறீங்கள்? நீங்கள் நாட்டுக்குப் போறதெண்டால் போட்டு வாங்கோ, அதை விட்டிட்டு ஏன் இந்தக் கொண்டாட்டங்கள் எல்லாம்?"

"நீ போய் உன்ரை அலுவலைப் பார், எங்களுக்கு என்ன செய்யிறதெண்டு தெரியும்" அம்மாவுக்குக் கோபம் உச்சத்தில் இருந்தது. சாரங்கன் தோள்களைத் தூக்கிக் குலுக்கிவிட்டு தங்கையைப் பார்த்து விட்டுப் போய் விட்டான்.

"பதினைஞ்சு வருசத்துக்குப்பிறகு ஊருக்குப் போகப் போறம், எங்களுடைய ஆக்கள் எல்லாரையும் கூப்பிட்டு ஒரு கொண்டாட்டம் வைச்சு, அவையளோட இருந்து கதைச்சு ஆறி வரலாமெண்டால் இந்தப் பிள்ளையளின்ர கொடுமை தாங்கேலாமல் இருக்கு? இவைக்கு எங்க எங்கட கவலை விளங்கப் போகுது' புலம்பிக் கொண்டிருந்தாள் அம்மா.

" என்ன நடந்தாலும் போறது போறதுதான், கொண்டாட்டம் வைக்கிறது வைக்கிறதுதான் " அம்மா புலம்பிக் களைத்து கடைசியாக சூளுரைத்துவிட்டு கைப் பையை எடுத்துக் கொண்டு கடைக்குப் புறப்பட்டவள் வாசலில் நின்று கணவனைத் திரும்பிப் பார்த்து , அப்பா! நாளைக்கு நீங்கள் வேலையால வரேக்கை, ஒரு அளவான குளிக்கிற பிளாஸ்டிக் தொட்டி நீலத்தில டிசைன் போட்டது ஒண்டு வாங்கிக் கொண்டு வாங்கோ பிள்ளைக்குத் தலைக்குத் தண்ணி வாக்கிறதுக்கு. வீடியோவுக்கு நல்ல வடிவா இருக்கும். அங்கை இருக்குமோ தெரியாது, இஞ்சயே எல்லாத்தையும் வாங்கிக் கொண்டு போட்டால் பிரச்சனையில்லை.

அம்மாவினுடைய நாட்கள் கனவுகளும் கடைகளுமாய் நகர்ந்து கொண்டிருந்தன. 'லைக்கா மொபில்' அட்டைகளும் அதனோடு சேர்ந்து முடிந்து கொண்டே இருந்தன., அப்பா சிவநேசனுக்கு அம்மா என்ன சொன்னாலும் சரிதான். திருப்பிக் கதைத்து சிக்கல்களை மேலும் ஏன் பெருப்பித்துக் கொள்ளுவான் என்று நினைத்தோ என்னவோ அவர் இரண்டொரு வார்த்தைகளோடு முடித்துக் கொள்ளுவார்.

சாரங்கனுக்கு நாட்டை நோக்கிய தன் குடும்பத்தினரின் பயணம் பிடிக்கவேயில்லை... இங்கேயிருந்து போய் இவ்வளவு பணத்தைக் கொட்டி, அங்கேயுள்ளவர்களின் ஏக்கப் பார்வைகளை சகிக்கும் தன்மை தனக்கு இல்லை என்பதை உணர்ந்து கொண்டிருந்தான்., அம்மாவின் முரண்நிலை ஆச்சரியமூட்டியது.

அம்மா பட்டியலில் பொருட்களை சேர்த்துக் கொண்டிருந்த ஒரு தருணத்தில் சாரங்கன், "ஜெனிவாவுக்குப் போறதுக்கு டிக்கெட் எடுக்க வேணும், எல்லாருமாப் போனால் நல்லது" என்றான். அம்மா நெருப்பை மிதித்த மாதிரி துடித்தெழுந்தாள். கோபத்தில் வார்த்தைகள் வராமல் ஒரு கணம் வாயடைத்து பிறகு "இஞ்ச வாங்கோப்பா! உங்கட மகன் என்ன சொல்லுறான் எண்டு கேளுங்கோ! நான் எவ்வளவு கஷ்டப்பட்டு பிரயாணத்துக்கு ஆயத்தப் படுத்திக் கொண்டிருக்கிறன் இவன் ஜெனிவாவுக்குப் போகப் போறானாம்.,இதுகளால எப்பிடியெல்லாம் சிக்கல்கள் வரும் தெரியுமே? நீ தெரிஞ்சுதான் கதைக்கிறியா? நாங்களே ஒருத்தருக்கும் சொல்லாமல் போயிட்டுச் சத்தம் போடாமல் திரும்பி வந்திடுவோம் எண்டு நினைச்சுக் கொண்டிருக்கிறம்? இதுக்குள்ளை நீ உந்த இடங்களுக்குப் போய் போட்டோக்களில ஏதாவது மாட்டுப் பட்டால் பிறகு என்ன நடக்கும் எண்டே தெரியாது. இப்ப உனக்கு என்னத்துக்கு இதுகளெல்லாம்? என்று கத்தினாள்.

" அப்ப அங்க பிரச்சனை இருக்கு நீங்களே சொல்லுறீங்கள்? அப்ப ஏன் அவ்வளவு சிரமப் பட்டு அங்க போக நினைக்கிறீங்கள்? நீங்கள் கேக்கிற மாதிரி நாங்கள் நாட்டுக்கு வாறம், அதுக்கு முதல் இப்ப ஜெனிவாவுக்குப் போவோம். நாட்டுக்குப்போய் சந்தோஷமா ஒரு மாதத்தில இருபத்தையாயிரம் ஈரோ செலவழிச்சு கொண்டாட்டம் நடத்தி விட்டு வாறதுக்கு நீங்கள் சரி எண்டுறீங்கள், ஆனால் பக்கத்தில இருக்கிற ஜெனிவாவுக்குப் போய் எங்கடை பிரச்னையை விளங்கப் படுத்தி விட்டு வாறதுக்கு உங்களுக்குச் சோம்பலாயிருக்குது. , செத்துப் போன பிள்ளைகளில நாங்களும் இருந்திருந்தால் இப்பிடிக் கதைப்பீங்களே? காணாமல் போன ஆக்கள் ஆரோ, கற்பழிக்கப் பட்ட பெம்பிளைப் பிள்ளையள் உங்கடை உறவுகள் இல்லை, செத்துப் போன ஆக்கள் உங்கட சொந்தங்கள் இல்லை. இதுகள் எல்லாத்தையும் மறந்த மாதிரி இப்ப நீங்கள் கொண்டாட்டம் அங்கை செய்யப் போறீங்கள், இதுக்கு நாங்கள் ஒத்து வர வேணும் எண்டு நினைக்கிறீங்கள்.,

நீங்கள் எல்லாரும் வாறதெண்டால் வாங்கோ இல்லாட்டால் நான் தனிய மற்ற ஆக்களோடை சேந்து போறன். ஆனால் நீங்கள் நினைக்காதயுங்கோ நான் நாட்டுக்கு உங்களோடை சேந்து வருவன் எண்டு..."

எதுவுமே பேசாது இருந்த அப்பா உள்ளே போய்த் திரும்பி வந்து மகனுடைய கையைப் பிடித்து காசைக் கைக்குள் வைத்தார். அவனுடைய தோளைத் தட்டியபடி "நாலு டிக்கெட் பதிவு செய்திட்டு வா" என்றார்.

## சிந்தனையில் தீயை வை...

தமிழகம் என் தாய் வழி உறவடா...!!!
தம்பிகளா நீங்களெல்லாம் எங்களின்
தொப்புள்கொடி உறவடா...!!

வேண்டாம் இந்த தீக்குளிப்பு
போதும் இதுவரை கண்ட இழப்பு
இனியும் தாங்கமுடியாது இனியொரு
உரியிழப்பு..!!

முத்துக்குமார் இட்ட தீயை – உன்
நெஞ்சினில் ஏந்து
உன் மேனியில் அல்ல..!!!

உன் மேனியில் இட்ட தீ
ஒரு வீரத்தமிழனை அழிக்கும்...
உன் கண்களில் தீயை வை
உன் நெஞ்சினில் விடுதலை தீயை
பற்ற வை –அது
ஆயிரம் தமிழனை வாழவைக்கும்.
உயிரை விடாதே உன் உணர்வை தா...!!!

என் சகோதரா
தீக்குளிக்க வேண்டியவன் நீயல்ல...!!!
நில்– சிந்தனையில் தீ வை...!!!
உனக்கே புரியும் எரிக்க வேண்டியது
உன்னையல்ல...!!!

*தமிழ்ப்பெடியன்(யாழில்)*

• • • • • • • • • • • • • • • • • • • • • • •

## அக்கா

அருகில் உள்ள போது
தெரியவில்லை உன் பாசம்
தொலைவில் தொலைந்தபின் –
உன் பாசத்திற்காய்
ஏங்கித் தவிக்கிறாள் உன் தங்கை
என்பது உனக்குத் தெரியவில்லையா?

பிறரை என்னைத் தொடக்கூட
விடமாட்டாய்
ஆனால் பிறர் இன்று
என்னை சொல்லால்
கொல்கிறார்கள்
உனக்குத் தெரிகின்றதா
இல்லை! தெரியவில்லையா அக்கா?

நீ இருக்கும் போது நேரத்துக்கு நேரம்
சாப்பாடு துாக்கம் எல்லாம் தந்தாய்
நீ செல்லும் போது அதை உன்னுடன்
கொண்டு போய் விட்டாயா அக்கா!

ஒரு வயதில் இருந்து 14 வயது வரை
என்னை வளர்த்தாய்
தாய்க்கு தாயாகவும்
தந்தைக்கு தந்தையாகவும்.– இன்று
ஒருவருமில்லாத
அனாதையாக உள்ளேன் நான்
மீண்டும் உன்
பாசத்திற்காக ஏங்கிக் கொண்டு.!

*உசா - ஆண்டு 10*
*அன்னை இல்லம் - மன்னார்*

சகலவிதமான சட்ட ஆலோசனைகளுக்கும் நம்பிக்கையான சட்ட நிறுவனம்....

**Criminal Litigation**
- Money Laundering
- Serious Fraud
- VAT / Tax investigations
- Confiscation & proceeds of crime
- Appeals against conviction and sentence.
- Regulatory / Health & Safety Investigations

**Immigration**
- குடியுரிமை
- வதிவிட விசாக்கள்
- அரசியல் தஞ்சம்
- EU Law
- Visas (Tiers1-5, Resident Permits, Indefinite Leave to remain)
- Judicial review

சகல விதமான குடிவரவு ஆலோசனைகளையும் நிபுணத்துவத்துடன் செய்து தர அழையுங்கள்....

**Services Includes:**
Flexible consultancy times & police station representation can be arranged(24 hours).

For Appointments
Contact: 07837 450397
Email: mganesan@furnivallaw.co.uk
www.confiscationbarrister.com



**TAMIL SPEAKING BARRISTER**
*For expert legal advice & representation in Criminal and Immigration law*

Chambers:
Furnival Chambers, 32 Furnival Street,
London, EC4A 1JQ.

**முத்துப்பாண்டி கணேசன்**
LL.B(Hons)(Wales),LL.M(Criminal Litigation)
Barrister-at-Law [Direct Access]

# சினிமா




பசங்க, வம்சம், மெரீனா என்று வேறு வேறு எளிய கதைகளில் யதார்த்தமான நகைச்சுவையுடன், சுவாரசியமான திரைக்கதையுடன், அழுத்தமான இயக்கத்துடன் நம்மைச் சந்தித்த இயக்குநர் பாண்டிராஜ், தற்போதைய டிரெண்ட்டுக்கு ஏற்றாற்போல் திசைதிரும்பி புல் அண்ட் புல் காமெடி கச்சேரியை கொடுத்திருக்கிறார்..!

இரண்டு வெட்டி ஆபீஸர்கள்.. அரசியலில் நுழைந்து கவுன்சிலராகி பணம் பார்க்க வேண்டும் என்பதே ஆயுட்கால லட்சியமாகக் கொண்டிருக்கிறார்கள்..! அவர்களது கனவு பலித்ததா இல்லையா என்பதுதான் கதை..!

இன்றைய இளைஞர்களுக்கு ஏற்றாற்போல் அவர்களை பிரதிபலிக்கும் ஹிரோக்களாக சிவகார்த்திகேயன் மற்றும் விமல். சிவகார்த்திகேயனின் அப்பாவான இயக்குநர் மனோஜ்குமார், ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர்.. விமலின் அப்பாவான டெல்லி கணேஷ் சொத்து சேர்த்து வைத்திருந்தாலும், தன் மகன் சொந்தக் காலில் நின்று வாழ்க்கையில் ஜெயித்துவிட மாட்டானா என்ற நம்பிக்கையுடன் இருப்பவர்.. இரண்டு அப்பாக்களின் அறிவுரைகளும் செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருக்க.. வாழ்க்கை கற்றுக் கொடுத்த பாடத்தின் மூலம் இவர்கள் உண்மையை உணர்ந்து வாழ்க்கையைத் துவங்கும் போது இருவரது குடும்பத்திலும் ஏற்படும் இழப்பையும், சோகத்தையும் மிக அழகாகப் பதிவு செய்திருக்கிறார் இயக்குநர்..!

இவர்களுக்குள் ஏற்படும் காதலைக்கூட மிக இயல்பாக ஆரம்பித்துவைத்து படம் முழுக்க வரும் நகைச்சுவையில் இவர்களது காதல் கொடுக்கும் டைமிங்சென்ஸ் காமெடியும் படத்துக்கு மிகப் பெரிய பலம்..!இந்தக் காதல் டிராக்குகள்தான் தியேட்டர்களில் அதிகமாகவே கைதட்டலை வாங்குகின்றன..!

தர்மத்தின் தலைவன் ரஜினி ஸ்டைலில் கார்த்திகேயன் செய்யும் அலப்பறைதான் மிக அதிகம்..! டைமிங்சென்ஸ் உள்ள செய்தித் தொகுப்பாளராகவும் வேலை பார்த்த அனுபவம் இருக்க.. ஏற்ற இறக்கத்துடன் எங்கே கடி ஜோக்காக உருமாறுமோ அதே இடத்தில் அதே பாணியில் வசனங்களை பேசியிருக்கிறார் சிவா.. மிகச் சிறந்த தேர்வு இவர்தான்..! விமல்.. இனியும் முழித்துக் கொள்ளாவிட்டால் ரொம்பவும் கஷ்டம்தான்..!இது போன்ற கேரக்டர்களில் தொடர்ந்து நடித்துக் கொண்டேயிருந்தாலும், போகப் போக ரசிகர்களுக்கு போரடித்துவிடும்..!

வீட்டோடு மாப்ளையாகி வேலை வெட்டியில்லாமல் ஊரைச் சுத்தும் சூரி போன்று நாட்டுல நிறையப் பேர் இருக்கத்தான் செய்றாங்க..! எப்போதெல்லாம் விமலும், சிவகார்த்திகேயனும் போரடிக்கத் துவங்குகிறார்களோ அப்போதெல்லாம் சூரிதான் இடையில் புகுந்து நம்மையும் சமாளிக்கிறார்.. அவர்களையும் சமாளிக்கிறார்..! ‘பொறுப்பு’ள்ள இளைஞன் கேரக்டராகவே இருந்து காட்டியிருக்கிறார் சூரி...!

இவ்வளவு சிறந்த நகைச்சுவை வசனங்களை எழுதும் திறமையுள்ள பாண்டிராஜ் இதனை தேக்கிவைத்துவிடாமல் மீண்டும் தனது நகைச்சுவை ராஜபாட்டையை தொடர்ந்து நடத்த வேண்டும் என்றே விரும்புகிறேன்.. இதன் உச்சக்கட்ட காமெடி, ஓட்டு எண்ணிக்கை அன்று நடக்கும் அடிதடி காட்சிதான்..! இதைக்கூட இவ்வளவு நகைச்சுவையாக எடுக்க முடியுமா என்று ரொம்பவே யோசிக்க வைத்திருக்கிறார் இயக்குநர்..!

எப்போதெல்லாம் இளைஞர்கள் தியேட்டர்களில் சோர்வடைவார்களோ அந்தந்த இடங்களில் எல்லாம் அவர்களுக்காகவே ஸ்பெஷல் பூஸ்ட்டாக காமெடி வசனங்களை அள்ளித் தெளித்திருக்கிறார்..! பாராட்டுக்கள்..! மானம், ரோஷம், வெக்கமெல்லாம் நண்பர்களுக்குள் பார்க்கவே கூடாது என்று ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டதால் எந்தவொரு லாஜிக்கையும் நாமும் பார்க்காமலேயே இருக்க வேண்டும்..! இறுதிக் காட்சியில் மனோஜ் குமாரின் அந்த விபரீத முடிவும், அதன் உண்மைத்தன்மை பற்றி பின்பு விவரிக்கும் காட்சியும் நூறு சீரியல்களுக்கு சமம்.. 500 எபிசோட்களில் சொல்லி முடிக்க வேண்டிய கதையை கடைசி 10 நிமிடங்களில் மட்டுமே சொல்லி முடித்திருக்கிறார் இயக்குநர்..!

எல்லாம் சரிதான்.. ஆனால் எனக்குள் இந்தப் படம் கொடுத்த ஒரு ஏமாற்றமும் மிகப் பெரியது.. இன்றைய இளைய சமுதாயத்தில் பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களே மது அருந்துவது பரவி வரும் வேளையில் இப்படி நிமிடத்துக்கு நிமிடம் தண்ணியடிப்பது போன்ற காட்சிகளை வைத்திருக்கத்தான் வேண்டுமா..? அது அவசியம்தானா..? ஏதோ ஒரு காட்சி.. இரண்டு காட்சியென்றால் ஓகே.. படம் முழுவதிலும் அப்படியே என்றால், படம் பார்க்கும் சிறார்களுக்கு இதெல்லாம் சகஜம்தானே என்ற எண்ணமும் வந்துவிடாதா..? கடைசியாக டைட்டில்போடும்போது பாண்டிராஜும் சேர்ந்து தண்ணியடிப்பதுபோல காட்சிகள் வர.. ரொம்பவே வெறுத்துப் போனேன்..! இவ்வளவு சிறந்த நகைச்சுவைப் படத்திற்கு விழுந்த திருஷ்டிப் பொட்டுவை போல இந்தக் காட்சியும் அமைந்துவிட்டது..!

குடியினால் வரும் தீமைகள் பற்றி இரண்டு அப்பன்களுமே படத்தில் பேசவில்லை.. சொல்லவில்லை.. இயக்குநரும் சொல்லவில்லை.. ஆக, குடியை நியாயப்படுத்தும்விதமாக அமைந்துவிட்டது இப்படம்..!இத்தனை குடிகார காட்சிகளைக் கொண்ட இப்படத்திற்கு நியாயமாக ‘ஏ’ சர்டிபிகேட்டுதான் கொடுத்திருக்க வேண்டும்.. ஆனால் ‘யு’ கொடுத்து புண்ணியத்தைக் கட்டிக் கொண்டிருக்கிறது சென்சார் போர்டு..! இதற்கு இந்த போர்டு இருந்தாலென்ன..? இல்லாமலேயே போனால்தான் என்ன..?

*கேடி பில்லா கில்லாடி ரங்கா - அவ்ளோ பெரிய கமெடியெல்லாம் இதில இல்லை....*

*- உண்மைத்தமிழன்*

## சினித்துளி

### தெனாலிராமன் !



போட்டா போட்டி படத்தை இயக்கிய யுவராஜின் இயக்கத்தில் தெனாலிராமன் என்ற படத்தில் வடிவேலு நடிக்கிறார். கடந்த பல மாதங்களாக சினிமாவில் வாய்ப்பில்லாமல் ஒதுங்கியிருந்த வடிவேலு, புலிகேசி 2ம் பாகம், ரவிக்குமார் இயக்கத்தில் நடிக்கிறார் என தகவல் வெளியானது. எனினும் பின்னர் அப்படத்திலிருந்து விலகினார். பின்னர் கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் ஆபிரிக்காவில் வடிவேலு படத்தை தயாரிக்க இதுவரும் யாரும் முன்வரவில்லை.

இதனிடையே தற்போது ‘தெனாலிராமனும் கிருஷ்ணதேவராயரும்’ என்ற படத்தில் நடிக்கிறார். ஏ.ஜி.எஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்தை யுவராஜ் இயக்க டி. இமான் இசையமைக்கிறார்.

*இந்தப்படத்தையாவது நிப்பாட்டாமல் எடுங்கப்பு.....*

### மீண்டும் இணையும் அண்ணன்-தம்பி !



அண்ணன் தம்பிகளான தனுஷ்-செல்வராகவன் இணைந்த துள்ளுவதோ இளமை, காதல் கொண்டேன் புதுப்பேட்டை ஆகிய படங்கள் மாபெரும் வெற்றி பெற்றன. கடைசியாக தனுஷ் நடிக்க செல்வராகவன் இயக்கிய மயக்கம் என்ன எதிர்பார்த்த ரிசல்ட் தரவில்லை. இரண்டாம் உலகம் படம் முடிந்ததும் தனுஷின் தயாரிப்பில் செல்வராகவன் படம் இயக்குகிறாராம். ஏனைய படக்குழுவினரின விபரம் விரைவில் வெளியாகும் எனத் தெரிகிறது.

### அப்ப ஒரு விருதும் இல்லையா ?



பாலா இயக்கத்தில் வெளியான பரதேசி திரைப்படம் கதை, படமாக்கப்பட்ட விதம், நடிகர், நடிகைகளின் நடிப்பு என பல வகைகளில் பரதேசி திரைப்படம் ரசிகர்களிடம் நன்மதிப்பை பெற்றது. மேலும் பரதேசி திரைப் படத்திற்கு உடை வடிவமைத்த பூர்ணிமாவுக்கு சிறந்த உடை வடிவமைப்பாளருக்கான தேசிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது. பூர்ணிமா ராமசாமி ஒரு முக்கிய கட்சி தலைவரின் உறவினர் என்பதால் தான் தேசிய விருது வழங்கப்பட்டிருக்கிறதாம்.

ஆக மொத்தத்தில பரதேசிக்கு ஒரு விருதும் உண்மையாய் இல்லையாம்!!

### கார்த்தி-ஹரி அடிதடி !



‘பருத்தி வீரன்’ படத்திலிருந்து ‘அலெக்ஸ் பாண்டியன்’ வரை குழந்தைகள் முதல் எல்லா தரப்பு ரசிகர்களையும் கவர்ந்த ஹீரோவாக தமிழ்சினிமாவில் தன்னை நிலை நிறுத்தியுள்ள கார்த்தி தற்போது வெங்கட்பிரபு டைரக்‌ஷனில் ‘பிரியாணி’, மற்றும் ராஜேஷ் டைரக்‌ஷனில் ‘ஆல் இன் ஆல் அழகுராஜா ஆகிய படங்களில் நடித்து வருகிறார். அவருக்கு இப்போ இன்னொரு அதிஷ்டமும் கிடைத்துள்ளது. ‘சிங்கம் - 2’ படத்தைத் தொடர்ந்து ஹரியின் படத்தில் இணைகிறார்.

இன்னும் டைட்டில் வைக்கப்படாத இந்தப் புதிய படத்தில் நடிக்கப்போகும் நடிகர், நடிகைகள் மற்றும் தொழில் நுட்ப கலைஞர்கள் தேர்வு நடைபெறுகிறது. வழமையாக சூர்யா-ஹரி கூட்டணியைத் தவிர வேறு கூட்டணி சேர்தால் படம் வெற்றி பெறுவதில்லையாமே... ? உண்மையா..?

We don’t give empty promises
We Promise. We Deliver...
Our most popular services are shown below
- Mortgages - Residential, Commercial
- Remortgage
- Business Loan
- Secured Load
- Bridging Finance
- Buy to Let
- Insurance - Building insurance
  Life insurance
  Commercial and Indemnity insurance
- Accountancy Services

SYDNEY FINANCIAL SERVICES We Promise. We Deliver
Mob:07984929159
Sydney Finance Services
104-106 Cranbrook Road,
Ilford, Essex,
IG1 4LZ
- Shan Shiva ACMA/MBA/CeMAP
- Sanjey CeFA
- Thaya ACA
Tel: 0208 636 1634
Fax: 0845 805 7374
Email: info@sydneyfinance.co.uk
Web: www.sydneyfinance.co.uk

www.jaybrand.co.uk
Jay Brand FOOD PRODUCTS
சிறந்த தரம் புதிய சுவை புதிய ரகம் இவை
அனைத்தும் ஒருங்குசேரப் பெற்றவையே
Jay Brand தயாரிப்புக்கள்....
அனைவருக்கும் எமது சித்திரைப்
புதுவருட நல்வாழ்த்துக்கள்...
இன்றே வாங்கிடுங்கள் நியாயமான
விலையில் நிறைந்த தரத்தில்........


100% Quality and Satisfaction
Jay Brand Pvt Ltd
Unit 9, Axiom Business Park,
Balcombe Road, Horley, Surrey, RH6 7HF, U.K.
For All Enquiries
Tel : 01293 8222 44
Fax : 01293 8222 70
sales@jaybrand.co.uk

# LycaFly
Travel the world for less

## சித்திரை புத்தாண்டு நல்வாழ்துக்கள்

## Win 2 Tickets To Colombo

**When You Buy Your Next Air ticket to Colombo with Lycafly during April 2013.**

**PLUS £20**

# FREE Lycamobile

**Top up with every Booking!**

**www.Lycafly.com**

**020 7536 6575**

(Lines open 24 Hours)

**Branch: 14 Ealing road, Wembley, HA0 4TL 020 8902 1040**

## கொழும்பு சிறப்பு தள்ளுபடி..!

SriLankan Airlines — From £ 547

ETIHAD AIRWAYS — From £ 540

JET AIRWAYS — From £ 526

TURKISH AIRLINES — From £ 572



£20 Lycamobile credit is not exchangeable, transferrable or redeemable for cash or other credit. For full terms and conditions and eligibility, please visit www.lycafly.com or call us on 02075366575.Above fares include taxes, subject to availability & conditions apply.

IATA

9624 ATOL PROTECTED

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
**Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
**சவுத்ஹோல் டிராவல்**
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

5553 ATOL PROTECTED